# இயற்கை பன்னாட்டு ஆய்விதழ்

# International Journal of Nature

(Peer-reviewed research in natural sciences)

*தொகுதி-1 (பகுதி-3)* *செப்டம்பர் / September 2025*
*Volume-1 (Issue-3)*

Published by
**Mahizh Publication**
86,Thennangudi(North), Peravurani(Taluk),
Thanjavur(Dist)-614804.
Tamil Nadu, India

ISSN
eISSN

# International Journal of Nature Editorial Office

## Office of the Editor – in – Chief

Mahizh Publication,

86,Thennangudi(North), Peravurani(Taluk),

Thanjavur(Dist)-614804, Tamil Nadu, India.

E-Mail: editor@mahizh.in

Mobile:+91-9976078016

Website: https://mahizh.in/

## Publisher

Mahizh Publication,

86,Thennangudi(North), Peravurani(Taluk),

Thanjavur(Dist)-614804, Tamil Nadu, India.

E-Mail: editor@mahizh.in

Mobile:+91-9976078016

---

The publisher of International Journal of Nature (***இயற்கை பன்னாட்டு ஆய்விதழ்***) will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Mahizh Publication . All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

இயற்கை பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Nature

# Editorial Board

## Editor in Chief



**Dr. M. Manikandan**
Editor in Chief,
International Journal of Nature,
Mahizh Publication,
86,Thennangudi(North),
Peravurani(Taluk),
Thanjavur(Dist)-614804,
Tamil Nadu,India.
editor@mahizh.in
+91-9976078016

## Managing Editor



**Dr.A.Suganya**
Managing Editor,
International Journal of Nature,
Mahizh Publication,
86,Thennangudi(North),
Peravurani(Taluk),
Thanjavur(Dist)-614804,
Tamil Nadu,India.
editor@mahizh.in

## Associate Editors




**Dr . M. Sutha**
Professor, Department of Tamil,
AlagappaUniversity
Karaikudi-630003,
Tamil Nadu, India.
sutham@alagappauniversity.ac.in



**Dr. U.Surendran**
Principal Scientist, Division of
Remote Sensing Application,
ICAR-NBSS&LUP, Nagpur-440 033.
Maharashtra, India.
u.surendran@icar.gov.in



**Dr.S.Marimuthu**
Professor,
National Pulses
ResearchCentre, Vamban,
Pudukkottai- 622 303,
Tamil Ndu, India.
marimuthus@tnau.ac.in



**Dr. S. Chidambaram**
Associate Professor,
Department of Tamil,
The Gandhigram Rural Institute
(Deemed to be University),
Dindigul-624 302, Tamil Nadu, India.
s.chidhambaram@ruraluniv.ac.in



**Dr. B. Sathiyamoorthy**
Assistant Professor and Head i/c,
Department of Tamilology,
Madurai Kamaraj University,
Madurai-625 021, Tamil Nadu, India.
amilkanikani.tamil@mkuniversity.org



**Dr. L R. Prem Kumar**
Lecturer-cum-Junior Research
Officer,
Central Institute of Indian
Languages,
Mysore–570006, Karanataka,
India.
premkumar.lr@gov.in



**Dr.Maa.Thamizhpparithi**
Assistant Professor,Department of
Journalism and Mass Communication,
Periyar University,
Salem-636 011, Tamil Nadu, India.
tparithi@periyaruniversity.ac.in



**Dr. B R.Veeramani**
Professor, Department of Languages,
Periyar Maniammai Institute of Science & Technology (PMIST),
Thanjavur-613403,Tamil Nadu,India.
veeramani@pmu.edu



**Dr. R. Parimala devi**
Assocate Professor (Agricultural Microbiology),
Agricultural Engineering College and Research Institute,TNAU,
Coimbatore-641 003.Tamil Nadu,India.
parimaladevi@tnau.ac.in



**Dr. R. Sasikumar**
Assistant Professor, Department of Physical Chemistry,
University of Madras,
Chennai-600 025, Tamil Nadu, India.
sasikumar@unom.ac.in



**Dr.R. Ramnath**
Professor,
Department of Education,
Alagappa University
Karaikudi-630003,
Tamil Nadu, India.
ramnathr@alagappauniversity.ac.in



**Dr. C. Vanitha**
Associate Professor,
Department of Seed Science and Technology,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003,
Tamil Nadu, India.
vanitha.c@tnau.ac.in



**Dr. K. Ganesamurthy**
Assistant Professor, Department of Corporate Secretaryship School of Management,
Alagappa University,
Karaikudi – 630 004,
Tamil Nadu, India.
ganesamurthyk@alagappauniversity.ac.in



**Dr. S. Neelakandan**
Associate Professor,
Department of Chemistry,
Sri Sai Ram Engineering College,
Tambaram,
Chennai-600044,Tamil Nadu,India.
neelakandan.chem@sairamit.edu.in



**Dr.S.Len inkumar**
Assistant Professor,
Department of Languages,
Periyar Maniammai Institute of Science & Technology (PMIST),
Thanjavur - 613403,
Tamil Nadu, India.
leninkumar@pmu.edu



**Dr.R.Samraja**
Assistant Professor, Department of Political Science,
Periyar Maniammai Institute of Science & Technology (PMIST),
Thanjavur-613403,
Tamil Nadu, India.
samraja@pmu.edu

## International Associate Editors




**Dr. Mohana dass A/L Ramasamy**
Associate Professor, Department of Indian Studies,
Universiti Malaya,
Kuala Lumpur-50603, Malaysia.
rmohana_dass@um.edu.my



**Dr. Sasikumar Ponnalagu**
Nanyang Technological University,
50 Nanyang Avenue, Singapore-639798.
ponnalagu_sasikumar@moe.edu.sg



**Dr. Md Sohel Rana**
Assistant Professor,
Jazan University,
Jizan-45142, Kingdom of Saudi Arabia.
mrana@jazanu.edu.sa

| | Contents | Pages |
|---|---|---|
| 1. | **The Culture of the Pangam poets as described in the Purananuru**<br>*Antha Shofia Margreat S* | 1-19 |
| 2. | **Tamilar Culture in Sangam Literature**<br>*Selvarani D* | 20-38 |
| 3. | **Social and cultural structure of the peoples of the Sangam period**<br>*Meenathchi S* | 39-60 |
| 4. | **History of the Pandyan kings as known through the seppads**<br>*Muthukrishnan D, Kumaran K* | 61-70 |
| 5. | **Hospitality in Sangam Literature**<br>*Vigneshkumar B* | 71-81 |
| 6. | **Animal sacrifices given to Temples by ancient Tamils**<br>*Kala M, Thamaraikannan R* | 82-90 |

# **Greetings**

Congratulations to the scholars who have submitted their works for publication in the International Journal of Nature

-Editorial Board

# புறநானூறு கூறும் சங்கப் புலவர் பண்பாடு
# *THE CULTURE OF THE SANGAM POETS AS DESCRIBED IN THE PURANANURU*

**முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்**
*உதவிப்பேராசிரியர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர்-641029*
*மின்னஞ்சல்: asophiamargaret@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்கப்புலவர் பெருமக்கள் உயரிய மக்கட் பண்புகள் நிறைந்த ஒழுக்க வாழ்வினராவர்; பரந்த மனப்பான்மையர்; தன்மானத்தை உயிரெனமதித்தவர்; தொண்டுள்ளம் சான்ற தூயர் ; செய்ந்நன்றி போற்றிய செம்மையாளர்; பொறாமையற்ற புனிதப் பண்பினர்; நட்பின் பெருமையை நிலைநாட்டிய நல்லோர்; வறுமையிற் செம்மையைப் போற்றியோர்; அஞ்சாமை நிறைந்த அறிஞர்; ஆளுவோர்க்கு அறமுரைத்த அமைச்சர். புறநானூற்றின் துணை கொண்டு அவர்களின் சிறப்புக்களை நன்கறியலாம்.*

**திறவுச் சொற்கள்**
**தமிழ், இலக்கியம், சங்க இலக்கியம், புலவர், புலவர் பண்பாடு**

*Abstract*

*The Sangam poets are individuals who embody noble qualities; they possess a broad-mindedness; they regard dignity as essential; they are pure-hearted souls with a spirit of service; they are respectful and well-spoken; they are without envy and uphold sacred virtues; they are virtuous people who recognize the greatness of friendship; they value honesty in poverty; they are knowledgeable individuals filled with fearlessness; they are ministers who advise the ruling king on righteousness. One can understand their greatness through the Purananuru.*

***Keywords***
***Tamil, Literature, Sangha Literature, Poets, Poet Culture***

**பரந்த மனப்பான்மை**

*தமிழ்நாடு அன்று அரசியலால் மூன்று பெருநாடுகளாகவும் பல சிறு குறுநிலங்களாகவும் பிளவுண்டு கிடந்தது. ஆனால் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டிருந்தது. புலவர்கள் குறுகிய மனமின்றிப் பரந்த உள்ளத்தோடு மூன்று நாடுகட்கும் சென்றனர். சேர நாட்டுப் புலவர் பாண்டியனையும் சோழனையும் வாழ்த்தத் தவறவில்லை. ஏனையோரும் அப்படியே, பண்பு யாரிடமிருப்பினும் பாராட்டினர். கபிலர் பாரியின் நண்பர். அவர் சேரமான் செல்வக்கடுங்கோவைப் பாராட்டினார். பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் கொண்டிருந்த உயர் நட்பு உலகறிந்ததன்றோ? அரசியற் பூசல்களில் பெரும்பாலும் தலையிடவில்லை. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போரிட்டு இருவரும் மாண்டனர். அப்போது கழாத்தலையாரும் பரணரும் இருவருக்கும் வருந்திப் பாடியுள்ளமையைக் காணலாம் (புறம். 62,63)*

**ஒற்றுமைப்பண்பு**

*புலமைக் காய்ச்சலின்றி ஒருவர் மற்றவரை மதித்து வாழ்ந்த புலவர்கள் அன்று இருந்தனர். பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் முதிரமலைத் தலைவன் குமணனிடம் சென்று, கடையெழு வள்ளல்கள் அனைவரும் மாய்ந்தபின் அவ்வெழுவரும் தாங்கிய ஈகைச் செந்நுகத்தினை அவன் ஒருவனே தாங்கியதைக் கூறினார். அப்பொழுது*

***"திருந்து மொழி மோசி பாடிய ஆயும்" (புறம். 158)***

*என்கிறார். மோசிகீரனாரை அவர் திருந்திய மொழியாளரென மனமாரப் பாராட்டுவதைக் காணலாம். எருமை நாட்டையாண்ட இருங்கோவேளிடம் பாரி மகளிரை அழைத்துச் சென்று அவர்களை மணந்து கொள்ளுமாறு கபிலர் வேண்டியபோது அவன் இகழ்ந்தான். அப்போது கபிலர், இருங்கோவேளின் முன்னோருள் ஒருவன் கழாத்தலையாரை இகழ்ந்ததைக் கூறி, அதன் விளைவாகச் சிற்றரையம் பேரரையம் என்னும் வளஞ்சான்ற பகுதிகள் பயனற்றுப் போனதற்கு அவ்விகழ்ச்சியே காரணம் என்று எடுத்துக் கூறுகிறார்.*

***"புகழ்ந்த செய்யுள் கழாத்தலை" (புறம் 202)***

*என்று கூறுகிறார். இக்கபிலரை அக்காலப் புலவருலகம் பாராட்டியதுபோல் யாரையும் பாராட்டவில்லை. நக்கீரர் அவரை,*

***"உலகுடன் திரிதரும் பலர்புகழ்***
***நல்லிசை வாய்மொழிக் கபிலன்" (அகம்.78)***

*என்று பாராட்டுவார். இங்ஙனமே பெருங்குன்றூர் கிழாரும். "வயங்குசெந் நாவின் உவலைக்கூராக் கவலையி னெஞ்சின் நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" என்றார்.(பதிற்.85) பொருந்தில் இளங்கீரனார் என்பவர்*

***"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்***
***வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"(புறம்.58)***

*என்றார். மாறோகத்து நப்பசலையாரும்*

***"பொய்யா நாவிற் கபிலன்***
***பாடிய மையணி நெடுவரை"(புறம்.174)***

*எனக் காரியின் மலையைப் புகழ்வார். மேலும் அவரே,*

***"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்***
***புலனழுக் கற்ற அந்த ணாளன்***
***இரந்துசெல் மாக்கட்கு இனிஇடனின்றிப்***
***பரந்திசை நிற்கப் பாடினன்"(புறம்126:10-13)***

*என்றார். அதியமான் கோவலூரை வென்றபோது அவனைப் பாராட்டும் போது,*

***"அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்***
***பரணன் பாடினன் மற்கொல், மற்றுநீ***
***முரண்மிகு கோவலூர் நூறிநின்***
***அரண்அடு திகிரி ஏந்திய தோளே"(புறம்409:11-14)***

*என்று பாராட்டியுள்ளார்.*

***தன்மானவுணர்வு***

*புலவர்களில் சிலரே பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். பெரும்பாலோர் தத்தமக்கு விருப்பமான தொழில்களைச் செய்து வாழ்வு*



MAHIZH PATHIPAGAM

நடாத்தினர். மருத்துவன் தாமோதரனார். பண்டவாணிகள் இளந்தத்தனார், ஓலைக்கடையத்தனார், வடமவண்ணக்கனார், கூலவாணிகன் சாத்தனார், பெருத்தச்சனார், என்னும் புலவர்கள் பெயர்கள் இதற்கு அரண்செய்யும். பரிசில் வாழ்க்கை மேற்கொண்டோரும், தகுதிக்குக் குறைவாக நல்கிய போதும், முகம்மாறி அளித்தபோதும் அப்பொருளைத் துச்சமென மதித்து மறுத்ததோடு அத்தகையோர்க்குப் பாடம் கற்பித்து மீண்டனர். இத்தகு தன்மானவுணர்வு மிக்க புலவர் களில் பெருஞ்சித்திரனாரும் ஔவையாரும் குறிப்பிடத்தக்கோராவர். வெளிமானென்னும் வள்ளலை நாடிப் பரிசில் பெறச் சென்றார் பெருஞ்சித்திரனார். ஆனால் அட்ட குழிசி அழற் பயந்தாங்கு அவர்க்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அவன் துஞ்சினான். விரிந்த உளமில்லா இளவெளிமான் தகுதியறியாது சிறிது பொருள் கொடுத்தபோது புலவர்க்குத் தன்மானவுணர்வு கிளர்ந்தெழுந்தது. அப்போது அவர் பாடியது வருமாறு,

***"எழுவினி நெஞ்சம் செல்கம் யாரோ***
***பருகு வன்ன வேட்கை யில்வழி அருகிற்***
***கண்டும் அறியார் போல அகனக வாரா***
***முகனழி பரிசில் தாளிலாளர் வேளாரல்லர்***
***வருகெனல் வேண்டும் வரிசை யோர்க்கே***
***பெரிதே உலகம் பேணுநர் பலரே மீளி***
***முன்பின் ஆளி போல உள்ளம் உள்ளவிந்***
***தடங்காது வெள்ளென நோவா தோன்வயின்***
***திரங்கி வாயா வன்கனிக்கு உலமரு வோரே!"(புறம்-207)***

இங்ஙனம் மீண்ட வருந்தி புலவர் குமண வள்ளலைப்பாடி யானையைப் பரிசிலாகப் பெற்றார். தம் வரவை எதிர்ப்பார்த்துக் கிடக்கும் மனையாட்டியையும் குழந்தைகளையும் கூடக் கருதாது இளவெளிமான் ஊர்க்குச் சென்று, அவன் காவல் மரத்தில் அதனைப் பிணித்தார். இளவெளிமானின் சிறுமையையும் தம் பெருமையையும் எடுத்துக்காட்டி பின் வரும் செய்யுளைப் பாடியுள்ளமை சிறப்புபாக உள்ளது.

***"இரவலர் புரவலை நீயும் அல்லை***
***புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்***
***இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு***
***ஈவோ ருண்மையும் காணினி நின்னூர்க்***

***கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த***
***நெடுநல் யானையெம் பரிசில் கடுமான்***
***தோன்றல் செல்வல் யானே"(புறம்.162)***

*அதியமான் நெடுமானஞ்சி பெரு வள்ளலாயினும் பெருஞ் சித்திரனார் அவனைக் காணச்சென்ற ஞான்று யாது காரணத் தாலோ தன் பணியாளர் வாயிலாகப் பொருள் கொடுத் தனுப்பினான். புலவர்க்கு அது சிறுமைச் செயலாகத் தோன்றிற்று. காணாது ஈத்த அப்பொருளை ஏலாது அவர் பாடியதாவது:-*

***"குன்றும் மலையும் பலபின் னொழிய***
***வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென***
***நின்ற என்னயந் தருளி யீதுகொண்டு ஈங்ஙனம்***
***செல்க தானென வென்னை யாங்கறிந்தனனோ***
***தாங்கரும் காவலன் காணாது ஈத்தவிப்***
***பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலன்***
***அல்லேன் பேணித் தினையனைத் தாயினும்***
***இனிதவர் துணையளவறிந்து நல்கினர் விடினே"(புறம்.208)***

*இதே அதியமான் தான் ஔவை மூதாட்டிக்கு அமிழ் தினிய நெல்லிக்கனியீந்தவன். ஆனால் அவ்விருவர்க்கும் இடையே நட்பு முதலில் முரண்பாட்டில் உருவானதே. அவன் பரிசில் நீட்டித்திருந்தான். தாம் சோறொன்றே கருதியிருப்பதாக மன்னன் மதித்தான் போலும் என்று எண்ணிய புலவர் அவனைப்பார்த்துப் பாடியது வருமாறு:*

***"கடுமான் தோன்றல் நெடுமா னஞ்சி***
***தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்***
***அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென***
***வறுந்தலை யுலகமு மன்றே யதனால்***
***காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை***
***மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்***
***மழுவுடைக் காட்டகத்***
***தற்றே எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"(புறம்:206)***

பெருமிதவுணர்வு வெளிப்படுதல் வல்வில் ஓரியை வன்பரணர் பாடிய பாடலொன்றில் அவருடைய பெருமிதவுணர்வு பீறிட்டெழுதலைக் காணலாம். ஈயென இரத்தல் இழிந்தது தானெனினும் வைத்துக்கொண்டு மறுத்தல் அதனினும் இழிவென அறிவுறுத்தியுள்ளார்.

***"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்***
***ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று***
***கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்***
***கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று***
***தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்***
***உண்ணா ராகுப நீர்வேட் டோரே***
***ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்***
***சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்***
***உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்"(புறம்:204)***

கடியநெடுவேட்டுவனைப் பாடும் பெருந்தலைச் சாத்தனார்,

***"முற்றிய திருவின் மூவ ராயினும்***
***பெட்பின் நீதல் யாம்வேண் டலமே"(புறம்:205)***

என்றார். தகுதியில்லாதவரைப் பாடுவதும் அவர் தரும் பரிசிலை ஏற்பதும் அன்னோர்க்கு இயல்பன்றாம். கண்டீரக் கோப்பெரு நள்ளியைப் பாடும் வன்பரணர், பீடில்லாத மன்ன ருடைய பாராட்டினை விரும்பி அவர் செய்யாதனவற்றைக் கூறிப் பாரட்டுதல் தம் சிறு செந்நாவிற்கு இயல்பன்று என்றார்.

***"பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச் செய்யா***
***கூறிக் கிளத்தல் எய்யா***
***தாகின்றெம் சிறுசெந் நாவே"(புறம்.148)***

அவ்வாறே மோசிகீரனார் என்னும் புலவர் பெருமான்

***"பெரிய வோதினும் சிறிய வுணராப்***
***பீடின்று பெருகிய திருவிற் பாடின்***
***மன்னரைப் பாடன்மார் எமரே'(புறம்.375)***

*என்றார். இங்ஙனமே பெண் கொலை புரிந்த நன்னனின் மரபில் வந்தவரைப் பாடமறுத்தது புலவருலகம் இளங்கண்டீரக்கோவிடம் தாமப்பல்கண்ணனார் அவனைத் தான் தழுவாமைக்குக் காரணம் கூறுகையில்,*

***"நன்னன் மருக னன்றியும் நீயும்***
***முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்***
***பாடுநர்க் கடைத்த கதவின் ஆடுமழை***
***அணங்குசால் அடுக்கம் மொழியும்நும்***
***மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே"(புறம்:151)***

*என்று மொழிதல் கண்டு விளங்கத்தக்கது.*

**தொண்டும் கடமையுணர்வும்**

*எங்கெல்லாம் துன்பமுள்ளதோ அங்கெல்லாம் சான்றோர் தம் கடமையாற்றத் தயங்கார். புலவர்கட்கு மன்னர்கள் பரிசிலளித்தனர் என்பதற்காக அவர்கள் தவறு செய்தபோது பார்த்துக் கொண்டு இருந்தனரல்லர். அருகிற் சென்று இடித்துரைத்துத் திருத்தினர் . சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வள்ளல் காரியின் குழந்தைகளைப் பகைக் காரணமாக யானைக் காலிலிட்டுக் கொல்லச் சூழ்ந்தபோது கோவூர்கிழார் ஓடோடிச் சென்று அவன் முன்னோர் இயல்பை எடுத்துக்கூறி அத்தீச் செயலைத் தடுத்தார்.*

***"நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்***
***இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை,***
***இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி,***
***தமது பகுத்து உண்ணும் தண் நிழல் வாழ்நர்;***
***களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த***
***புன் தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி,***
***விருந்தின் புன்கண் நோவுடையர்;***
***கேட்டனைஆயின், நீ வேட்டது செய்ம்மே!"(புறம்:46)***

*என்று கூறி அவன் உள்ளத்தில் அருளுணர்வினைத் தோற்று வித்து உய்யக்கொண்டார். இங்ஙனமே இளந்தத்தன் என்னும் புலவனை ஒற்றன் என்று ஐயுற்றுக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி. அப்போது இதே*

புலவர் உண்மையை எடுத்துச் சொல்லி அவனையும் காப்பாற்றினார்.

***“வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,***
***'நெடிய' என்னாது சுரம் பல கடந்து***
***வடியா நாவின் வல்லாங்குப் பாடி,***
***பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,***
***ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,***
***வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை***
***பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே; திறப்பட***
***நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,***
***ஆங்கு இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்***
***மண் ஆள் செல்வம் எய்திய***
***நும் ஓரன்ன செம்மலும் உடைத்தே.”(புறம்:47)***

எனப் புலவர் இயல்பை எடுத்துக் கூறுதல் நோக்குக. மன்னர்கள் தவறாக நடந்த போதும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிய போதும், அறநெறிகளை எடுத்துக்கூறி அரசியலில் சிறந்து விளங்க உதவிய அறிஞர்கள் சங்கப் புலவர்கள் என்பதற்கு எத்துணையோ சான்றுகள் உண்டு. அவற்றுட் சில மட்டும் ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன் அதிகாரிகளின் சொல்லைக் கேட்டுக் குடிமக்களை வருத்தி வரி பெற்றான். அது கண்ட புலவர் வருந்தினார். அவனுக்கு அவர் கூறும் அறிவுரை எக்காலத்து அரசுக்கும் ஏற்ற பாடமாக அமையும்.

***”காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,***
***மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;***
***நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,***
***வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;***
***அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,***
***கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;***
***மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்***
***வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,***
***பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,***
***யானை புக்க புலம் போல,***

***தானும் உண்ணான், உலகமும் கெடுமே."( புறம்:184)***

*மக்களுடைய நிலையறிந்து அன்பு கெடாதவாறு வரி வாங்க வேண்டு மென்பதை நயம்படவுரைத்த புலவர் பாராட்டுக்குரியவர்.*

*சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னிக்கு ஊன்பொதி பசுங்குடையார், பிறர் பழியையே எப்போதும் கூறும் சிறுமதியாளரிடம் எச்சரிக்கையாக இருக்கக் கூறியதோடு தவறு கண்டபோது கண்ணோட்டமின்றித் தண்டனை கொடுக்க வேண்டும் என்பதனை வற்புறுத்தியுள்ளார்.*

***"வழிபடுவோரை வல் அறிதீயே;***
***பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;***
***நீ மெய் கண்ட தீமை காணின்;***
***ஒப்ப நாடி, அத் தக ஒறுத்தி" (புறம்:10)***

*கருவூரை வென்று மேம்பட்டவன் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை. நரிவெரூஉத்தலையார் சேரமான் ஒள்வாள் என்னும் சான்றோர் அவனுக்கு நாட்டைக் காக்க வேண்டிய நெறியை எடுத்துக் கூறுகிறார். அருளும் அன்பும் கொண்டு குடிமக்களைக் காக்கத் தூண்டுகிறார். நாட்டைக் குழவி கொள்பவர் போல எச்சரிக்கையோடு காக்க வேண்டுமென்கிறார்.*

***"அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,***
***குழவி கொள் பவரின், ஓம்புமதி!***
***அளிதோ தானே; அது பெறல்அருங் குரைத்தே" .(புறம்-5)***

*குடபுலவியனாரும், வெள்ளைக்குடி நாகனாரும் மன்னர்க்கு அறிவுரை கூறிக் கடமையை நினைவூட்டிய பெருமைக்குரியவராவர்.பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார், உணவின் இன்றியமையாமையையும் அதனை விளைவிக்க நீர்நிலைகளைப் பெருக்கவேண்டிய கடமையையும் பின்வருமாறு வற்புறுத்தினார்.*

***"செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,***

***ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,***
***ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த***
***நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்***
***தகுதி கேள், இனி, மிகுதியாள!***
***நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்;***
***உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;***
***நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு***
***உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;***
***வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்***
***வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்***
***இறைவன் தாட்குஉத வாதே; அதனால்,***
***அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே***
***நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்***
***தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;***
***தள்ளா தோர்இவண் தள்ளா தோரே" (புறம்:18)***

*வெள்ளைக்குடி நாகனார் குளமுற்றத்துத் துஞ்சிய என்னும் கிள்ளிவளவனுக்கு புலவர் அரசியல் அறத்தினை எடுத்துக்கூறிப் பழஞ் செய்க்கடன் வீடு கொண்டார். அப்போது அவர் கூறிய செய்திகள் என்றும் நிலைபெறும் நீர்மையனவாகும்.*

***"ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்டுமூ***
***மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்,***
***கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை***
***வெயில்மறைக் கொண்டன்றோ? அன்றே; வருந்திய***
***குடிமறைப் பதுவே; கூர்வேல் வளவ" (புறம்: 35)***

*என அறிவுறுத்திய புலவர், மன்னன் பகைவர்பால் பெறும் வெற்றிக்கு உழவர்களின் ஏர்முனை வெற்றியே அடிப்படை என்று கூறுகிறார்.*

***"பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை***
***ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;***
***மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,***
***இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,***

***காவலர்ப் பழிக்கும், இக் கண்ணகன் ஞாலம்;
அதுநற்கு அறிந்தனை யாயின், நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்,
குடிபுறம் தருகுவை யாயின், நின்
அடிபுறம் தருகுவர், அடங்கா தேரே" (புறம்:35)***

*உழவர்களைப் போற்ற வேண்டிய கடமையினை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறியுள்ளார் பார்மின்! சோழன் நலங்கிள்ளிக்கு முதுகண்ணன் சாத்தனார் பல செய்திகளைக் கூறிவிட்டு,*

***"அதனால்,அறனும் பொருளும் இன்பமும்
மூன்றும் ஆற்றும் பெருமநின் செல்வம்" (புறம்:416)***

*என உறுதிப்பொருள்களை வற்புறுத்துகிறார். மேலும்*

***"கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா மரபின் மடிவிலை யாகி
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லையென் பார்க்கு இனனா கிலியர்" (புறம்:29)***

*என நீதியை எடுத்துக் கூறிச் சிறியோர் கூட்டுறவை நீக்கக் கூறுகிறார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாற னுக்கு மருதன் இளநாகனார் அறநெறியே அரசின் வெற்றிக்கு அடிப்படையென்பதனை அழகுற எடுத்துக் கூறினார். நால்வகைப்படையும் உடையார் எனினும் அறமே இறுதியில் வெற்றிக்கு அடிப்படையாகும் என்பதனை,*

***"கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும் நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மற என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம்:55)***

*'அரசின் கொற்றம் அறநெறி முதற்று. அதனாற் கோல் கோடாது, குணங் கொல்லாது, ஆண்மையும் சாயலும் வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற, நீ எக்கர் மணலினும் பல காலம் வாழ்க' என, அறநெறி அறிவுறுத்தி*

*வாழ்த்தலின், செவியறிவுறுஉ ஆயிற்று என எடுத்துக் கூறுதல் காண்க.*

*இங்ஙனம் ஆளுவோர் ஆட்சி செம்மையுற நிகழ அறிவுரை புகன்ற சான்றோர் பெருமக்கள் போரில் வென்றவர்களைப் பாராட்டினர் எனினும் முறையற்ற போரை விலக்குவதற்குப் பெரிதும் விழைந்தனர். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மேல் படைகொண்டு சென்றபோது புல்லாற்றூர் எயிற்றியனார் என்பார் தடுத்து நிறுத்திஅவனை வடக்கிருக்கத் தூண்டினார் .*

***"மண்டு அமர் அட்ட மதனுடை நோன் தாள்,***
***வெண்குடை விளக்கும், விறல் கெழு வேந்தே!***
***பொங்கு நீர் உடுத்த இம் மலர் தலை உலகத்து,***
***நின்தலை வந்த இருவரை நினைப்பின்,***
***தொன்று உறை துப்பின் நின் பகைஞரும் அல்லர்,***
***…………………………………………………….***
***அதனால், ஒழிகதில் அத்தை, நின் மறனே! வல் விரைந்து***
***எழுமதி; வாழ்க, நின் உள்ளம்! அழிந்தோர்க்கு***
***ஏமம் ஆகும் நின் தாள் நிழல் மயங்காது***
***செய்தல் வேண்டுமால், நன்றே வானோர்***
***அரும் பெறல் உலகத்து ஆன்றவர்***
***விதும்புறு விருப்பொடு விருந்து எதிர் கொளற்க" (புறம். 213)***

*கோவூர்கிழார் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் பகைத்தபொழுது இடை நின்று விலக்கினார். இருவரும் சோழரே என்றும், அவர்கள் முரண்கொண்டதுஏனைய வேந்தர்க்கு மகிழ்ச்சியூட்டுமென்றும் கூறிப் போரை விலக்க முயன்றார்,*

***"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;***
***கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்!***
***நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு***
***பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;***
***ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே;***
***இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,***
***குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்***
***நும்மோர் அன்ன வேந்தர்க்கு***
***மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே" (புறம்:45)***

*கிள்ளி வளவன் கருவூரை முற்றுகையிட்ட ஞான்று அவன் கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்தான். சோழனின் படையினர் அவன் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தும் ஓசையைக் கேட்டும் வாளாவிருந்தான். அஞ்சியொளித்த மன்னனைப் பகைத்தல் வீரமாகாது என்று சோழனுக்கு அறிவுரை வழங்கினார்.*

***"அடுநை ஆயினும், விடுநை ஆயினும்,***
***நீ அளந்து அறிதி, நின் புரைமை வார் கோல்,***
***செறி அரிச் சிலம்பின், குறுந் தொடி மகளிர்***
***பொலம் செய் கழங்கின் தெற்றி ஆடும்***
***தண் ஆன்பொருநை வெண் மணல் சிதைய,***
***கருங் கைக் கொல்லன் அரம் செய் அவ் வாய்***
***நெடுங் கை நவியம் பாய்தலின், நிலை அழிந்து,***
***வீ கமழ் நெடுஞ் சினை புலம்ப, காவுதொறும்***
***கடி மரம் தடியும் ஓசை தன் ஊர்***
***நெடு மதில் வரைப்பின் கடி மனை இயம்ப,***
***ஆங்கு இனிது இருந்த வேந்தனொடு, ஈங்கு, நின்***
***சிலைத் தார் முரசம் கறங்க,***
***மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே" (புறம்.36).***

*இங்ஙனமே நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டான். ஆவூர் வேந்தனும் கோட்டைக்குள் ஒளிந்திருந்தான். நெடுநாள் வரையில் முற்றுகை நீடிக்கவும் குழந்தைகள் பாலின்றி அழுதன; மகளிர் வறுந்தலை முடித்தனர்; யானைகள் உணவின்றி மெலிந்தன. இந்நிலைகண்ட புலவர் அம்மன்னனைக் கண்டு,*

***"அறவை யாயின் நினதெனத் திறத்தல்***
***மறவை யாயின் போரோடு திறத்தல்***
***அறவையும் மறவையும் அல்லையாகத்***
***திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்***
***நீண்மதில் ஒருசிறை யொடுங்குதல்***
***நாணுத் தகவுடைத்திது காணுங் காலே" (புறம்:44)***

*என்று அறிவுறுத்தியுள்ளார். இதுமட்டுமின்றி ஒருவரோடு ஒருவர் முரண்பாடு கொண்ட மூவேந்தர்களும் ஒன்றுபட்டிருப்பதைப் புலவர்*

உலகம் பெரிதும் அவாவி நின்றது. என்றோ ஒருநாள் அங்ஙனம் அவர்கள் கூடியிருந்த காட்சியைக் காணும்போது இறும்பூது கொண்டு ஏத்தினர். குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமா வளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருப்பக் கண்ட காரிக்கண்ணனார்,

***"ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்***
***உடன் நிலை திரியீர்ஆயின், இமிழ்திரைப்***
***பௌவம் உடுத்த இப் பயம் கெழு மா நிலம்***
***கையகப்படுவது பொய் ஆகாதே;***
***அதனால், நல்ல போலவும், நயவ போலவும்,***
***தொல்லோர் சென்ற நெறிய போலவும்,***
***காதல் நெஞ்சின் நும் இடை புகற்கு அலமரும்***
***ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது,***
***இன்றே போல்க, நும் புணர்ச்சி; வென்று வென்று***
***அடு களத்து உயர்க, நும் வேலே"(புறம்: 58)***

*என்று வாழ்த்தினார்.*

***"நாகத்து அன்ன பாகு ஆர் மண்டிலம்***
***தமவே ஆயினும் தம்மொடு செல்லா;***
***வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்;***
***ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங் கை நிறையப்***
***பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்து,***
***பாசிழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய***
***நார் அரி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,***
***இரவலர்க்கு அருங் கலம் அருகாது வீசி,***
***வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;***
***வாழச் செய்த நல்வினை அல்லது***
***ஆழுங் காலைப் புணை பிறிது இல்லை;***
***ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்***
***முத்தீப் புரையக் காண்தக இருந்த***
***கொற்ற வெண் குடைக் கொடித் தேர் வேந்திர்!***
***யான் அறி அளவையோ இதுவே: வானத்து***
***வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்***
***பரந்து இயங்கு மா மழை உறையினும்,***
***உயர்ந்து மேந் தோன்றிப் பொலிக, நும் நாளே!"(புறம்:367)***

*இங்ஙனமே மூவேந்தரும் ஒருங்கிருந்த போது ஔவைப் பிராட்டியார் மகிழ்ந்து பாராட்டினார். இங்ஙனம் ஆளுவோர்க்கு அறிவுரை கூறிய செந்நெறிச் செம்மல்கள் பொதுவாக உலக மக்கள் பின்பற்ற வேண்டிய எண்ணற்ற அறிவுரைகளை வாரி வழங்கியுள்ளனர். ஈகையை யும் மக்கட்பண்புகளையும் மாட்சியை எடுத்துக் கூறினர். வற்புறுத்தினர் .அறத்தின்*

***"தெண்கடல் வளாகம் பொதுமையின்றி***
***வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்***
***நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்***
***கடுமாப் பார்க்கும் கல்லா வொருவற்கும்***
***உண்பது நாழி உடுப்பவை இரண்டே***
***பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே***
***செல்வத்துப் பயனே ஈதல்***
***துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறம்:189)***

*என நக்கீரர் அறிவுறுத்தியுள்ளார். கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்னும் அரசக் கவிஞன் இவ்வுலகம் அழியாது நிலைபெற்றிருப்பதற்குத் தமக்கென வாழாராய்ப் பிறர்க்கென வாழுவோர் தாம் காரணம் என்று கூறுவானாய்ச், சிறந்த மக்கட் பண்புகளை எடுத்துக் கூறுகிறான்.*

***"உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்***
***அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்***
***தமியர் உண்டலு மிலரே முனிவிலர்***
***துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்***
***புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்***
***உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்***
***அன்ன மாட்சி யனைய ராகித்***
***தமக்கென முயலா நோன்றாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மையானே"( புறம்.182)***

*ஔவையார் நிலம் பெருமை பெறுவதற்கு அதன்கண் வாழும் மாந்தரேபொறுப்பாவர்என்பதனை,*

***“நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவ ராடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே"(புறம்:187)***

என்ற பாட்டால் வற்புறுத்துகின்றார். சோழன் நல்லுருத்திரன் என்னும் அரசப் புலவன் மக்கள் உயர்ந்த நோக்கமுடையவராய் வாழவேண்டும் என்பதனைப் பின்வரும் பாட்டில் வற்புறுத்தியுள்ளான்.

***“விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்***
***வல்சி கொண்டு, அளை மல்க வைக்கும்***
***எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்***
***வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு***
***இயைந்த கேண்மை இல்லாகியரோ!***
***கடுங் கண் கேழல் இடம் பட வீழ்ந்தென,***
***அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,***
***பெரு மலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,***
***இருங் களிற்று ஒருத்தல் நல் வலம் படுக்கும்***
***புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து***
***உரனுடையாளர் கேண்மையொடு***
***இயைந்த வைகல் உள ஆகியரோ!”(புறம்:190).***

*பிசிராந்தையார் என்னும் சான்றோர் யாண்டுகள் பல வாகியும் நரை தோன்றாமைக்குத் தன் மனையும்,பிள்ளைகளும் அறிவுடையவராய் இருந்ததும், இளையர் குறிப் பறிந்து ஏவல் செய்ததும்,மன்னன் அறம் காக்கும் இயல்பினனானதும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்மூரில் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் வாழ்ந்ததும் காரணம் என்று கூறிச் சமுதாய நல்வாழ்வுக்குரிய பண்பாட்டை வற்புறுத்தியுள்ளார்,(புறம்:191). கணியன் பூங்குன்றனார் பாடிய பாடல் உலகம் வியக்கும் உயர்வுடைய தன்றோ ! உலகம் முழுவதையும் ஒரு குடும்ப மாகக் காண்கிறார் புலவர். தீமையும் நன்மையும் பிறரால் அன்றித் தம்மால் வருவனவென்றும், துன்புறுதலும் அது தீர்தலும் அத்தகையதே என்றும், வாழ்தல் இனிதென்று மகிழ்தலும், முனிந்தபோது இன்னாதெனக் கலங்குதலும் அறிவுடையார் இயல்பன்று என்றும் நீர் வழிச் செல்லும் புணை போல் உயிர்கள் ஊழ் வழிச் செல்லும் இயல்பின என்றும்,*

பெரியோரை உயர்த்திப் பேசுதலும், சிறியோரை இகழ்தலும் அறியாமை என்றும்(புறம்:192). வற்புறுத்தினார்.

நரிவெரூஉத் தலையார் என்னும் அறிஞர் உலகுக்கு யாதொரு பயனுமின்றி மூத்தவர்களை விளித்து, "நீங்கள் இது வரையில் பயனின்றி வாழ்ந்தது போதும். இனியேனும் விழித்துக் கொள்ளுங்கள். நல்லது செய்ய இயலவில்லை யெனினும் தீயவையாவது செய்யாது ஒழிமின். அதுவே எல்லார்க்கும் உவகையாகும் ; நல்லாற்றுப் படூஉம் நெறியும் அதுவே. இல்லையேல் கூற்றுவன் உம்மை நெருங்கும்போது கழிவிரக்கம் கொள்வீர்" (புறம் .195) என்று எச்சரிக்கின்றார். இன்னும் அகப்பாடல்கள் வழியே இல்லற வாழ்க்கை மேம்படுதற்குரிய இனிய பண்புகளை எடுத்துக் கூறித் தமிழரும் உலகமும் உறுதி பெற உழைத்தனர்.

பல்துறையறிவும், பழுத்த அனுபவமும் கொண்ட இச்சான்றோர்களிடமிருந்த இன்னொரு சீரிய பண்பு அவர்களின் நட்புணர்ச்சியும் நன்றியுணர்ச்சியுமாகும். அதியமானும் ஔவையாரும், பாரியும் கபிலரும், கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும், அங்ஙனமே அச்சோழனும் பொத்தியாரும் கொண்டிருந்த நட்புரிமை உலகம் வியக்கும் பான்மைத்தாகும். பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் கொண்ட நட்பு,

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்"(குறள்:784).**

என்ற நாயனரர் வாக்குக்குப் பொருந்துவதாகும். கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கச் செல்கையில் அவர் வருவார் எனக் கூறியதை யாரும் நம்பவில்லை. எனவே அவர் வந்த போது பொத்தியாருக்கு வியப்பு மேலிட்டது.

**“வருவ னென்ற கோனது பெருமையும்**
**அதுபழு தின்றி வந்தவ னறிவும்.**
**வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே**
**அதனால்,**
**தன்கோ லியங்காத தேயத் துறையும்**
**சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை**

***அன்னோனை யிழந்தவிவ் வுலகம்***
***என்னா வதுகொ லளியது தானே”(புறம்:217)***

*என்று பாடினார்*

***"கேட்டினு முண்டோர் உறுதி கிளைஞரை***
***நீட்டி யளப்பதோர் கோல்"(குறள்:796)***

*என்ற குறட்கு ஏற்ப அவர் வருவார் என்ற நம்பிக்கை கொண்ட சோழன்,*

***“தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்***
***பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே;***
***செல்வக் காலை நிற்பினும்,***
***அல்லற் காலை நில்லலன் மன்னே” (புறம்:215)***

*என்றான். அவன் பிசிராந்தையாரின் நட்பைப் பற்றிப் புகழ்ந்த இன்னொரு செய்யுளும் (புறம். 216) படித்தின்புறத்தக்கதாகும். பொத்தியார் என்னும் புலவரும் சோழனிடம் நட்பு கொண்டொழுகியவர். அவரும் சோழனோடு வடக்கிருக்க முன் வந்தபோது சோழன் "புதல்வன் பிறந்த பின் வா" என்றான். சோழன் இல்லாத உறையூர் மன்றத்தினைக் கண்டு நெஞ்சம் குமுறிய புலவர்,*

***“பெருஞ் சோறு பயந்து, பல் யாண்டு புரந்த***
***பெருங் களிறு இழந்த பைதல் பாகன்***
***அது சேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை,***
***வெளில் பாழாகக் கண்டு கலுழ்ந்தாங்கு,***
***கலங்கினென் அல்லனோ, யானே பொலந் தார்த்***
***தேர் வண் கிள்ளி போகிய***
***பேரிசை மூதூர் மன்றம் கண்டே”(புறம்:220)***

*என்று பாடினார். அவனுடைய நடுகல்லை நண்ணி நின்று.*

***"புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென***
***என்னிவ ணொழித்த அன்பி லாள!***
***எண்ணா திருக்குவை யல்லை;***
***என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே"(புறம்:222)***

என்றார். வளமதுவுண்டு வளனில் காலை நறும்பூத் துறக்கும் வண்டு போன்றோர் பலருளர். பாவலர் வேந்தர் கபிலரோ தன் நண்பனிடம் மாறாப் பேரன்பு பூண்டவர். பாரி மாய்ந்த பின்னர் அவன் பெண்களை இருங்கோவேள், இருவிச்சிக் கோன் என்னும் இருவரிடமும் அழைத்துச் சென்று மணக்குமாறு வேண்டி அவர்கள் மறுக்கவே அவர்களைப் பார்ப்பார்ப் படுத்துத் தீப்பாய்ந்து உயிர்விட்ட வரலாறு உலகறிந்ததாகும் *(புறம்:200, 201, 239).*

**முடிவுரை**

பண்டைத் தமிழ்ச் சான்றோர் பண்பாட்டுக் காவலராயும், அரசியலறிஞராயும், நட்பும் நன்றியும் உடையராயும், உலகுக்கு உயரிய குறிக்கோள்களைச் சுட்டிக்காட்டும் அறவோராகவும், வறுமையிற் பெருமித வாழ்வுடையோராகவும் இருந்துள்ளனர்.

**துணைநூற் பட்டியல் :**


1. *தமிழர் சால்பு, வித்தியானந்தன்.சு, பாரி புத்தக நிலையம்.1971.*
2. *தமிழர் வாழ்வும் பண்பாடும், தமிழறிஞர் சாமி.சிதம்பரனார், சாரதா பதிப்பகம்.2001*
3. *சங்க இலக்கியத்தில் கற்பனை, டாக்டர்.இரா.மாயண்டி, பாரி நிலையம், சென்னை.*
4. *இலக்கியச்சோலையிலே, டாக்டர்.சோ.ந.கந்தசாமி,வீரசோழன் பதிப்பகம், தஞ்சாவூர்.*
5. *டாக்டர்.சு.பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*


MAHIZH PATHIPAGAM

# சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு

## *TAMILAR CULTURE IN SANGAM LITERATURE*

*து.செல்வராணி,*
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,*
*ரோஸ்மேரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*திருநெல்வேலி – 7 தமிழ்நாடு, இந்தியா*
*மின்னஞ்சல்: selvajohn1980@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியம் என்பது வாழ்விலிருந்து எழுவதும் வாழ்க்கைக்கானதும் ஆகும். எனவே இலக்கியங்களின் வழியாகத்தான் தமிழ்ச் சமூகத்தினுடைய வாழ்வியல் பண்பாட்டு வரபுகளையும், இன்ன பிற வரலாற்றையும் சமூகக் கட்டமைப்பையும் கூடச் செய்ய முடியும் . இதனால்தான் இலக்கியம் என்பது சமுதாய உருவாக்கத்தின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது. இலக்கிய உருவாக்கம் இல்லாத சமுதாய உருவாக்கம் முழுமையானதாகக் கருதப்படுவதில்லை. இத்தகைய இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் எல்லாக் காலக் கட்டங்களிலும் தொடர்ந்து தனக்கான பங்களிப்பைச் செய்து கொண்டே இருக்கின்றன. இதனால்தான் தமிழ்ச் சமூகத்தினுடைய இலக்கிய வரலாற்றையும் ஓரளவாவது மீட்டெடுக்க முடிந்துள்ளது. சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தினுடைய எல்லாக் கூறுகளையும் முழுமையாகப் பதிவு செய்திருக்கின்றது என்று அறுதியிட முடியாவிட்டாலும் கூட இவற்றில் சமூகம் சார்ந்த அத்துணை விசயங்களும் பிரதிபலிக்கவே செய்கின்றன. பழந்தமிழர் வாழ்வு நிலம் சார்ந்து அமைந்தது. ஐந்நில வாழ்வே ஐந்திணைகளாக மலர்ந்து மணம் பரப்பியது. இத்தகைய திணை சார்ந்த வாழ்வியலைத்தான். சங்க இலக்கியம் கட்டமைத்துள்ளது. வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிவாகும். மக்கள் வாழ்வியலின் இன்றியமையா கூறுகளான உறைவிடம் உணவு, உடை, தொழில், விழாக்கள், தெய்வம், மொழி, அரசியலமைப்பு, விருந்தோம்பல், ஒற்றுமை உணர்வு போன்ற பண்பாட்டுக் கூறுகள் அமைகின்றன. சங்கத்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளுள் சிலவற்றை மையப்படுத்தியதாக இவ்வாய்வுரை அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்**

**இலக்கியம், தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு**

***Abstract***

*Literature arises from life and is essential for life itself. Thus, it is through literature that we can intertwine the cultural values and historical narratives of the Tamil community and its social structures. For this reason, literature is considered a component of societal formation. A society without literary creation is not regarded as complete. Such literatures continuously contribute to all phases of Tamil society. This has allowed for a partial rescue of the literary history of the Tamil community. Although one cannot definitively state that classical literature has recorded all aspects of Tamil society, it indeed reflects significant societal elements. The ancient Tamils' way of life was deeply connected to the land. The way of life across the five regions flourished, spreading fragrance. It is this region-based way of life that classical literature has shaped. Historians conclude that the lifestyle and culture of the people are shaped by the nature of the land they inhabit. Essential cultural aspects of people's livelihoods include shelter, food, clothing, employment, festivals, deities, language, political systems, hospitality, and a sense of unity. This discourse centers around some of the cultural elements of classical Tamils.*

***Keywords***

***Literature, Tamil Literature, Sangham Literature, Tamil Culture, Tamil History***

MAHIZH PATHIPAGAM

**சங்ககாலம்**

சங்கம் என்பது அறிஞர்கள் பலர் கூடி உண்டாக்கும் அமைப்பு. தமிழ்ச் சான்றோர்கள் பழந்தமிழ் நாட்டில் சங்கம் அமைத்துத் தமிழ் மொழியை வளர்த்தனர் என்று களவியல் உரையே நமக்கு முதன்முதலில் முச்சங்கங்கள் பற்றிய தெளிவினைத் தருகின்றது.

**சங்க இலக்கியப் பனுவல்கள்**

சங்க காலத்தியப் பனுவல்களில் ஒன்றாகிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் நம் தமிழ்ச் சமூக மக்களுடைய வாழ்வியல் பண்பாட்டு மரபுசார் செயற்பாடுகளையும், அவர்களின் பழக்கவழக்கங்கள்,

நம்பிக்கைகள் சார்ந்த உள்ளத்து உணர்வுகளையும் அறிந்து கொள்ள உதவுகின்ற விதத்தில் சங்கப் பனுவல்கள் அனைத்தும் முன்வந்து நிற்கின்றன.

**பண்பாடு விளக்கம்**

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது... மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தைமுறைகளும், உருவாக்கிய வழக்கங்களும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்"[1.]

**உணவு**

நிலம் சார்ந்து தம் வாழ்வை அமைத்துக் கொண்ட பழந்தமிழர் அந்நிலம் சார்ந்த உணவுப் பொருட்களையே வாழ்வியல் ஆதாரமாகக் கொண்டிருந்ததை சங்க இலக்கியம் காட்டுகின்றது.

***"தேனினர் கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்***
***சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி!! (மலை 153-154)***

எனவரும் மலைபடுகடாம் பாடலடிகள் குறிஞ்சி நிலத்தவரின் உணவு வகைகளான தேன், கிழங்கு, மாமிசம் போன்றவற்றையும் சுட்டுவதாக அமைந்துள்ளது.

நம் படைப்பைத் தேன்மயங்கு பாலினம்" (ஐங் 203) எனவரும் பாடலடி தேன் முக்கிய உணவுப் பொருளாக இருந்ததைக் காட்டுகின்றது. தேன் சிறந்த மருந்துப் பொருளாகவும் விளங்கியது. உடும்பு, முயல் இவற்றோடு ஈயலும் உணவுப் பொருளாக சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டிருந்ததை நற்றினை முல்லைத் திணைப் பாடல் பின்வருமாறு பதிவு செய்கின்றது.

***"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து***
***நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி***
***எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல***
***பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து***
***இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்***
***வன்புலக் காடு நாட்டதுவே" (நற்:59)***

*என்று உணவின் வகைகளையும் சிறப்புகளையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.*

**ஆடை**

*சங்ககாலத்தில் ஆடையில் தூய்மையையும் மென்மையையும் விரும்பினர். குறிப்பாக பட்டாடைகள் சிறப்புடையதாகக் கருதப்பட்டன. நல்லியக்கோடனின் வள்ளல் தன்மையைச் சுட்டவரும் கவிஞர் அவன் பரிசிலர்க்குக் கொடுக்கும் ஆடையானது மூங்கிலின் உட்பட்டையை உரித்தாலென்ன தன்மையது என்பதை,*

***"-------------------------- மாசு இல்***
***காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ"***

*என்று விளக்குகிறார். மேலும் (சிறுபாண் 235-236) பாம்புத்தோல் போன்ற மெலிதான ஆடைகள் வழக்கத்தில் இருந்தமையும் அவற்றில் பூத்தொழில் செய்யப்பட்டிருந்ததையும்*

*"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து*
*அரவுரியன்ன அறுவை நல்கி – (பொருநர் 82-83)*

*எனவரும் பாடலடிகள் பதிவு செய்கின்றன.*

*புரவலர்களுக்கு இரவலர்களுக்கும் படடாடை அளித்து சிறப்பித்தமைக்குச் சங்க இலக்கியம் சான்றாக விளங்குகின்றது. இதனை,*

***"கொட்டை கரைய பட்டுடை நல்கி"***
***(பொருநர் 155)***
***"ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்"***
***(பெரும்பாணா 469)***

*ஆடைகள் மிக நுண்ணிய நூலினால் நெய்யப்பட்டிருந்தமையை மலைபடுகடாம் பின்வருமாறு சுட்டுகின்றது.*

**விருந்தோம்பல்**

*தமிழர்களுக்கே உரித்தான தலைசிறந்த பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். தமிழர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை*

முகமலர்ச்சியுடன் அகமகிழ்ந்து வரவேற்று வயிறார உணவு படை மகிழும் உயர் பண்புடையவர்களாவர்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தம்பாற் பரிசில் பெறுதற் பொருட்டு வருபர்வகளுக்கு வரையறையில்லாமல் தாம் வேண்டுமளவு உணவு விரும்பிக் கொடுத்ததைப் பாலைக் கௌதமனார் தம் பாடல் வழி விளக்குகிறார்.

***"வருநர் வரையர் வார வேண்டி***
***விருந்துகண் மாறா துணீஇய பாசவர்***
***ஊனைத் தழித்த வானிணக்கொழுங்குறை***
***குய்யிடு தோறு மானா தார்ப்பக்***
***கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்***
***அடுமை யெழுந்த வடுநெய் யாவுதி***
***--------------------------------------------------***
***நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி"***

***(பதிற்று., பா.எ.28-35)***

என்றும் போற்றப்படுவது பண்டைத்தமிழரின் விருந்தோம்பல் பண்பு.

மலைகளில் வாழும் குறவர்கள் வரும் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று தாம் சமைத்த மாமிசத்தையும் தினையரிசிச் சோற்றையும்; வழங்குவர். பலநாள் உறவுடையவர் போன்று புதியவர்களையும் ஏற்றுக்கொள்வர் என்பதையும் பின்வரும்,

**"நும்இல் போல கேளாது கெழீஇ**
**சேட் புலம்புஅகல இனிய கூறி**
**பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்"**

என்ற பாடலடிகளால் உணரலாம்.

மகளிர்தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரைத் தத்தம் பிள்ளைகளை;க் கொண்டு முறை சொல்லி அழைக்கச் சொல்லி, அவர்களுக்கு வேண்டுவன நல்கி உபசரித்து அனுப்பினர். இதனை மலைபடுகடாம் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

***“அகம்பலி உவகை ஆர்வமொடு அளைக,***
***மகமுறை தடுப்ப, மனைதொறும் பெறுகுவீர்***
***(மலை 184-185)***

*மேலும் விருந்தினரை வழியனுப்பும்போது அவர்கள் பின்னால் 7 அடி பின்சென்று வழியனுப்பும்முறை குறித்து (பொரு.166) பொருநாற்றுப்படை குறிப்பிடுகிறது. நன்னன் விருந்தோம்பலில் சிறந்தவன். தன்னை நாடி வந்தோரை முதல்நாள் உபசரித்தது போல எத்தனை நாள் தங்கியிருப்பினும் உபசரிக்கும் தன்மையாளன். கூத்தர் போன்றோருக்கு வெண்ணெல் அரிசியோடு கலந்த மாமிச உணவைக் கொடுத்து உண்ணச் செய்கிறான் என்பதை மலைபடுகடாம்,*

***“தலைநாள் அண்னபுகலொடு வழிசிறந்து***
***பலநாள் நிற்பினும் பெறுகுகிவிர் நில்லாது” (மலை 563-566)***

*எடுத்துரைக்கின்றது. இவ்வாறு தமிழர்களின் உணவு முறையில்பண்பாட்டுக் கூறுகள் வாழ்வோடு இயைந்த நிலையிலே காட்சித்தருகின்றன.*

**பிறர் நலம் பேணல்**

*சங்க காலத்தில் மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்கள் வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வாரி வழங்கியதோடு பெருஞ்சோறு படைத்தும் மகிழ்ந்தனர்.*

***“சிறியகட் பெறினே எமக்கீயம் மன்னே***
***பெரியகட் பெறினே***
***யாம் பாடத்தான் மகிழ்ந்து உண்ணும்***
***மன்னே” ` (புறம் 235:1-6)***

*என்று தம்மை ஊட்டி மகிழும் அதியமானின் அன்புத் திறத்தைப் பாடுகிறார் ஔவையார்.*

*கானவன் அம்பெய்திக் கொணர்ந்த முள்ளம் பன்றியின் மாமிசத்தைக் கொடிச்சி, கிழங்கோடு சிறுகுடியினர் பலருக்கும் பகிர்ந்து அளித்தலை,*

***கானவன் எய்த முளவு மான்கொழுங்குறை***
***தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு***
***காந்தன் அம் சிறுகுடிப் பகுக்கும் (நற்:8-10)***

*என்று நற்றிணைப் பாடல் பதிவு செய்கின்றது. இத்தன்மையில் மதுவாயினும் மாமிசமாயினும் அனைவரும் ஒன்று கூடிப் பங்கிட்டு அகமகிழும் இயல்பினைப் பதிவு செய்கின்றது சங்க இலக்கியம்.*

**கள்ளுண்ணுதல்**

*கள்ளுண்ணுதல் தீதென கருதப்பட்ட இடைக்கால கருத்து புறக்கணிக்கப்பட்டு இன்று நாகரீகத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் இப்பண்பு பண்டைத் தமிழரால் போற்றப்பட்டது என்பதை,*

***"உண்டோன தான் நறுங்கள்" (புறம்:34)***

*என்று இனிய கள்ளை அருந்தும் தலைவன் சுட்டப்படுகிறன்றான்.*

*மேலும் பெண்களும் மது அருந்தி மகிழ்ச்தமையை,*

***"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே" (புறம் 335)***

*என்று ஔவையாரும் பாடுகின்றார்.*

***"துடியின் அடி பெயர்த்து தோள் அசைத்துத் தூக்கி"***
***அடு நறா மகிழ் தட்ப ஆடுவாள் தகைமையின்"***
***(பரி 21:19-20)***

*என்று நடனமாடும் பெண்கள் மது அருந்தியமை;யைப் பரிபாடல் பாடல் வரிகள் காட்டுகின்றன. மது சங்க காலத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் உணவாகவே கொள்ளப்பட்டது என்பதை,*

***"குறி இறைக் குரம்பைக் குரவர் மாக்கள்***
***வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து***
***வேங்கை முன்றில் குரவை அயரும்"***

***(புறம் 129:1-3)***

எனவரும் முடமோசியார் பாடலும் விளக்குகின்றது. சங்க உணவுப் பொருட்களில் மகிழ்வினை கொடுப்பதற்காக உண்ணப்பட்ட கள்ளினை நாள்தோறும் அருந்தும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தமையையும் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.

**விழாக்கள்**

"விழாக்கள் என்பன மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச்சடங்குகளிலிருந்து தோன்றியனவாகவே உள்ளன. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றை அச்சமுதாயம் காலங்காலமாகப் போற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கும் விழாக்களின் வழி அறிய இயலும்"[3].

சடங்குகளைப்போலவே விழாக்களும் மக்களின் வாழ்வில் மிகுந்த செல்வாக்கு உடையதாக இருக்கின்றன. மக்கள் தங்கள் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். மனித உறவுகளை வளர்க்க விழாக்கள் தேவைப்படுகின்றன. தமிழகத்தில் சங்ககால மக்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றி இப்பகுதி எடுத்துரைக்கவுள்ளது.

**கார்த்திகை திருவிழா**

தமிழர்கள் கொண்டாடிய விழாக்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற இவ்விழாவானது,அடிப்படையில் சமய விழாவாகப் பார்க்கப்படுகிறது. இவ்விழாவினை இன்றும் நாம் கடைபிடித்தும் வருகிறோம். இவ்விழாவானது கார்த்திகை மாதத்தில் நடைபெற்ற விழாவாகும். வீடுகளும் தெருக்களும் ஒளிவிளக்குகளால் அழகுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அதற்கு ஆதாரமாக அகநானூற்றுப் பாடல் ஒன்றும் நமக்கு சான்று பகர்கிறது.

***"மழைகால் நீங்கிய மாக விசும்பில்***
***குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து***
***அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்***
***மறுகுவிளக்குறுத்து, மாலை தூக்கிப்***
***பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய***
***விழாவுடன் அயர"*** ***(அகம் 141)***

**தை நீராட்டுவிழா**

இத்தகைய நீராட்டு விழாவானது இளம்பெண்கள் தங்களுக்கு கணவனாக வரவேண்டிய ஆண்மகன் நற்பண்புடையவனாக இருக்க வேண்டும் என நோன்பிருப்பதாகும். இளம்பெண்கள் தங்களது தோழியர்களுடன் ஊரிலுள்ள குளத்தில் தைத் திங்களில நீராடி இவ்விழாவினைக் கொண்டாடினர் என்பதை சங்ககால நூலான ஐங்குறுநூறு எடுத்துக்காட்டுகிறது.

**"நறுவீ யைம்பான மகளி ராடும்**
**தைஇத் தண்கயம் போலப்**
**பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே"** ***(ஐங்குறு :84)***

மேலும் நற்றிணை, கலித்தொகை பாடல்களிலும் இச்சான்றுகள் கிடைப்பதன் மூலம் அக்காலத்தில் இவ்விழாவானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

**திருவோணம் விழா**

திருவோணம் விழா சங்ககாலத்தில் கொண்டாடப்பட்டுள்ளதாக பத்துப்பாடகு நூலான மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழாவானது தற்போது கேரளத்திலும், தமிழகத்திலும், மற்ற தென் மாநிலங்களிலும் ஆங்காங்கே கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவானது திருமாலுக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

**"கணங்கொள் அவுணர்க் கடந்தபொலந்தார்**
**மாயோன் மேய ஓண நன்னாள்"** ***(மதுரைகாஞ்சி – 591)***

என்ற வரிகளானது கருமை நிறமுடைய திருமாலை குறிப்பிடுவதிலிருந்து ஓணம் விழா திருமாலுக்கு எடுக்கப்பட்டது தெளிவு.
இளவேனில் விழா

இளவேனில் காலமானது காமவேளுக்குரியதாகக் கருதப்படுகிறது. இவ்விழா பற்றி பரிபாடலில் காமன் கடவுளாகப் போற்றப்பட்டுள்ளது.

மேலும் இவ்விழாவானது தொடர்ந்து நடைபெற்றும் வந்ததெனவும் தெரிகிறது. இதற்கு சான்றாக

***"காமவேள் அம்பின் தொழில் வீற்றிருந்த நகர்"***
***(பரிபாடல் 18:26-27)***

**இந்திரவிழா**

இந்திரனைப் பற்றிய குறிப்புகளானது சங்க நூல்களில் சொற்ப அளவிலேயே நமக்கு கிடைக்கின்றன. இதற்கு சான்று தரும் விதமாக ஐங்குநுறூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வரியானது

***"இந்திர விழாவிற் பூவின் அன்ன" (ஐங்குறு 62)***

ஆகும். இவ்விழாவை பற்றிய செய்திகளை சங்ககாலத்திற் பின் எழுந்த நூலான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவற்றில் அரசு விழாவாக கொண்டாடப்பட்டிருப்பதால் இவ்விழா தொடர்ந்து நடைபெற்றிருத்தல் வேண்டும்.

**பங்குனி விழா**

பங்குனி விழா சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூரில் கொண்டாடப்பட்டுள்ளது.

***"வென்று எறி முரசின் விறற் போர்ச் சோழர்***
***இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்***
***வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று***
***உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்***
***பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"***
***(அகம் 137)***

இன்றும் பங்குனி விழா தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது.

விழாக்கள் பற்றியச் செய்திகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன.

**நடுகல் வழிபாடு**

இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் முறையினைத் தொல்காப்பியர்,

***"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்***
***சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்" (புறம்:5)***

*என்று விளக்குவார்.*

*தொல்குடி மக்களின் வழிபாடு நடுகல் வழிபாடாகவும், வீரநிலை வழிபாடாகவும் விளங்குகிறது. போரில் இறந்த வீரரைத் தம் மரபைக் காக்கும், தெய்வமாகக் கருதி வழிபாடு நடத்தினர். அதற்கு இறந்தவரின் பெயரைப் பொறித்து, வரலாற்றைப் பதிவு செய்தல், மயிற்பீலியை அணிவித்தல் போன்ற சடங்கு முறைகளைச் செய்துள்ளதாக அகநானூறு சான்று பகர்கின்றது.*

***"பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்***
***பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்"*** ***(அகம்., 67:8-10)***

*என்று தொல்குடி மக்களின் வழிபாடு, போரில் இறந்த மறவர்களின் நினைவாகக் கொண்டு நடுகல் வழிபாடு நிகழ்த்தியுள்ளனர்*

***தமிழரின் நம்பிக்கைகள்***

*மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப்பல. இந்த நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் ஒரு சமுதாய வாழ்வையும் நடத்திச் செல்வனவாக விளங்குகின்றன.*

*மனிதன் இயற்கையின்தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலே, நம்பிக்கைகள் தோன்றின எனலாம்.*

*சனி கோள்களுள் ஒன்று. அதன் பார்வைக்கு ஆளாவோர் இன்னல்களுக்கு ஆளாவர். எனினும் சனியின் ஊர்தியான காக்கை கரைதலால் விருந்தினர் வருவர் என்ற நற்செய்தியை அறிவிப்பதாக நம்புகின்றனர்.*

*விருந்தினர் வருவர் என்று காக்கை கரைந்ததாகக் கூறும் குறுந்தொகைப் பாடலொன்றுள்ளது.*

***"பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு***
***விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"*** ***(குறுந்:210:5,6)***

*தலைனுடன் தலைவி உடன் போக்காய்ச் சென்றுவிட்டாள் என்பதை அறிந்து வருந்தும் நற்றாய் தலைவனும் தலைவியும் திரும்பி வந்ததும் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாள் காக்கை அதற்கு*

*நல்நிமித்தமாக கரையும்படி வேண்டுகிறாள் அவ்வாறு கரைந்தால் பலிக்கடன் தந்து மகிழ்வுறுத்துவதாகவும் கூறுகிறாள்.*

***மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!***
***யன்புடை மரபினின் நின்கிளையொட ஆரப்***
***பச்சூன் பெய்த பைந்நிணைவல்சி***
***………………………………………………***
***அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"*** ***(ஐங்குறு., 391)***

*காக்கை கரைவதை எள்ளக்கூடாது என நம்பினர். கூகை குழறுதல் நாட்டிற்கு வரும் அழிவை உணர்த்தும் தீய நிமித்தமாக நம்பியதாக இலக்கியங்கள் உணர்த்துகின்றன.*

*பல்லி ஒலித்தலை நிமித்தமாகக் கருதுதல் சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்களிடம் இருக்கும் ஒரு வழக்கமாகும். சங்க இலக்கியத்தில் பல்லியின் ஒலி நன்னிமித்தமாகக் கூறப்படுகின்றது.*

*கண்கள் துடிப்பதை வைத்து நன்மை தீமை நிகழப்போவதை உணர்ந்தனர். பெண்களின் இடக்கண் துடிப்பின்*

***"நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்"***
***(ஐங்குறு 218)***

*அது நல்ல நிகழ்வின் அறிகுறியாகக் கருதப்பட்டது. பிறர் தற்செயலாகப் பேசிக்கொள்ளும் பேச்சினை வைத்துக் கணிப்பது 'விரிச்சி' எனப்பட்டது. பயணத்தின்போது இடையில் தற்செயலாக நிகழும் காட்சிகளைக் காண நேரும்போது, அந்நிகழ்வுகளைக் கொண்டு கணிப்பது நிமித்தங்கள் எனச் சுட்டப்படுகிறது. இதில் நல்நிமித்தமும் தீ நிமித்தமும் உண்டு.*

***தமிழர் பண்பாடு***

*பழந்தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றக் கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர். உலகமக்களை ஒரே குலத்தவராக எண்ணினர். இத்தகைய உயர்ந்த பரந்த நோக்கம் தமிழர்களின் ஒப்பற்ற பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனை,*

***"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;***

***தீதும் நன்றும் பிறர்தர வாரா;***
***நோதலும் தணிதலும் அவற்றோகரன்ன,***
***சாதலும் புதுவ கன்றே! வாழ்தல்***
***இனிதென என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்***
***இன்னாது என்றலும் இலமே;"***

***(புறம் பா.எ.192)***

*என்றவாறு அறியலாம். எல்லா ஊர்களும் எம்முடைய சொந்த ஊர்கள் எல்லா மக்களும் எம்முடைய உறவினர்கள். எம்முடைய நன்மையும் தீமையும் பிறரால் வருவன அல்ல. யாம் இன்புறுவதும் துன்புறுவதும் கூட அவைபோலத்தான். சாவு ஒரு அதிசயமன்று. ஆகையால் இவ்வுலக வாழ்வு இனிமையானது என்று மகிழ்வுறமாட்டோம். வெஞ்சினத்தால் இவ்வாழ்வு துன்பமுடையது என்று வெறுக்கவுமாட்டோம். இதுவே தமிழர்களின் தனித்த பண்பாட்டை விளக்கப் போதுமானதாகும்.*

*"தமிழ்ப் பண்பாடு முதன்மையானது. ஆரியர் வருமுன் எல்லாத் துறையிலும் தலைசிறந்த நாகரிகமும் பண்பாடும் உடையவராய் இருந்தனர் என்பது பாவணர் கூற்றாகும்"*[4]

***தமிழரின் வீரம்***

*தமிழர்களின் ஒப்பற்ற வீரத்தைப் பற்றி உரைக்கும் பாடல்கள் பலவுண்டு. வீரம் என்றால் இளைத்தவர்களை இன்னலுக்கு ஆளாக்கித் தான்மட்டும் இன்புற்று வாழ்வதன்று. மற்றவர்களைக் காட்டிலும் தான் ஆற்றலுடையவன் என்பதை அறிவித்துக் கொள்ளுவதன்று. தான் கொண்ட கொள்கையிலே உறுதியுடன் நிற்றல் தான் செய்யத் தொடங்கிய செயல்களை அஞ்சாமல் முயற்சியுடன் செய்து முடித்தல். தன்மானத்திற்கு இழுக்கு வராமல் தன் செயலிலே வெற்றியடைதல், தன்னைக் கராணமின்றித் தாழ்த்திப் பேசுவோர் நாணும்படி அவர் செருக்கைச் சிதைத்தல் இவை வீரத்தின் இயல்பு. இத்தகைய சிறந்த வீரம் உடையவர்களே இந்நாட்டுத் தமிழ்மன்னர்கள்.*

*பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு ஒன்றே இவ்வுண்மையை விளக்கப் போதுமானதாகும். இவன் வீரத்திலே மிகுந்த வேந்தன் மட்டும் அன்று; செந்தமிழ்ப் புலவனாகவம் சிறந்திருந்தான் எடுத்துக்காட்டாக,*

**"உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்**

**------------------------------------------------------------------------**

**------------------------------------------------------------------------**

**இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே"**
***(புறம் ப.எண.72)***

என்ற பாடல் அமைகிறது. படைபலத்தால் இகழ்துரைத்த வேந்தர்களுடன் வீரப்போர் புரிவேன் அவர்கள் சேனைகள் சிதையத் தாக்குவேன். அவர்களுடைய முரசுகளுடன் அவர்களையும் சிறைபிடிப்பேன். இப்படிச் செய்யேனாயின் என் குடை நிழலிலே இருப்பவர்கள் கிராமங்கள் போய்த் தங்குவதற்கு வேறு இடங்காணாமல் எமது அரசன் கொடுங்கோலன் என்று என்னைத் தூற்றிடும் கொடியவனாவேன் என்று என்னைத் தூற்றிடும் கொடியவனாவேன். உலகம் உள்ளவரையிலும் மாறாத புகழுடைய மாங்குடி மருதனைத் தலைமையாகக் கொண்ட புலவர்கள் என்னுடைய நாடடைப் புகழ்ந்து பாடாமல் புறக்கணிப்பார்களாக. இருக்கின்றவர்களுக்கு எதையும் கொடுக்க முடியாத வறுமையையும் யான் எய்துவேனாக" என்ற பாடலால் நெடுஞ்செழியனின் வீரமும், நேர்மையும் புலவர்களுடைய பெருமையும் காணப்படுகின்றன.

அறப்போர்

தகுந்த காரணமின்றிப் பண்டைத்தமிழ் மன்னர்கள் போரிலே தலையிடமாட்டார்கள். தங்கள் குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் வேந்தர்களின் மேல் போர் தொடுப்பார்கள் சேனைகளின் பெருக்கால் செருக்கடைந்து தங்களைப் பழிக்கும் மன்னர்கள் மேல் படையெடுப்பார்கள்.

அக்காலத்திலே போரால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தேற்படுவதில்லை. படைகளும் பண்டங்களும் தான் போர்க்களத்திலே பாழாகும். பொதுமக்களுக்கு அறிவித்த பின்னரே போர் செய்வதிலும் அவர்கள் அறநெறியைப் போற்றி வந்தனர் என்பதை,

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என**

***அறத்தாறு நுவலும் பூட்கை, மறத்தின***
***கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்***
***எங்கோ, வாழிய குடுமி" (புறம்.,9)***

*'பசுக்களே, பசுவின் தன்மையையுடைய பார்ப்பனர்களே, பெண்களே,மரபு நோய் உள்ளவர், இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப்பேறு இல்லாதவர், எமது அம்பை விரைவிலே விடப் போகிறோம். ஆகையால் உங்கள் உயிருக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடிச் செல்லுங்கள். இவ்வாறு நெறியைக் கூறும் கொள்கையை உடையவன் நீ, சிறந்த வீரத்தையும் உடையவன் நீ, பகைவர்களைக் கொல்லும் யானையின் மீது பறந்து கொண்டிருக்கும் கொடி, வானத்திலே நிழலைச் செய்யும்படியான சிறப்புடைய எமது மன்னனே, நீ வாழ்க' என்று வாழ்த்துகிறார் ஆசிரியர். இதனையே,"அறநெறி பிறழாத போர்முறையை அரசர் கடைப்பிடித்தனர்"[2.] இரவில் போர் நிறுத்தம், எளியார், கருவியில்லார் முதலியோரைத் தாக்காமை, புறப்புண் நாணல் முதலிய போர் அறங்களைக் கடைப்பிடித்தனர். என்று தேவநேயப்பாவணர் கூறுகிறார்.*
*ஒழுக்கம் தவறாமை*

*ஒழுக்கத்திலிருந்து தவறி நடந்தால் தமக்குத் தீங்கு நேரிடும் என்பதை உணர்ந்து, அறிவுடையோர் அவ்வொழுக்கத்திலிருந்து எப்போதும் தவறமாட்டார்கள் என்பதை வள்ளுவர்,*

***"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்***
***ஏதம் படுபாக் கறிந்து" (குறள்: 136)***

*என ஒழுக்கம் குறித்து விளக்கமளிக்கின்றார். பண்டைத் தமிழர்கள் நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்கியவர்கள் உயிரினும் சிறந்தது ஒழுக்கமே என்ற உண்மையை உணர்ந்திருந்தனர். அறநெறிக்கு மாறான செயல்களில்*

**பொய்கூறாமை**

*ஒருவன் தன் மனதில் பொய்யை நினைக்காமல் நடப்பவனாக இருந்தால் உலகத்தவர் மனதில் எப்போதும் நிலைத்திருப்பான்.*

**"வலம்படு வான்கழல் வயவர் பெரும**
**நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்**
**புறஞ்சொற் கேளாய் புரைதீர் ஒண்மைப்"**

***(பதிற்ற., 70:11-13)***

*செல்வக் கடுங்கோ வாழியாதன் விளையாட்டாகவேனும் பொய் சொல்லாத வாய்மை உடையவன். பகைவர் புறத்தே தன்னைப் பழித்தார் என்று கூறினும்,அதனைக் கேட்டுச் சினவாத குற்றமற்ற சிறந்த அறிவினையும் உடையவன் எனக் கபிலர் பொய் கூறாமை குறித்துத் தம் பாடல் வழி உணர்த்துகிறார்.*

***இரந்தும் கற்றல்***

*கற்றல் என்பது எல்லாக் காலங்களிலும் அனைத்து மக்களிடமும் மிக முக்கியமானதாகவே கருதப்படுகிறது.*

***"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல்.நூற் 972: 28)***

*கல்வி கற்பது என்பது, தொல்காப்பியம் முதல் உயர்ந்தோர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது என்பதைக் காலந்தோறும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கல்வியைக் கற்பதில் சிலருக்குக் கட்டுப்பாடுகள் வைத்துள்ளமையை,*

***"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,***
***பிற்றைநிலை முனியாது, கற்றல் நின்றே" (புறம் பா.எ.183)***

*என்ற புறநானூற்றுப்பாடல் மூலம் அறியலாம்.*

***பண்டமாற்று முறை***

*ஐவகை நிலங்களிலும் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்துள்ளது மிக உயர்ந்த பொருள்கைளப் பெறுவதற்கு மட்டுமே சங்ககால மக்கள் காசுகளைப் பயன்படுத்தியுள்ளனர். பண்டமாற்றுமுறை நடந்த காலத்தில் பொருள்களுக்குப் பதிலாக காசுகளும் பெற்றனர் என்பதைச் சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றன.*

***குறிஞ்சித் திணையில் கலை***

*உலகம் முழுவதும் மொழித்தேவையின்றி மாந்தரின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவை கலைகளே. அவை முறையே குறிஞ்சி, மருதம், முல்லை,*

நெய்தல், பாலை என ஐந்திணைகளிலும் தமிழர்கள் கலைகள் பரவலாக எங்கும் பரந்து கிடந்துள்ளன. குறுந்தொகையில், திணைவாரிக் கலைகள் பரிவியிருந்ததைப் பற்றிக்காணலாம்.

குன்றக் குறவனது நிலத்தில் பொன்போன்று விளைந்த தினைக்கதிர்களை இறைவனுக்குப் பலிப்பொருளாக இட்டது என்பதை அறியாது. அதன் செழுமை கண்டு பறவைகள் உண்டன. தெய்வம் ஏறி ஆடுகின்ற வெறியாட்டு ஆடுமகள் போல விளங்கியது... என உவமேயத்துடன் உரைக்கின்றார் நக்கீரர்(குறுந்.பா.எ.105)

**முல்லைத்திணையில் கலைகள்**

யாழ்ப்பாணர்கள் படுமலைப் பண்ணினை வாசிக்கும் இசையானது மேகத்து, எழுகின்ற சுரத்தைத் தன்கண் கொண்ட நல்ல ஓசை போலச் செவியி;ல் விழ, தோழி, தலைவன் தோளில் துஞ்சி இன்பம் தருவதால் வாழும் நாளாகக் கருதுகிறாள். தலைவி என்கிறாள்.

வேந்தர் புனையகத்து, அவரவர்க்குரிய பாணர்கள் உடனிருந்து தலைவன் தலைவியர்க்கு இன்பம் மிகுமாறு வாசிக்கம் மரபு அந்தநாளில் இருந்தது படுமலைப் பண் என்பது, பாலைப் பண் பன்னிரண்டுள் ஒன்று தத்தம் குரலைக் கொண்டு பாடப்படுவது. மேட்டு நிலத்தில் பெய்யும் மழை, படுமலைப்பண் போன்றதாக உவமமாகிப் பொருள் உரைத்தலும் கூடும். (குறுந்.பா.எ.323)

**மருதத்திணையில் கலைகள்**

பெரும்பதுமனாரின் பாடலில்,கழைக் கூத்தர்களின் மூங்கிலின்மேல் கட்டிய கயிற்றின்மேல் ஏறி நின்று ஆடும்போது கொட்டப்படும் பறைஒலி, ஆரியர்களின்கூத்து வகைக்குப் பயன்படுத்தப்படும் கருவி ஆகும். விலக்கு உறுப்புகள் பதினான்கனுள் ஒன்றாகிய சேதம் என்பது இருவகை என்றும், அதன் ஒருவகையே ஆரியக்கூத்து என்றும அடியார்க்கு நல்லார் கூறுவார். (குறுந்.பா.எ.31)

மாட்சிமை பொருந்திய தகுதியுடைய என் தலைவன் வீரர்கள் கூடி எடுக்கும் வில்விழாவின் போது, மகளிர் தத்தமக்குரிய மள்ளரைத் தழுவியாடுகின்ற துணங்கைக் கூத்தின் கண்ணும், இவையல்லாத பிற

*இடத்தும் தேடியும் காணக் கிடைத்திலேன் என்று ஆதி மந்தி கூறுவதைக் காணலாம்.*

*மகளிர் தமக்குரிய ஆடவரைத் தழுவி ஆடும் கூத்து 'துணங்கைக் கூத்து' எனப்படும். ஈண்டு பரத்தையரோடு ஆடும் கூத்து துணங்கை எனப்பட்டது.*

**நெய்தல் திணையில் கலைகள்**

*இயலும் தேரிணை உடைய கடறகரைப் பகுதித் தலைவனே, நெய்தல் மணற்பரப்பி வண்டல் பாவையைக் கண் துயிலச் செய்து, நீ இருக்கும் இடத்திற்கு வந்தேன். ஆரல் மீனை உண்ட நிறைவயிற்றுடைய நாரைகள் என் மகளாகிய வண்டல் பாவையின் நெற்றியினை மிதித்துச் செல்லும் பொழுது சாய்ந்தமையால், நானும் தலைவியும் செல்வதற்று அவளை என்னுடன் செல்லுமாறு நீயே ஏவுவாயாக எனத் தோழி தலைவனை நோக்கி உரைக்கின்றாள். இதில் வண்டற்பாவை செய்யும் கலையைப் பார்க்க முடிகிறது. (குறுந்.பா.எ.114)*

**பாலைத் திணையில் கலைகள்**

*ஒருக்கண் மாக்கிணையை இயக்குகின்ற தாளததையுடைய பாணர் முதலிய இரவலர்களைப் பாதுகாக்கின்ற அரசனின் அதலை என்னும் குன்றத்தை உடையவன் தலைவன் என்கிறது மோசிகீரனாரின் பாடல். கிணைப்பறையை வாசிக்கும் கலையை பாடல் மூலம் உணரமுடிகிறது. (குறுந்.பா.எ.59)*

**முடிவுரை**

*மனிதனை நல்வழியில் பண்படுத்தும் செயல்கள் அனைத்தும் பண்படாயிற்று. பண்டைத் தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை பண்பாடுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களைக் கொண்டு பண்பாடு, உணவு, ஆடை, விருந்தோம்பல், பிறர்நலம் பேணல், கள்ளுண்ணுதல், விழாக்கள், வழிபாடு, நம்பிக்கைகள், பண்டமாற்றுமுறை, கலைகள், கடவுள் நம்பிக்கை, அட்டில் சாலை போன்றவைகளை அறிய முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *சீ.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.150-152*
2. *ஞா.தேவநேயப் பாவணர், பழந்தமிழர் நாகரீகமும் பண்பாடும், ப.250*
3. *ஞா.தேவநேயப் பாவணர், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.323.*
4. *ஞா.தேவநேயப் பாவணர், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.323.*

# சங்க கால மக்களின் சமூக பண்பாட்டு அமைப்பும் நாகரிகமும்
# *SOCIAL AND CULTURAL STRUCTURE OF THE PEOPLES OF THE SANGAM PERIOD*

**முனைவர்.ச.மீனாட்சி**
**உதவி பேராசிரியர்**
**வரலாற்று துறை**
**தமிழ் நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம்**
**சென்னை-600015.**
**மின்னஞ்சல்: meenakshihis2020@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் என்பது தமிழர்களின் சிறப்பான பண்பாட்டுத் தொட்டியின் பொற்காலம் ஆகும். இக்காலத்தில் தமிழர் வாழ்வு கலை, இலக்கியம், சமூக அமைப்பு, மற்றும் மத அடிப்படைகளால் செழித்து விளங்கியது. சங்கி இலக்கியங்கள், தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் சமகாலச் சான்றுகள் மூலம், இக்காலத்தின் தமிழர் அறிவியல் திறமைகள், கைவினைகள், விவசாயம், போர்த்தொழில், மற்றும் அரசியல் ஆளுமைகள் ஆகியவை மிகுந்த வளர்ச்சியடைந்திருந்தன என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வு, காதல், தோழமை, வீரக்களிப்பு மற்றும் இயற்கை மீதான பண்பாட்டுப் பார்வைகளை வெளிப்படுத்துகின்றன.*

**திறவுச் சொற்கள்**

**இலக்கியம், தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு**

***Abstract***

*Sangam age is the golden age of Tamil culture. During this period, Tamil life flourished on the basis of art, literature, social structure, and religion. Sanghi literature, archaeological excavations, and contemporary evidence suggest that the Tamils of this period were highly developed in terms of scientific skills, crafts, agriculture, warfare, and political personalities. Sangam literature expresses the cultural views of Tamils on life, love, friendship, valour and nature.*

***Keywords***

***Literature, Tamil Literature, Sangham Literature, Tamil Culture, Tamil History***

*சங்க காலத்தின் தமிழர் சமூகம் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாக இருந்தது. சமூகத்தில் பல்வேறு மரபுகள், விழாக்கள், கலாச்சார நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற்றன. விவசாயம், பரந்த பரம்பரைக் கருப்பொருட்கள் மற்றும் வர்த்தகம் ஆகியவை தமிழர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தின. சங்க இலக்கியங்களில் புறநானூறு, ஏதுக்கைப் பாடல்கள் போன்ற நூல்களில் போர்வீரர்களின் புகழ், அரசியல், மற்றும் நட்பு தொடர்பான குணாதிசயங்கள் அடிபடியாகக் கூறப்பட்டுள்ளன. தமிழர் கலாச்சாரம் பெரும்பாலும் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தது, மலை, கடல், நிலம் ஆகியன வாழ்வின் முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன.*

*தமிழ் சமூகம் நீண்ட வரலாற்று மரபினைக் கொண்டது. உலகத்தில் வாழுகின்ற மானுட இனங்களுள் தொல் பழமையும், வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டிருப்பது தமிழினமாகும். மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், வாய்மொழிப் பாடல்கள், நிகழ்த்துக் கலைகள், வழிபாடுகள், சடங்குகள் முதலியவற்றின் மூலமாகத்தான் மனிதனின் பண்பாட்டு வேர்களைப் பிரித்தறிய முடியும். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் வாழும் இடங்களில் எல்லாம் தமக்கான பண்பாட்டு அடையாளத்தினைக் காத்து வாழுகின்றனர். மக்களின் பண்பாடு, திருவிழாவில் பின்பற்றப்படும் சடங்குகள், உணவு முறையில் பயன்படுத்தப்படும் சடங்குகள், தமிழரின் வீரத்தினை வெளிப்படுத்தும் மஞ்சு விரட்டில் காணப்படும் சடங்குகள் ஒவ்வொரு சமூகத்திலும் இருந்து வருகின்றன. சங்க காலத்தில் தமிழர் பண்பாடு வரலாறு என்ற ஆய்வுக் கட்டுரையில் பல்வேறு அரிய தகவல்களை அறிய முற்படுவோம்.*

### ***சங்க காலம்: தமிழ் பண்பாட்டின் பொற்காலம்***

*சங்க காலம், தமிழ் மக்களின் நாகரிகத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. இது கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை ஆண்டுகள் நீடித்த தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான காலம். சங்க காலம் என்று அழைக்கப்படும் இந்த காலம், தமிழின் முதல் மூன்று சங்கங்களின் காலகட்டமாகக் குறிக்கப்படுகிறது. இந்த சங்கங்கள் பாண்டிய அரசர்களால் நடத்தப்பட்ட இலக்கிய சபைகளாக இருந்தன.*

இவ்வேளையில் பிறந்த சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்க்கை முறையை, சமூக அமைப்புகளை, காதல், போர், களம், இயற்கை அழகு போன்றவை குறித்த தகவல்களை முழுமையாக வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை காதல் (அகம்) மற்றும் போராட்டம் (புறம்) ஆகிய வாழ்வியல் அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டவை. இப்பாடல்கள் யாவும் வாழ்வின் பல்வேறு கோணங்களைப் பிரதிபலிக்கின்றன.

சங்க காலத்து தமிழர் சமூக அமைப்பு நாகரிகமாகவும், விவசாயம், வணிகம், கைத்தொழில், வாணிபம் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மிகுந்த நிலையிலும் இருந்தது. சமுதாயத்தில் இளவரசர்கள், அரசர்கள், வீரர்கள், கலைஞர்கள், புலவர்கள், விவசாயிகள், வணிகர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இருந்தனர். இந்த காலத்தின் மிகச் சிறந்த தோரணையான கற்பகத்து அரசன் நெடுஞ்செழியன், பாண்டிய மன்னன் உட்பட பல வீரர்களின் புகழ்மிக்க ஆட்சிகள் சங்க இலக்கியத்தில் பெரிதும் புகழப்பட்டுள்ளன.

இந்த காலத்தில்தான் மலை, கடல், புல் நிலம், காடு மற்றும் பள்ளத்தாக்கு போன்ற புவியியல் பகுதிகளின் அடிப்படையில் தமிழ் மொழியின் பிரிவுகள் உருவாகின. தமிழ்நாட்டின் புவியியல் அழகும், மக்களின் பண்பாடும் சங்க இலக்கியங்களில் சிறப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இலக்கியங்கள் தமிழர் அடையாளம் மற்றும் மரபுகளின் பொக்கிஷமாக இருப்பதுடன், தமிழின் கலை, கலாச்சாரம், மொழி வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் கருதப்படுகிறது.

சங்க கால வாழ்வு திணை சார்ந்த இயற்கையோடு இயைந்த வாழ்வாகும். அவர்கள் அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் பண்பாட்டு நெறியுடன் வாழ்ந்தார்கள். பண்பாடு என்பது மனிதன் சமூகத்தை பண்படுத்தி, நல்ல பழக்கவழக்கங்களைக் கடைபிடித்து, வாழ்வை அர்த்தமுள்ளாக்குவதாகும். இப்படி தமிழர்கள் தனக்கென்று வாழாத பண்பாட்டு கூறுகள் மூலம் வாழ்வாங்கு வாழ்ந்த பதிவினை நாம் காணலாம்.

**பண்பாடு**

ஒரு இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம் நடையுடை, மொழி, கலைகள், குறிக்கோள், சமயக்கொள்கை, சமயப்பொறை, அரசியற் கொள்கை, சமுதாய நிலை என நீட்சி கொள்கிறது. தனிமனிதனின் பண்பாடாக பார்த்தால் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம் என்ற அர்த்தத்தளத்தில் விரிவதை நாம் கவனிக்கலாம்.

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டமாக சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறையாகும்"[1] என பக்தவத்சல பாரதி கூறுகிறார். இயற்கையுடன் இணைந்த மனிதனுடைய வாழ்க்கை அனுபவத்தில் அவன் கற்றுக் கொண்டவைகள், தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் நல்வாழ்வு வாழக் கற்றுத் தரும் பாடங்கள் பண்பாடு எனும் சொல்லிற்கு பொருந்துவதாக அமைகிறது. ஒவ்வொரு இனக்குழுவிற்கும் வந்த வழி வேறாக இருந்தாலும், வேட்டையாடும் சமூகத்திலிருந்து நாகரீக சமூகத்திற்கு மாறுதல் சார்ந்த நகர்வு அடையும் போது அது தன்மையும், சமூகத்தையும் பண்படுத்தும் பல கூறுகளைக் கொண்டதாக இருப்பதைப் பண்பாடு என்றழைக்கலாம்.

**சங்க கால பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள்**

சங்க கால பாடல்கள் தமிழரின் வாழ்க்கையும் பண்பாடுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமானவைகளாகும். சங்க இலக்கியத்தில் வாழ்ந்த தமிழ் சமூகத்தின் பண்பாட்டு கூறுகள் பலவாக காணப்படுகின்றன. அவற்றில் சில முக்கியமான கூறுகளை நாம் காணலாம்.

**உணவு பண்பாடு குறித்த கூறுகள்**

பண்டைய தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென நிலத்தை ஐந்தாக பிரித்து, முதல் கரு உரி பொருளென பகுத்து உணவு பொருள்கள், வழிபடும் தெய்வங்கள், தொழில்கள் என மக்களின்வாழ்வியல் ஒழுக்கங்களையும் மன உணர்வுகளையும் கட்டியமைத்தனர். ஒவ்வொரு திணைக்குரிய உணவு பொருட்களை அந்தந்த திணை சார்ந்து பயன்படுத்தியதை நாம் பார்க்கலாம். "நம் படப்பைத் தேன் மயங்கு பாலினும்"[2] என்ற வரிகளில் தேனை தங்களது

உணவு பொருளாக பயன்படுத்தினர் என்பதை அறியலாம். "செம்புற்று ஈயலின் இன்னளை புளித்து ஈயலை புளி சேர்த்து உண்டதான"[3] குறிப்பினைத் திணை சார்ந்த ஒழுக்க பின்புலத்தோடு நாம் பார்க்கலாம். "உறு வெய்தற்கு உலை இய உருப்பு அலின் குடும்பை எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு தேமாமேனிசில் வளை ஆயமொரு ஆமான் சூட்டின் அமைவர பெறுகுவீர்"[4] குடிசையில் வாழும் எயினக் குல பெண்கள் புளியுடன் சேர்த்து சமைத்த வெப்பமான சோற்றுடன் ஆமான் இறைச்சியும் சுட்டு உணவாக்கி உண்ட நிகழ்வினை பார்க்கலாம்.

அதுபோல"வேட்டை சிறாஅர் சேட்புலம் படராது படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின் விழக்கு நிணம் பெய்த"[5] என்ற பாடலில், பெண்கள் வீட்டின் அருகிலுள்ள மடுக்களிலிருந்து பிடித்த உடும்பின் இறைச்சியை சமைத்து பிறருக்கு வழங்கி தானும் உண்டனர். இப்படியான ஒரு வாழ்வினை பல்வேறு சங்க இலக்கியங்கள் மூலம் நாம் பார்க்கலாம்.

**விருந்தோம்பல் குறித்த பண்பாட்டு கூறுகள்**

> **“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு”[6]**

என்ற வள்ளுவரின் கருத்திற்கேற்ப, சங்க கால மக்கள் பசி என்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வீட்டில் வந்த விருந்தினர்களை பேணி வாழ்ந்த குறிப்பினை பார்க்கலாம். விருந்தினர்கள் புறந்திருக்க சாகா மருந்தாக இருந்தாலும் வேண்டாமென சங்க தமிழர்கள் தமிழ் பண்பாட்டின் அடையாளமாக திகழ்ந்ததை

> **“விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா**
> **மருந்தெனினும் வேண்டாற் பாற்றன்று”[7]**

என வரிகள் மூலம் நாம் உணரலாம். வீட்டில் வருகின்ற விருந்தினர்களை வரவேற்றல், இன்முகத்தோடு பேசுதல், இனிய சொற்களை கூறுதல் அவர்களோடு சேர்ந்து விருந்து பரிமாறுதல், விருந்து பரிமாறும் போது இன்முகத்தோடு இருத்தல் என வள்ளுவரின்

கருத்துக்களைச் சங்க தமிழர்கள் கடைபிடித்து வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறியலாம்.

***"மனையோள் விரும்பி***
***வரகும் தினையும் உள்ளவை எல்லாம்***
***இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்***
***குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்***
***குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து***
***சிறிது புறப்பட்டன்றோ விலள்"***[8]

அரசனை காண செல்லும் புலவர்களுக்கு செல்லும் வழியில் உள்ள வீடுகளில் பெண்கள் வரகு. தினை ஆகிய உணவுகளை சமைத்து பரிமாறினர் என்றும் அந்த உணவு தீர்ந்தால் மீண்டும் வருகின்றவர்களுக்கு விதைப்பதற்கு வைத்திருந்த காணம் மற்றும் தினையை உரலில் போட்டு இடித்து உணவு சமைத்து கொடுத்ததாகவும் புறநானூற்று பாடல் கூறுகிறது.

***"விளைக வயலே வருக இரவலர்***
***என் வேடோளே யாயே யாமே"***[9]

அக்கால மக்கள் விருந்தினர் வரவுக்காக எதிர்பார்த்து காத்து நின்றனர் விருந்தினரின் வருகை அவர்களால் மிகவும் விரும்பப்பட்டது. தனக்கென வாழாமல் பிறர்கென்று வாழும் தமிழர்களின் பண்பு இப்பாடல்களில் உணரலாம்.

சங்க காலத்தில் ஆண்களை விட பெண்களே விருந்தோம்பும் பண்பை பேணி பாதுகாத்து வந்தனர். என்பதை

***"பூவிற் படுவிற் கூவல் தோண்டிய***
***செங்கட் சின்னீர் பெய்த் சீறில்***
***மூன்றில் இருந்து முதுவாய்ச்சாடி***
***வாடாத தாமரை சுட்டுவன் நினக்கே"***[10]

நேரத்தில் வீட்டிற்கு வந்த வயதான பாணனை பார்த்து பெண்ணொருத்தி, இரவு நேரத்தில் வந்ததால் சுட்ட இறைச்சியே வீட்டில் உள்ளதாகவும், மட்டுமின்றி செம்மண் நிலத்திலுள்ள ஊற்றில் ஊறிய

தண்ணீரும் பழஞ்சாடியில் உள்ளதாகவும் அதனால் இரண்டையும் உண்டு களைப்பை போக்கி கொள்க எனவும், மன்னனிடம் போருக்கு சென்ற தலைவன் வந்தால் பட்டினிக்கு பொன்னரி மாலையும் வாடாத பொற்றாமரையும் வழங்குவதாக என கூறுகின்ற பதிவினை பார்க்கலாம். அதுபோல அறச்செயல்களை செய்வதிலும், ஆணும் பெண்ணும் சிறந்து விளங்கினர் குறிப்பாக தன்னை சுற்றி உள்ளவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே தானும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து வாழ்ந்து வந்தனர். மனிதர்களை மட்டுமல்லாது சங்க கால மக்கள் தங்களை சார்ந்திருந்த உயிரினங்களையும் பெரிதும் நேசித்த பதிவையும் பார்க்க முடிகிறது.

***"படலை முன்றிற் சிறுதினை உணங்கள்***

*புறவும் இதலும் அறவும் உண்கெனப்"*[11] என்ற வரிகளால் அக்கால மக்கள் மனிதனையும் உயிரினங்களையும் நேசித்து வாழ்ந்து வந்தனர் என்பதை உணரலாம்.

விருந்தோம்பல் பண்பு என்பது மக்களிடம் மட்டுமல்லாமல் அரசர்களிடமும் இருந்துள்ளதை நாம் சங்க இலக்கிய பிரதிகள் மூலம் உணரலாம் அரசனிடம் பரிசு பெற எண்ணி அரண்மனையை அடைபவர்களுக்கு நல்ல இறைச்சியோடு கூடிய உணவினை கன்னோடு சேர்த்து உண்ண செய்து, உடுத்திருந்த கந்தலாடையையும் களைய செய்து அவர்களுடன் அமர்ந்து தானே பரிமாறிய காட்சி பதிற்றுப்பத்தில் இவ்வாறு பதிவாகி உள்ளது.

***"தொல்பசி உழந்த பழங்கண் வீழ***
***எஃகுபோழ்ந்(து) அறுத்த வான்நிணக் கொழுங்குறை***
***மைஊன் பெய்த வெண்நெல் வெண்சோறு***
***தனைஅமை கன்னின் தேறலொடு மாந்தி***
***நீர்ப்படு பருந்தின் இருஞ்சிற(கு) அன்ன"***[12]

## கொடை குறித்த குறிப்புகள்

சங்க கால மக்கள் செல்வத்தின் பயன் ஈதலே என்ற உயர்ந்த பண்பினை கொண்டு வாழ்ந்து வந்தனர். மன்னர்கள் தங்களை விட

மக்களையே பெரிதும் நேசித்து வந்தனர். இந்த பண்பினை நாம் ஆற்றுப்படை இலக்கியங்களில் அதிகமாக காணலாம். மன்னன் தன்னிடமுள்ள அனைத்து பொருட்களையும் கொடையாக கொடுத்துள்ளான் என்பதை சங்க கால பாடல்கள் வழி காணலாம். தேடிய செல்வத்தை பிறருக்கு கொடுத்து வாழ்வதில் தான் வாழ்வின் உண்மையான மகிழ்ச்சி அடங்கியுன்னதை உணர்ந்த தமிழர்கள் தன்னிடம் உன்ன பொருட்களை பிறருக்கு கொடுத்து மகிழ்ந்தனர்.

***"கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்***

உண்பது நாழி உடுப்பவை இரண்டே பிறவும் எல்லாம் ஒரொக்கும்மே

***அதனால் செல்வத்துப் பயனே ஈதலே"[13]***

அரசனானாலும் ஆண்டியானாலும் ஒரு மனிதனுக்கு தேவை உணவு உடை இரண்டே அதனால் செல்வத்தை சேர்த்து வைப்பதால் எந்த நன்மையுமில்லை என்பதை உணர்ந்த தமிழர்கள் அதனை ஈந்து கொடுத்து மகிழும் போது அடைகின்ற மகிழ்ச்சி ஆயுளையும், வாழ்வையும் நீட்டிக்க உதவும் என்பதை உணர்ந்து தமிழர்கள் கொடை பண்பை வாழ்வின் ஒரு பகுதியாக கொண்டு வாழ்ந்து வந்தனர். இமையவரம்பனின் கொடை பண்பினை பற்றி,

***“எமர்க்கு பிறர்க்கு பாலர் ஆயினும்***
***பரிசில் மக்கள் வல்லார் ஆயினும்***
***கொடைகடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்***
***………………வயிறுமாக இலியர்”[14]***

என்ற பாடலால் இமையவரம்பன் தம்மவரென்றோ பிறவரென்றோ பாராமல் அனைவரையும் ஒரே போல கண்டு ஈயும் நெஞ்சமுடையவன் என்பதால் தன்னை நாடி வந்தவர்களுக்கு முகம் பாராமல் வாரி வழங்கினான் என்பதை பார்க்க முடிகிறது. அதுபோல,

***“பெறுவரம் கூர்ந்த கானம் கல்லென***
***கருவி வானம் துளி சொரிந்து ஆங்கு***
***பழம் பசி கூர்ந்த எம் இரும் பேர் ஒக்கலொடு***

***வழங்க தவா அபெரு வளன் எய்தி***
***வால் உளை புரவியொடு வய களிறு முகந்து கொண்டு***
***யாம் அவனின்றும் வருதும் நீயிரும்..."[15]***

தொண்டைமான் இளந்திரையனின் கொடைத் தன்மை இப்பாடலால் நாம் அறியலாம். அரசனிடமிருந்து கொடை பெற்று வந்த புலவர்கள் தான் பெற்றுவந்த செல்வத்தை பற்றி கூறும் போது தொண்டைமான் பல செல்வ வனங்களைத் தனக்கு நல்கியதாகவும், அவற்றை குதிரைகள் மீதும் யானைகள் மீதும் ஏற்றிக் கொண்டு வருவதாகவும், தான் மட்டுமல்லாமல், தன்னுடன் வந்த சுற்றத்தாரும் யானை மீது பரிசுகளை பெற்றுக் கொண்டு வருவதாக பதிவு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், நல்லூர் நத்தனாரால் பாடப்பட்ட சிறுபாணாற்றுப்படையில் கடையெழு வள்ளல்கள், குறித்த சித்திரங்களை பார்க்க முடிகிறது. மயிலுக்கு போர்வை தந்த பேகன், முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, குதிரையுடன் நாடு தந்த திருமுடிக்காரி, நாட்டை பரிசாக வழங்கிய ஒரி, சிவபெருமானுக்கு கலிங்கம் நல்கிய ஆய் ஆண்டிரன், ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான், நாட்டு மக்களுக்கு வாரி வழங்கிய நன்னி ஆகிய வள்ளல்கள் கொடை பண்புக்கு இன்றளவும் தமிழர்களின் உள்ளங்களில் வாழ்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. எல்லாம்எனக்கே, எல்லாம் என்னுடையது என்ற சிந்தனையை விடுத்து வாழ்பவன் உண்மையான வெற்றியையும் இன்பத்தையும் அடையலாம்.

***ஈகை குறித்த பண்பாட்டு கூறுகள்***
***"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்***
***அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வும் ஈனம்என***
***வினைவயின் பிரிந்து வேறுபடு கொள்கை"[16]***

புகழ், இன்பம், ஈகை ஆகிய மூன்றையும் பெற்றிட தலைவன் பொருள் ஈட்டுவதற்காக தலைவியை விட்டு பிரிந்து செல்கின்றான், சங்க கால ஆண்கள் தன் இல்லற சுகத்தையும் விடுத்து பொருள் தேடுவதற்கு சென்றதன் முக்கிய காரணம் ஈகை செய்வதற்கே. ஈகை செய்வதற்கு இல்லறத்தாரும் உறுதுணையாக இருந்தனர் என்பதை உணர்த்தும் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

**அக ஒழுக்கம் சார்ந்த பண்பாடு**

*சங்க கால நூல்களில் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தோழி, வாயிலாக அக ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கையை களவு கற்பென இருவகைகளை கருத்தில் கொண்டு வாழ்ந்தனர். திருமணத்திற்கு பிறகான வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கைக்குள் அடக்கினர். கற்பு வாழ்வு குறித்த ஒரு மிக சிறந்த பாடல் இப்படி வருகிறது.*

***"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்***
***கழுவுறு கலிங்கங் கழாஅதுடீஇக்***
***குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்***
***தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்***
***இனிதெனக் கணவ னுண்டலின்***
***நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"*** [17]

*என்ற பாடலால் திருமணத்திற்கு முன் சமையல் அறைக்குள் சென்று சமைத்தறியாத பெண் ஒருத்தி திருமணத்திற்குப் பிறகு சமைக்கும் போது தன் அழகான கண்கள் புகையினால் கலங்குவதைக்கூட பொருட்படுத்தாமல் தன் கணவனுக்காக சமைத்து அவன் இனிது என உண்டதை கண்டு மகிழ்ச்சியடைகிறாள் இல்லற வாழ்வின் இன்பத்திற்கு விட்டு கொடுத்து வாழ்தலை பார்க்கமுடிகிறது. தலைவன் தலைவி உறவு விட்டுகொடுத்தல் மூலம் சிறக்கிறது என்பதை பல பாடல்கள் உணர்த்துகின்றன.*

*பண்டைய தமிழர் வாழ்வு மனித நேயம், விருந்தோம்பல், கொடை சிறப்பு, ஈகை இவ்வாறு மிக உயர்ந்த பண்பாட்டு கூறுகளுடன் சம்பந்தப்பட்டது. சமகால வாழ்வியல் பின்புலத்திலிருந்து, நாம் நெருக்கடி மிக்க சமூக சூழலில் இருந்து சிந்தனை செய்து பார்த்தோமானால் பண்டைய தமிழர் வாழ்வின் முக்கியத்துவம் புலப்படும் என்பதை மறுப்பதற்கில்லை.*

*தமிழர் வாழ்ந்த காலத்தில், குறிப்பாக சங்க காலத்தில், சமூக அமைப்பு முறைகள் மற்றும் பண்பாட்டு கூறுகள் பல தளங்களில் வளர்ச்சி அடைந்தன. குடும்ப அமைப்புகள், மன்னராட்சி, போர்க் கலாசாரம், விளை*

*நிலப் பயிர்ச்சி, கலைகள் மற்றும் மழை வேண்டிய வழிபாடுகள் போன்றவற்றில் ஆழமான மரபுகளை கொண்டு வந்துள்ளனர்.*

*இக்காலத்தில் தமிழ் இலக்கியம், பண்பாடு, மற்றும் சமூக அமைப்புகள் பெரிதும் வளர்ச்சி பெற்றன. சங்க இலக்கியம் முக்கியமாக அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு போன்ற நூல்களை உருவாக்கியது, இதனால் தமிழர்கள் வாழ்ந்த காலத்தின் காதல், போராட்டங்கள், அரசியல் மற்றும் சமூக வாழ்வியல் பிரகாசித்தது. பொருளாதாரம் விவசாயம், கடல் வாணிபம், மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் நிலை கொண்டது. தெய்வ வழிபாடு மற்றும் இயற்கை வழிபாடு முறைவழக்கமாக இருந்தது.*

**சமூக அமைப்பு**

*சங்க காலம் தமிழ் மொழியின் செழிப்பையும், சமுதாயத்தின் உயர்ந்த பண்பாடுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமான காலமாகும். கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை பரவிய இந்த காலகட்டத்தில், தமிழ் சமுதாயம் தனித்துவமான சமூக அமைப்பை உருவாக்கியது. மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்கள், சங்க இலக்கியங்களின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

**நிலப்பரப்புகள் மற்றும் திணைகள்**

*சங்க இலக்கியத்தில் மனிதர்கள் மற்றும் அவர்கள் வாழும் நிலப்பரப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. ஐந்து திணைகள் என்று அழைக்கப்படும் இந்த நிலப்பரப்புகள் மனித உணர்வுகளையும், வாழ்க்கை முறைகளையும் பிரதிபலித்தன.*

- *குறிஞ்சி (மலைப்பகுதி) - இதன் மக்கள் வேட்டைக்காரர்களும் காதலர்களும்.*
- *முல்லை (காடு) - மாடுகளை மேய்க்கும் கறவைக் கூட்டங்களின் வாழ்விடம்.*
- *3மருதம்(விவசாய நிலங்கள்) - விவசாயத்தின் செழிப்பு மற்றும் உழவுக்காரர்களின் வாழ்விடம்.*

- 4நெய்தல்(கடற்கரை) - மீனவர்கள் மற்றும் கடல் சார்ந்த தொழிலில் ஈடுபட்டவர்களின் இடம்.
- பாலை(வறண்ட நிலம்) - போராளிகள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்பவர்களின் புழக்கத்தில் உள்ள பகுதி.

இவை மட்டுமல்லாமல் ஒவ்வொரு திணையும், அங்கு வாழும் மக்களின் பண்பாட்டையும், பொருளாதார நடவடிக்கைகளையும் குறிக்கிறது.

**பெண்களின் நிலை**

சங்க காலத்தில் பெண்களுக்கு ஒரு முக்கியமான இடம் இருந்தது. பெண்கள் சமூகத்தில் பெருமளவில் ஈடுபடுவதும், சுதந்திரமாக செயல்படுவதும் பாராட்டத்தக்கது. பெண்களின் அறிவு, ஆற்றல், மற்றும் நெறிமுறைகளைப் பற்றி சங்க இலக்கியங்களில் அதிகம் விவாதிக்கப்பட்டுள்ளது. கண்ணகி போன்ற கதாபாத்திரங்கள், பெண்களின் நீதி மற்றும் வீரத்தை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய கதாபாத்திரங்கள் அன்றைய பெண்களின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு சமூகத்திலும் உயர்த்தின.

**சமூகத்தின் நெறிமுறைகள்**

சமுதாயத்தில் ஒழுங்கும், நெறிமுறைகளும் பாதுகாக்கப்பட்டன. சிறப்பு குறிப்பாக, பண்பாட்டு விழாக்கள், இசை, நடனம் மற்றும் கலைகள் சமூகத்தில் பெரும் இடத்தை பெற்றிருந்தன. மனிதர்கள் தங்கள் பண்பாட்டை வளர்ப்பதற்கும், மற்றவர்களுடன் இணைந்து வாழ்வதற்கும் முக்கியத்துவம் அளித்தனர்.

சங்க காலத்தின் சமூக அமைப்பு தமிழ் பண்பாட்டின் செழுமையை பிரதிபலிக்கிறது. நிலப்பரப்புகளுடன் உள்ள தொடர்பு மற்றும் பெண்களின் நிலை, அனைத்தும் சங்க காலத்தில் மக்களின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. சங்க இலக்கியங்கள், தமிழ் சமூகத்தின் அடிப்படைகளை நிர்ணயித்து, நம் வாழ்க்கைக்கு இன்னும் வழிகாட்டுகின்றன.

**விளையாட்டும் வேளாண்மையும்**

சங்க காலத்தின் முக்கிய தொழில் வேளாண்மை. நிலம் கைவசம் இருந்தவர்களே சமூகத்தில் முதன்மை பெற்றிருந்தனர். தமிழர்களின்

வாழ்க்கை முழுக்கவே பூமியுடனான உறவை மையமாகக் கொண்டு பிணையப்பட்டிருந்தது. மழைவேளைப் பொறுத்து அவர்கள் விளைச்சல் செய்யும் முறைகள் இருந்தன. விலங்கு வேட்டை, மல்யுத்தம் போன்ற விளையாட்டுகள் இந்நாட்களின் பொழுதுபோக்குகளாக இருந்தன.

வேளாண்மை தமிழர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. நான்கு நிலத் தரைகளில் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) வாழ்ந்த மக்கள், தங்களுக்கு பொருத்தமான விளைச்சலை மேற்கொண்டனர். மருதநிலம் தான் வேளாண்மைக்கு மிகச்சிறந்த பகுதியாக விளங்கியது, ஏனெனில் இது சீரான நீர்ப்பாசன வசதிகளை கொண்டிருந்தது. நதிகள், ஓடைகள், குளங்கள் ஆகியவை நீர்பிரவாகத்தை உறுதிப்படுத்தின. பசு மாடு, நிலம், மழை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் விவசாயம் செய்தனர். சிறுதானியங்கள், நெல், பருப்பு, தேங்காய், வெள்ளரி போன்ற பல்வேறு விளைச்சல்கள் இக்காலத்தில் பெரிதும் பயிரிடப்பட்டன. மழைக்காலத்தில் விவசாயம், குளங்கள் மற்றும் கால்வாய்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டு, உணவுப் பாதுகாப்பிற்காக இயங்கியதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. விளைச்சல் உணர்வும் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது.

தமிழர்கள், தங்கள் உடல் மற்றும் மனதைத் தக்கவைத்துக் கொள்ள பல்வேறு விளையாட்டுகளை விளையாடினர். இவை தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன. சங்க காலத்தில் விளையாட்டுகள், போர்க்கலைகளைப் பயிற்சியாகவும், பொழுதுபோக்காகவும் இருந்தன. மல்யுத்தம், சிலம்பம், வில்வித்தை போன்ற போராட்ட விளையாட்டுகள் வீரத்தை மேம்படுத்தி, போர்க்களத்தில் அவர்களை தயாராக வைத்தன. இவைகள் மன்னர்கள் மற்றும் வீரர்களிடையே பிரபலமாக இருந்தன.

இவை தவிர, விலங்கு வேட்டை போன்ற விளையாட்டுகளும், வேளாண் நிலப்பகுதிகளில் வழக்கமாக நடந்தன. இதன் மூலம் தமிழ் மக்கள், தங்கள் நிலத்தில் வாழும் விலங்குகளை அடையாளம் காண்பதோடு, நிலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் கவனித்தனர். இவை அனைத்தும் சங்க கால தமிழர்களின் வீரம், கைத்திறன், மற்றும் வாழ்வியல் கற்றல்களுக்கு வழிவகுத்தன.

விளையாட்டு மற்றும் வேளாண்மை, மக்கள் இடையேயான பகிர்ந்துணர்வையும், ஒற்றுமையையும் ஊக்குவித்தன. மழைக்கால விளையாட்டுகள், விழாக்கள், பொங்கல் போன்ற வேளாண் பண்டிகைகள், சமூக ஒற்றுமையை மேம்படுத்தக் காரணமாக இருந்தன. உழவர் தொழில் மற்றும் அனைவருக்கும் உணவு ஆகியவையும் தமிழர் சமூகம் மிகுந்த மரியாதையுடன் பின்பற்றியது.

**அரசியல் அமைப்பு**

சங்க காலத்தில் மூன்று பெரும் தமிழ அரசுகள் புகழ் பெற்றிருந்தன: சோழர், சேரர், பாண்டியர். இவை முப்பெரும் மன்னர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களது ஆட்சிப் பகுதிகள் வெவ்வேறு, ஆனால் ஒரே பண்பாட்டைப் பகிர்ந்தனர். அரசர்கள் தங்கள் அரசுகளை திறமையாகவும் கண்ணியமாகவும் ஆட்சி செய்தனர். போர்த்தொழில், கலைகள் மற்றும் கலாச்சாரம் அனைவருக்கும் மிக முக்கியமானவையாக கருதப்பட்டது. சேரர், சோழர், பாண்டியர் எனப்படும் மூன்று முத்தரசர்கள். இவர்கள் தமிழகம் முழுவதையும் தங்கள் அதிகாரத்திற்கு கீழ் வைத்திருந்தனர். இத்தரசுகளின் ஆட்சி கி.மு. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ம் நூற்றாண்டு வரை நீடித்தது.

இரண்டாம் பாண்டிய மன்னன் தலைமையிலான பாண்டிய அரசு மதுரை நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தது. இது இலக்கிய வளர்ச்சிக்கும், கலைக்குமான முக்கிய மையமாக இருந்தது. சங்கப் பாடல்களில் பாண்டிய மன்னர்கள் நீதி நிர்ணயத்திலும், வீர சாசனங்களிலும் சிறந்தவர்களாக போற்றப்பட்டுள்ளனர்.

சோழர் புலியூர் (உழுமுறை நகரம்) மற்றும் தஞ்சை போன்ற இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். புறநானூறு போன்ற இலக்கியங்கள் சோழ மன்னர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாடுகின்றன. காவிரியின் நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் கப்பல் போக்குவரத்தையும் சோழ மன்னர்கள் திறம்பட கையாள்ந்தனர்.

சேரர், வெள்ளை மலைகளை தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தனர். சேர மன்னர்கள் பெரும்பாலும் கடல் வாணிபத்தில் ஈடுபட்டனர், குறிப்பாக மேற்கத்திய நாடுகளுடனான வணிக உறவுகள் அவர்களின் செல்வாக்கை அதிகரித்தது. சங்க இலக்கியங்களில் சேர மன்னர்களின் கடல்

வழிப் போக்குவரத்து மற்றும் நீர்முக நகரங்களின் மேம்பாட்டு திட்டங்கள் புகழாகத் தோன்றுகின்றன.

மூன்று அரசுகளும் வம்ச அரசு முறையில் கட்டமைக்கப்பட்டன, அதாவது தந்தை-மகன் வழியில் ஆட்சிக்குத் தொடர்ச்சி வழங்கப்பட்டது. மன்னர் ஒருவரின் கடமை சிறந்த போராளியாக இருப்பது மட்டுமல்ல, தனது நாட்டின் நலனை உறுதி செய்வதும் ஆவார். மன்னர்களுக்கு கீழ் பல சிற்றரசர்கள் மற்றும் தலைவர்கள் இருந்தனர், அவர்கள் மன்னர்களுக்கு நெறிபாதையில் நடந்து வரித்தொகைகள் செலுத்தினர்.

அரசியல் மட்டும் இல்லாமல், இக்கால அரசுகளுக்கு சமயத்தின் மீதான செல்வாக்கும் அதிகமாக இருந்தது. தமிழ் மன்னர்கள் வேதக் கோயில்கள், யாக சாலைகள் மற்றும் கலைப்பண்பாட்டு மையங்களை ஆதரித்தனர். சங்க இலக்கியங்களில் மன்னர்கள் தங்கள் மக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்ததாகவும், சமூக நலனுக்காக பல திட்டங்களை அமல்படுத்தியதாகவும் காணப்படுகின்றது.

சங்க காலத்தில் ராஜவழிகள், சிற்றரசுகள், துறைமுகங்கள், வணிகம், யுத்தம் மற்றும் சமூகவியலின் முக்கியமான தளங்களிலும் மன்னர்கள் மேன்மை பெறுவது குறித்த மாபெரும் விலங்குகளாக அவர்களின் ஆட்சி அமைந்திருந்தது.

**வழிபாடு**

சங்க காலத்தில் வழிபாடுஎன்பது தமிழர் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாய் இருந்தது. தமிழ் சமூகம் இயற்கையுடனும் அதன் பல்வேறு கூறுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தது, இதனால் அவர்களின் வழிபாட்டு முறைகளும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன. அவர்கள் பல தெய்வங்களையும் சக்திகளைப் போற்றியிருக்கின்றனர், குறிப்பாக முருகன், மயன், வான்கோத்திரம், காற்று, மழை போன்றவை மிகவும் முக்கியத்துவம் பெற்றன.

சங்க காலத்தின் மிகவும் மதிக்கப்பட்ட தெய்வம் முருகன் ஆவார். அவரை தமிழர் "சேவல்", "சேவெழு", "வேலன்" எனவும் அழைத்தனர். முருகன் யுத்தத்தின் தெய்வமாகவும், வீரம், போராட்டம், மற்றும் காவலராகவும் கருதப்பட்டார். தமிழ் மரபில், முருகனைப் புகழ்ந்து பாடிய

பல பாடல்கள் இருக்கின்றன. குறிப்பாக, முருகனுக்கான குன்றுக்களான பழனி, திண்டுக்கல் போன்ற இடங்களில் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வந்தது. அவரின் தாயாரான கார்த்திகை மங்கைகளும் அவருக்குப் பணி செய்தனர் என்ற நம்பிக்கை தமிழர்கள் இடையே நிலவியது.

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்களில், வெள்ளாற்றான் என்பவரும் முக்கிய தெய்வமாக வழிபட்டனர். நதி, மலைகள், காடுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய தெய்வங்கள் எப்போதும் தமிழர்களின் வாழ்வியல் வழிபாட்டில் இருந்தன. வெள்ளாற்று போன்ற ஆற்றுகளை பூஜிக்கும் வழக்கம், இவ்வருகையும் பொருளாதார வாழ்க்கையில் முக்கியமாக இருந்தது.

சங்க காலத்தினர் இயற்கையை ஒரு தெய்வமாகவே கருதி வழிபட்டனர். மழை, மலைகள், ஆறுகள், மற்றும் வனங்கள் ஆகியவை பெரும் முக்கியத்துவம் பெற்றன. தமிழர்கள் மழையைப் பெரிதும் மதித்தனர், ஏனெனில் அதுதான் அவர்களின் விவசாய வாழ்க்கைக்கு உயிர்நாடியாக இருந்தது. வான்பாரி போன்ற மழைத்தெய்வங்களை அவர்கள் வழிபட்டனர். இது பல இடங்களில் "வளிபூசை" எனப்படுகிற பழக்கத்தில் வெளிப்பட்டது.

சங்க இலக்கியம், குறிப்பாக புறம் பாடல்கள், வீரத் தெய்வங்களான முருகன் மற்றும் தெய்வக் காவல்துறைகளைப் புகழ்ந்து பாடுவதில் மிக்கது. இவை போர் மற்றும் துன்பங்களை சமாளிக்கத் தெய்வத்தின் அருளை நாடுவதற்கான பாடல்களாகும். இவ்வகை பாடல்கள் தமிழர்களின் நம்பிக்கை மற்றும் தெய்வ அனுபவங்களை பிரதிபலிக்கின்றன.

பல தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் மற்றும் பண்டிகைகள் நடைபெற்றன. முக்கியமாக வேலன் விழா, கார்த்திகை தீபம் போன்ற பண்டிகைகள் மக்களின் சமூகம் மற்றும் வாழ்வியலில் இன்றியமையாதவையாக இருந்தன. இவையெல்லாம் அவர்கள் தெய்வங்களைப் போற்றிப் பரவசமாகக் கொண்டாடிய முக்கிய வழிபாட்டு நிகழ்வுகளாக இருந்தன.

சங்க காலத்தில் தெய்வ வழிபாடு என்பது, தனிப்பட்ட நம்பிக்கை முறையாக இருந்ததுடன், சமூக ஒற்றுமையை உணர்த்திய ஒன்று கூட

ஆகும். கிராம மக்கள் கூட்டமாகக் கூடிப் பல்வேறு விழாக்களில் தெய்வங்களை வழிபட்டனர். இது மக்களை ஒற்றுமையாக்கி, சமுகத்தில் நம்பிக்கையும் அமைதியும் ஏற்படுத்தியது. கிராம மக்கள் தெய்வங்களின் அருளால் தம் நிலங்களில் விளைச்சலைக் குறைந்த சிரமத்தில் பெறுவார்கள் என்று நம்பினர்.

இயற்கை வழிபாடு, தமிழர் மத்தியில் அதிகம் பரவியது. அவர்களுக்கு ஒவ்வொரு இயற்கை வடிவமும் (பழநி மலை, வள்ளுவர் நதி, மதுரை வளநிலம் போன்றவை) தெய்வீக உணர்வுகளைப் பொறுப்பனவு செய்தன. குறிப்பாக, தமிழர் தங்களின் பரம்பரைப் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்தும் கடைபிடித்து வந்தனர். தெய்வங்களை மட்டும் அல்லாமல், பறவைகள், விலங்குகள், மரங்கள், மற்றும் இயற்கை வடிவங்களை அன்போடு பாதுகாத்தனர்.

தெய்வங்களை வழிபடும் தனிச் சடங்குகள் கோவில்களிலும் நடைபெற்று வந்தது. கோவில் கட்டிடக் கலை மிகுந்து வளராதிருந்தாலும், கிராம மக்கள் தற்காலிக கோவில்கள் அல்லது மலைகளில் தெய்வங்களை வழிபட்டனர். சிறிய ஆலயங்கள் அல்லது குன்றுகள் தெய்வத் தாயகமாகக் கருதப்பட்டன.

தமிழர் வழிபாட்டு முறைகள் தங்கள் பண்பாட்டின் ஒரு முக்கியமான அங்கமாக இருந்தது. தெய்வங்களை மட்டுமல்ல, இயற்கையையே தெய்வமாகக் கருதி, தமிழர் தங்கள் வாழ்வியல் முறையையும் வழிபாட்டு வழக்கங்களையும் இணைத்து வாழ்ந்தனர்.

**நாகரிகம் மற்றும் பொருளாதாரம்**

சங்க காலத்தினர் மிகப்பெரும் நாகரிகத்தை அடைந்து வாழ்ந்தனர். சமூக அமைப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, குடும்பம், குலம், மற்றும் அரசியல் அமைப்புகள் நன்றாக முறையாக வளர்ந்தன. முக்கியமான சமூக அமைப்பு "குடும்பம்" ஆகும், இதில் ஆணும் பெண்ணும் சமமாகக் கருதப்பட்டனர், மற்றும் குடும்ப உறவுகள், மக்களின் அடிப்படை வாழ்வியல் முறையை நிர்ணயித்தன. குடும்பம், காதல், திருமணம் போன்றவை முக்கியமான இடம் பிடிக்கின்றன. அகம் பாடல்கள் காதல், குடும்ப வாழ்வியல், மற்றும் சிறு குடும்ப சிக்கல்களைப் பற்றிப் பேசுகின்றன. பெண்ணிற்கும் ஆணிற்கும் சமமான இடம்

கொடுக்கப்பட்டது, மேலும் பெண்கள் தங்கள் மனம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்த உரிமை கொண்டிருந்தனர்.

சமூக அமைப்புகள் சீரான முறையில் பிரிக்கப்பட்டிருந்தன. வணிகர், வேளாண்மை தொழிலாளர்கள், யாதவர்கள் (மாட்டு வளர்ப்போர்), கைவினைஞர்கள் ஆகியவை பன்முகமாக இருந்தனர். ஒவ்வொரு சமூகத்தினரும் தங்கள் தொழில், பண்பு, மற்றும் கலாசாரத்தில் தனித்தன்மையைப் பேணி வளர்த்தனர். சங்க காலத்தின் பொருளாதாரம் மிகவும் செழித்த நிலையிலிருந்தது. இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தினர். விவசாயம், வணிகம், கைத்தொழில், மற்றும் மாட்டு வளர்ப்பு போன்றவை சங்க காலத்தின் முக்கிய பொருளாதார துறைகளாக விளங்கின.

நெல் பயிர்ச்செய்கை மிக முக்கியமானதாக இருந்தது, ஏனெனில் தமிழ் மண்ணின் பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். மழைக்காலங்கள் நன்கு இருந்தால் நல்ல விளைச்சல் கிடைத்தது. நீர் ஆதாரங்கள், ஆறுகள், ஏரிகள், மற்றும் குளங்கள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றன. புகழ்ந்த மருதம் நிலப்பகுதிகளில் நீர்ச்செய்கைகள் நடைபெற்று வந்தது. புலவர்கள் பாடல்கள் வழியாகவும் விவசாயத்திற்கு பெரும் பாராட்டு கிடைத்தது.

வணிகம் மிகப் பெரிய அளவில் செழித்தது. தமிழர்கள் தமது கடல் கடந்த வணிகத் தொடர்புகளால் உலகின் பல நாடுகளுடன் வணிகம் செய்து வந்தனர். நவமலர், முத்துக்கள், மற்றும் இரும்பு போன்ற பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவர்கள் பரந்த கடல் வணிகப் பாதையில் பண்டை கிரேக்க மற்றும் ரோம நாடுகளுடன் பொருள்கள் பரிமாற்றம் செய்தனர். கடல் வணிகம் தமிழர்களுக்கு செழிப்பை ஏற்படுத்தியது. சங்க இலக்கியங்கள், குறிப்பாக புறம்பாடல்கள், வணிகர்களின் பெருமையை மிகுந்து கூறுகின்றன. தமிழர்கள் சங்க காலத்தில் கைவினைத் தொழில்களில் மிகுந்த திறமையை காட்டினர். பொற்காசுகள், வாள்கள், ஆபரணங்கள், பட்டு உடைகள், மற்றும் பளிங்கு போன்ற கைவினைப் பொருட்கள் மிகப் பிரசித்தியாக இருந்தன. கைவினைகள் இடம், குறிப்பாக, உளுந்தை மற்றும் பருத்தி போன்ற பயிர்களிலிருந்து ஆடைகள் மற்றும் துணிகள் தயாரிப்பது, அதனை மன்னர் மற்றும் வணிகர்களுக்கு விற்கும் பணி பிரபலமாக இருந்தது.

*மாட்டு வளர்ப்பு சங்க காலத்தில் மற்றொரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. மாடு, ஆடு, மற்றும் மின்னியன்கள் வளர்ப்பது, இப்பகுதி மக்களின் பண்ணைப்புற வேலைகளில் அடிப்படையாக இருந்தது. மாடு பால், மண் உரம், மற்றும் ஏராளமான பொருட்களுக்கு பயன்பட்டது. சங்க இலக்கியங்களில், மாட்டுப் பண்ணையினர் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன.*

*சங்க காலத்தில் தமிழர் நாகரிகமும் பொருளாதாரமும் உயர்ந்த நிலையில் இருந்தன. மக்கள் விவசாயம், வணிகம், கைத்தொழில், மற்றும் மாட்டு வளர்ப்பு போன்ற பல துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். சங்க இலக்கியங்கள் அந்தக் காலத்தின் செழுமை, பண்பாடு, மற்றும் பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிக்கின்றன.*

***தொழில்நுட்பமும் அறிவும்:***

*தமிழர்கள் தொழில்நுட்பத் திறனிலும் அறிவில் சிறந்தவர்களாக விளங்கினர். குறிப்பாக கட்டிடக் கலை, உலோக பண்பாடு, நடப்பியல் போன்றவற்றில் அவர்கள் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தனர். தமிழ் இலக்கியங்கள் அவர்களின் அறிவுத் திறனையும் நவீனத்தையும் வெளிப்படுத்துகின்றன. விவசாயத் தொழில்நுட்பத்தில் நீர் மேலாண்மை, மருந்தியல், மற்றும் பருத்தி, உளுந்து போன்ற பயிர்களை வளர்க்கும் முறைகள் ஆழமாகத் தெரிய வருகின்றன. மழைநிலங்களில் சதுரகோணம் முறையில் நிலங்களை மண் அறுக்கவும், உழவுக்கு தேவையான கருவிகளை உருவாக்கவும் தொழில்நுட்பப் புதுமைகள் இருந்தன.*

*சங்கக் காலத்திற்கேற்ப கைத்தொழில் மிகுந்த வளர்ச்சியடைந்தது. கைவினைஞர்கள் துணிகளுக்கு, கல்லுப்பொருட்களுக்கு, தங்கம் மற்றும் வெள்ளியைப் பயன்படுத்தி அழகிய ஆபரணங்கள், கைரேகைகள், மற்றும் உலோகக் கருவிகள் உருவாக்கினர். சுதந்திரம் பெற்றவர்கள் தங்களின் கைவினைச் செயல்களில் மிகவும் திறமையானவராக இருந்தனர். கோவில்கள், வீடுகள், மற்றும் குடியிருப்புகள் ஆகியவை உயர் தரமான கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டன. அவற்றில் அழகான பொற்கொலை மற்றும் மரக்கட்டிடக் கலைகளும் காணப்பட்டன. மக்கள் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செழிப்பான நகரங்களை உருவாக்கினர். இயற்கை, வானியல், மற்றும் வேதியியல் போன்ற துறைகளில் தமிழர்கள் பெரும் ஆர்வம் காட்டினர். மரபுவழியாக*

கற்றுக் கொண்ட அறிவியல் செயல்முறைகள், பருத்தி மற்றும் உளுந்து போன்ற விவசாயப் பொருட்களைப் பயன்படுத்துவதில் தெரிய வருகிறது. மேலும், மருத்துவவியல் துறையில் உள்ள அறிவியல் புதுமைகள் கசாப்சிரியில் உள்ள விலங்குகளின் மருத்துவம், மூளைக்கு போதிய மருந்துகள் ஆகியவை உருவானது. சங்க காலத்தில் தொழில்நுட்பமும் அறிவும் பெரிதும் வளர்ந்திருந்தது. விவசாயம், கைத்தொழில், கட்டிடக்கலை, மற்றும் அறிவியல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தமிழர்களின் நாகரிகத்தை செழுப்பாக்கின. இதனால், சங்க காலத்தின் மரபுகளைத் தொடர்ந்து இன்று வரை தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்கிறது.

சங்க காலம் தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, அறம் மற்றும் வீரத்தை மையமாகக் கொண்டிருந்த ஒரு துல்லியமான வரலாற்றுக் காலமாகும். இது தமிழர்களின் வாழ்வியல் முறையையும், அறிவையும் ஆழமாகப் பிரதிபலிக்கிறது.சங்க காலத்தில் தமிழர் பண்பாடு பல்வேறு கூறுகளால் அடிப்படையைக் கொண்டதாக இருந்தது, இது இக்காலத்தின் செழுமையைப் பதிவுசெய்தது. அங்கு உள்ள கல்வி, கலை, அறிவியல், மற்றும் சமூக அமைப்புகள் அனைவருக்கும் உள்ளடக்கிய ஒரு சூழலை உருவாக்கின. இக்காலம், தமிழர்களின் வரலாற்றில் மட்டுமல்லாமல், உலகளாவியமாகப் பெருமிதத்தை ஏற்படுத்தியுள்ளது. சங்க காலத்தில் தமிழர்களின் பண்பாட்டின் செழுமை இன்று நம்மை ஆழமாகப் பிரபலமாக்கும் உருப்படியாக மாறியுள்ளது, மேலும் இது எதிர்கால சந்ததிக்கு ஒரு போதுமான அடிப்படையாக அமைந்துள்ளது.

**நூற்பட்டியல்**


1. சங்க இலக்கியமும் சமூகமும் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் (2007)
2. சரளா ராஜகோபாலன் (2002), சங்க இலக்கியம்,, ஒளி பதிப்பகம் , சென்னை , இந்தியா .
3. அருணாச்சலம்,ப.(முதன்மைப் பதிப்பாசிரியர்)., சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி மூன்று, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (2001).
4. சோமசுந்தரனார், பொ.வே., ஐங்குறுநூறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2009).
5. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., புறநானூறு (பகுதி I, II ), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, (2007).

6. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர்.அ., நற்றிணை நானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2007).

7. கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (தலைமைப்பதிப்பாசிரியர்கள்)

8. குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட்., சென்னை, (2007).

9. பரிமணம், அம .பாலசுப்பிரமணியன், கு. வெ. (தலைமைப் பதிப்பாசிரியர்கள்) பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).

10. பரிமணம், அ. ம, பாலசுப்பிரமணியன். கு. வெ. (தலைமைப் பதிப்பாசிரியர்கள்) புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).

11. பாலசுப்ரமணியன், கு.வெ. தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2019).

12. ராஜம், மர்ரே எஸ்., பரிபாடல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (1981).

13. வேங்கடசாமி நாட்டார், ந.மு., வேங்கடசாமி பிள்ளை, ரா. அகநானூறு-(களிற்றியானைநிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், QESITSST, (2009).

14. சிவசுப்பிரமணியன், ஆ. 2016. சங்ககால உழுதொழிலின் தோற்றமும் வளர்ச்சியும். புதிய ஆராய்ச்சி. இதழ் 5: 181-197.

15. பக்தவத்சல பாரதி (ப-ர்). தமிழர் உணவு. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம். (2011).

16. மானிடவியல் கோட்பாடுகள். புத்தாநத்தம்: அடையாளம்(2011)

17. மணவழகன், ஆ. பழந்தமிழர் தொழில்நுட்பம். சென்னை: அய்யனார் பதிப்பகம். 2010.

18. மணி, ஆ.தொ-ர்).தமிழர் உணவுகள். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம். 2010.

19. மாதையன், பெ. சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம். சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ். 2010.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவல்சல பாரதி பண்பாட்டு மானுடவியல், ப.34.
2. ஐங்குறுநூறு பாடல் எண். 203.
3. புறநானூறு பாடல் எண். 119.
4. சிறுபாணாற்றுப்படை 175-177.
5. புறநானூறு பாடல்,326

*6. திருக்குறள் எண்.81.*

*7. திருக்குறள் எண்.82,*

*8. புறநானூறு பாடல்,333*

*9. ஐங்குறுநூறு பாடல்,2*

*10. புறநானூறு பாடல்.319.*

*11. புறநானூறு பாடல்.319.*

*12. பதிற்றுப் பத்து பாடல் 12, வரி 15.25*

*13. புறநானூறு பாடல்.189.*

*14. பதிற்றுப் பத்து பாடல்.20 -30.*

*15. பெரும்பாணாற்றுப்படை பாடல், 23-28.*

*16. நற்றிணை பாடல்,214,*

*17. குறுந்தொகை பாடல், 167*

# செப்பேடுகள் மூலம் அறியலாகும் பாண்டிய மன்னர்களின் வரலாறு

# *HISTORY OF THE PANDYAN KINGS AS KNOWN THROUGH THE SEPPADS*

**த. முத்துகிருஷ்ணன்**
*பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை*
*அண்ணாமலை பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர்*
*சிதம்பரம் 608 002, தமிழ் நாடு*

***முனைவர்.க.குமரன் (மாற்றுப் பணி)***
*உதவிபேராசிரியர்,வரலாற்றுத்துறை*
*திரு.வி.க.அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர்*

**ஆய்வுச் சுருக்கம்**

*பாண்டியர் செப்பேடுகள் என்பது பாண்டிய வேந்தர்கள் கொடுத்த நில தானங்களையும், தன் முன்னோர் நில தானங்களை ஆவணப்படுத்தவும் உருவாக்கப்பட்ட பட்டயங்களாகும். பாண்டியர் செப்பேடுகளில் இடைக்கால மற்றும் பிற்கால பாண்டியர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட ஏழு செப்புப்பட்டயங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தன. இவை கிடைக்காமல் போயிருந்தால் களப்பிரர் ஆட்சியைத் தமிழ்நாட்டில் வேரறுத்த பாண்டியர் வேந்தன் கடுங்கோன் பற்றி வரலாறு அறியாமலேயே போயிருக்கும். இடைக்கால மற்றும் பிற்கால பாண்டியர்களின் காலங்களைக் கணிப்பதற்கும், முறைப்படுத்துபவதற்கும் வகையிலாமல் போயிருக்கும்.*

**திறவுச் சொற்கள்:**

**இளையன்புதூர் செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடுகள், திருவரமங்கலத்துச் செப்பேடுகள், சின்னமனூர் செப்பேடுகள்**

***Abstract***

*Pandyar seppeds are charters created to document the land grants made by Pandyan vendars and the land grants of their ancestors. Among the Pandyan copperplates, the seven copperplates issued during the medieval and later Pandyan period*

*are of historical importance. Had these not been available, history would have gone without knowing Pandyar Vendhan Katungon, who rooted Kalaprar rule in Tamil Nadu. To estimate the periods of medieval and later Pandyas*

***Keywords:***

*Ilayanpudhur inscriptions, Velvikkudi inscriptions, Thiruvaramangalam inscriptions, Chinnamanur inscriptions.*

**முன்னுரை**

கல்வெட்டுகளைப் போலவே கொடைக்கான ஆவணங்களாக விளங்குவது செப்பேடுகள் செப்பு ஏடுகள் செப்பேடுகள் என்று வழங்கப்படுகின்றன. சிறப்பை உருவாக்கி செப்பேடுகள் செய்யும் வழக்குமே பழங்காலத்தில் தகடுகளை தட்டி நீட்டி அதிலுள்ள எழுத்துக்களை அளித்துவிட்டு செப்பேடுகள் செய்யப்பட்டுள்ளன. பழங்காலத்தில் ஓலை வடிவில் செவ்வகமாக இருந்த செப்பேடுகள் காலப்போக்கு சதுர வடிவிலும் நீள் சதுர வடிவிலும் செய்யப்பட்டுள்ளன. செப்பேடுகளின் இடது பக்கத்தில் ஒரு துளைத்து அவை இணையும் இடத்தில் வட்ட வடிவில் அரசர்கள் முத்திரைகள் இருக்கும்.பாண்டியரைப் பற்றிக் கூறுவனவற்றுள் காலத்தால் முந்தியன மெகச்தனீசர் எழுதிய இந்திகா , சாணக்கியனின் அர்த்தசாத்திரம், அசோகனின் கல்வெட்டுக்கள் என்பனவாம். பாண்டியர் மதுரை, நெல்லை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் ஆண்டார்கள். பாண்டிய நாடு பருத்திக்கும் முத்துக்கும் பெயர்பெற்ற நாடாகும். பிளினி பாண்டிய நாட்டைப் பற்றிக் கூறியுள்ளார். கி. மு. 40-லிருந்து கி. மு. 30 வரை ஈழ நாட்டைப் பாண்டியன் ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. ஒரு பாண்டிய மன்னன் ரோம் நாட்டுக்கு அகச்டசுசீசர் காலத்தில் ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. கி.பி. 300 முதல் 600 வரை ஆண்ட பாண்டியரைப் பற்றி அறிய ஒருவிதச் சான்றும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் களப்பிரர் ஆட்சியே. அதுமட்டுமல்ல; சோழரும் பல்லவரும் தத்தம் ஆட்சிக் காலங்களில் பாண்டியரைத் தலைதூக்கவொட்டாது அடக்கி ஒடுக்கியமையும் ஒரு காரணமாகும். பல்லவரும் பிறரும் எவ்வளவோ அடக்கியும் பாண்டியர்கள் கி. பி. 600-இல் தமக்கென ஒரு தனியரசை ஏற்படுத்திக்கொண்டனர். கி.பி. 600 முதல் 800 வரை ஆண்ட பாண்டியர்களைப் பற்றி நாம் அறியப் பெருந்துணை புரிவன பாண்டியன் நெடுஞ்சடையன் வெளியிட்ட

வேள்விக்குடிப் பட்டயமும், பிற பாண்டியர் பொறித்த கல்வெட்டுக்களுமாம்.

**பாண்டியர் காலத் தமிழகம்**

பாண்டியர் ஆட்சி முறை சோழர் ஆட்சி முறையைப் போன்றதே. கிராமச் சபைகளிடமே கிராம ஆட்சி இருந்தது. பெரும் பெரும் அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. தமிழ் நாட்டுக்கோவில், பண்பாட்டின் உறைவிடமாகவும், மடங்கள் கல்விக் கழகங்களாகவும் திகழ்ந்தன. சைவ வைணவ சமயங்களோடு சமணமும் பௌத்தமும் வளர்ந்தன. அரபு நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் இடையே சிறந்த வாணிகம் நடந்தது. அரேபியர்கள் பாண்டிய நாட்டில் காயல் பட்டினத்தில் குடியேறினர். பாண்டிய நாட்டுக் கடற்கரை அவர்களால் மலபார் என்று அழைக்கப்பட்டது. இந்தச் சொல்லே பின்பு கொல்லத்திலிருந்து நெல்லூர் வரையிலுள்ள கடற்கரையைக் குறிக்கலாயிற்று. பாண்டிய, சோழர் காலக் கல்வெட்டுக்கள் அக்கால மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றை அறியப் பேருதவி புரிகின்றன. தமிழர்கள் இந்த இடைக்காலத்தில் சாதிகளாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். தேவதாசிகள் சமுதாயத்தில் மிகுந்த உரிமையோடு உலவினர். அஃதோடு அவர்கள் பல அன்பளிப்புகளும் தந்தனர். அடிமைமுறை அக்காலத்தில் நிலவியது. திருமறைக்காட்டிற் காணப்படும் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுக்கள் இரண்டு, ஆரியன்பிச்சன் என்பான் 5 ஆண்களையும், 5 பெண்களையும் 1000 காசுக்கு விற்றதாகக் கூறுகின்றன. சதியும் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

இரண்டாம் பராந்தகனின் மனைவியாகிய வானவன் மாதேவியும், ஒரு மல்லன் மனைவியாகிய தேக்கபியும் உடன்கட்டை ஏறியதாகத் தெரிகிறது. சாதிவெறி அக்காலத்தில் கடுமையாகவே இருந்தது; நிலங்கள் மன்றங்களுக்கும், தனியாருக்கும் சொந்தமாய் விளங்கின. வைரமேகதடாகம், வீர சோழன், கீர்த்தி மார்த்தாண்டன் முதலிய குளங்களாலும், கால்வாய்களாலும் வேளாண்மை செழிப்பாக நடைபெற்றது. கோவில்கள் மிகவும் சீரும் சிறப்பும் கொண்டு திகழ்ந்தன. கோவிற்குப் பல ஆயிரம் பணம் பெறுகின்ற நகைகள் தேவைப்பட்டன. இதனால் நகைக்கலை செழித்தது. காஞ்சியிலும், மதுரையிலும் கைத்தறித் தொழில் ஓங்கியது. குமரி முனையிலும், மரக்காணம் (தென்னார்க்காடு) என்ற இடத்திலும் உப்பளங்கள் மிக்கு விளங்கின. நாட்டில் பொதுவாக

*நிலவிய வட்டி விகிதம் 12 1/2%. உறுதித் தாள்கள் (Promissory notes) நடைமுறையில் இருந்தன. 72 தானிய எடை உள்ள காசு அல்லது மடை என்ற தங்க நாணயமும் அக்காலத்தில் பழக்கத்திலிருந்தது.*

*காசு என்பது அரைப்பொன். கழஞ்சு என்பது நாணயமாக வழங்காத தங்கமாகும். நாணயங்களில் வில், கயல், புலி பொறிக்கப்பட்டிருந்தன. மேலை நாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும் இடையே பெருத்த வாணிகம் நடைபெற்றது. மூன்று தூதுக் குழுக்களைச் சீனாவிற்குப் பாண்டியன் அனுப்பினான். இக்காலத்தில் சைவமும் வைணவமும் நன்கு வளர்ந்தன. சமயப்பொறை நிலவியது. எனினும் சில போழ்து சமய வெறியும் கொலைகள் பல நடத்தியது. காளமுகம், பாசு பதம், கபாலிகம் முதலியனமிகுந்த செல்வாக்கோடு உலவின. மடமும், கோவிலும் பண்பாட்டுக்கும் கல்விக்கும் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. சுருங்க உரைப்பின், அக்காலக் கோவில்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகளாகவும், நிதியகங்களாகவும், செழுங்கலை நிலையங்களாகவும், கலைக் கண்காட்சிகளாகவும், பொருட்காட்சி சாலைகளாகவும், மருந்தகங்களாகவும், அற நிலையங்களாகவும் திகழ்ந்தன. பெரும்பாலான கோவில்களில் நூல் நிலையங்கள் இருந்தன. நாடகமும், நடனமும் நன்கு வளர்க்கப்பட்டன. நெல்லைக்கருகிலுள்ள பத்தமடைக் கல்வெட்டு ஒன்று, திருவிழாக்களில் நடனமாடவும், நாடகம் நடிக்கவும் ஒரு நடன மங்கைக்கு நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது எனக் கூறுகிறது. சமண, பௌத்த சமயங்களும் ஓரளவுக்கு அடியார்கள் மிகப்பெற்றிருந்தன. சமணம் பௌத்தத்தைவிட நன்கு செல்வாக்கோடு திகழ்ந்தது என்னலாம்.*

*இடைக்காலத்திலே தமிழிலக்கியமும் ஓரளவுக்கு வளர்ச்சிபெற்றது என்னலாம். சமண, சைவ, பௌத்த, வைணவ அடியார்களால் பல அழகிய தமிழ் நூற்கள் எழுதப்பட்டன. திருத்தக்க தேவர் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணியை எழுதினார். சிதறிக் கிடந்த சைவ நூற்களைத் திருமுறை என ஒரு ஒழுங்குபடத் தொகுத்து வகுத்தது கி. பி. 1100-லேதான். சேக்கிழார் தித்திக்கும் பெரிய புராணம் எழுதியது இக்காலத்தில்தான். அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் வாழ்ந்தது இக்காலத்திலேதான். வீரசோழியம் பிறந்தது இந்தக் காலத்திலேதான். யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம், கலிங்கத்துப்பரணி, இராமகாதை, மூவருலா, நளவெண்பா போன்ற தமிழ்ப் பெருநூல்கள் இந்த இடைக்காலத்திலே தான் எழுந்தன. குணவீரபண்டிதரால் நேமிநாதம் இக்காலத்திலேதான் எழுதப்பட்டது.*

நன்னூல் என்னும் பொன்னூல் தோன்றக் காரணமாக இருந்தது இந்த இடைக்காலமே. தண்டியலங்காரம் என்னும் அணிநூல் இக்காலத்திலேதான் எழுந்தது. சுருங்க உரைப்பின் இடைக்காலம் என்பது தமிழ் மொழி வரலாற்றிலே ஒரு திருப்பு மையம் என்று கூறலாம்.

**மெகெகசுதெனீசு கண்ட பாண்டிய நாடு**

வரலாற்றிகளின் தந்தை என்று அழைக்கப்படும் ஹெரோடோட்டஸ் முதன் முதலில் தென்னிந்தியாவை பற்றிய குறிப்புகளை பதிவு செய்தார். அதற்குப் பிறகு மெகஸ்தனிஸ் தன்னுடைய குறிப்புகளில் பல ஆதாரங்களை அந்த கால சூழ்நிலையை விளக்கி காட்டி இருக்கிறார். சிந்து நதியை எட்டிப் பார்த்துவிட்டு இந்தியாவை கண்டுபிடித்து விட்டேன் என்று சொல்லித்திருந்தவர்களிடம் இல்லை நான் கண்டது கையளவு நீர் கடலை காண வேண்டுமானால் இங்கு வாருங்கள் என்று தென்னிந்தியாவிற்கு உற்சாக அழைப்பு விடுத்திருக்கிறார் மெகஸ்தனிஸ். அவருடைய முதல் குறிப்பு தெற்கின் இயல்பை சுட்டிக்காட்டி விடுகிறது .ஆரம்பம் முதலே வடக்கு எந்த வழியில் செல்கிறது என்று கவனித்து நேர் எதிரான வழியில் செல்வதன் தெற்கு என்று அவர் குறிப்பிடுவது போல் அவருடைய குறிப்புகள் அமைந்திருக்கிறது.அலெக்ஸாண்டரின் வருகைக்குப் பிறகு இந்தியாவின் அரசியல் சூழ்நிலை வெகுவாக மாறி இருக்கிறது கிமு 326 இல் அலெக்சாண்டர் வந்த பிறகு பல கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வருகை தந்திருப்பதை அறிய முடிகிறது. அதில் சந்திரகுப்தரின் அவையில் இருந்த மெகஸ்தனிஸ் இண்டிகா எனும் நூலை எழுதினார். அதில் சிறு,சிறு பகுதிகள்தான் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவருக்கு பின்வந்த எழுத்தாளர்கள் அந்தப் பகுதியை மேற்கோள் காட்டி எழுதி வந்திருக்கிறார்கள். மௌரிய நிர்வாக அமைப்பை பற்றியும் மௌரியர் காலத்து சமூகப் பிரிவுகள் பற்றியும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் பல அறிய தகவல்களை தனது இண்டிகாவில் எழுதியிருக்கிறார். பிறகு கிபி முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் பல கிரேக்க, ரோமானிய கடல் பயணிகள் இந்திய நாட்டின் துறைமுகங்கள் பற்றி பல குறிப்புகளை தந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.(மெகெகசுதெனீசு) (கிமு 350 - கிமு 290) ஒரு கிரேக்கப் பயணியும், புவியியலாளரும் ஆவார். இவர் இண்டிகா என்னும் நூலை எழுதினார். ஆசியா மைனரில் பிறந்த இவர், பாடலிபுத்திரத்தில் இருந்த சந்திரகுப்த மௌரியனின் அரசவையில், செலுசிட் பேரரசர் செலுக்கசு நிகோடரின் தூதுவராக இருந்தார். இவர் அங்கு தூதுவராக இருந்த காலம்

*தெளிவாகத் தெரியாவிட்டாலும், இது சந்திரகுப்தன் இறந்த ஆண்டான கிமு 288 க்கு முன்னர் என வரலாற்றாளர்கள் கூறுகின்றனர்.*

*வட இந்தியாவை ஆண் கடவுள்கள் உருவாக்கி இருக்க தென்னிந்தியாவை மட்டும் பெண் கடவுள்கள் படைத்திருக்க முடியுமா என்று அவர் குறிப்பிடும் வாசகங்கள் பாண்டிய நாட்டில் பெண்களை ஆட்சிபீடத்தில் வைத்து ஆட்சி செய்த குறிப்புகளை நமக்கு வரலாற்று பூர்வமாக உணர்த்தி இருக்கிறது. இது மதுரையில் ஆட்சி செய்த பாண்டியர்கள் அன்று அவர்களின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு இருந்தது என்றும் பாண்டிய மன்னர்கள் அரசியர் தலைமையில் ஆட்சி செய்ததையும் பாண்டிய நாட்டு அரசு 13,000 காலர் படைகளும் 4000 குதிரைப்படைகளும் 400 யானைகளும் இருந்ததாக மெகஸ்தனிஸ் பதிவு செய்திருக்கிறார். தென்னிந்தியா தாய் வழி சமூகமாக இருந்திருப்பதை இந்த ஆதாரத்தின் மூலமாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது. பாண்டிய நாட்டின் ஆட்சி பகுதி குறித்து கிடைக்கும் தகவல்களில் அது முத்துக்கள் நிறைந்து பலர் முத்து வாணிபம் செய்ததையும் அலெக்ஸாண்டர் வருவதற்கு முன்பு முத்து கருப்பா, சிவப்பா என்பது கூட கிரேக்கர்களுக்கு தெரியாது. என்றும் பாண்டிய நாட்டின் முத்துக்களை பார்த்த பிறகுதான் அவர்கள் அதை கண்டு வியந்து போனார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். இந்தியாவிலேயே பாண்டிய நாட்டில் தான் அதிக முத்துக்கள் கிடைக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அர்த்த சாஸ்திரத்திலும் பாண்டியர்களின் தலைநகரமாக மதுரை இருந்து இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் மதுரையில் பட்டு, தந்தம், மிளகு ஆகியவை அதிக அளவில் வணிகம் செய்யப்பட்டதையும் முத்துக்கள் அங்கு வெகு பிரபலமாக இருந்ததையும் மெகஸ்தனி குறிப்புகள் மூலமாகவும் அர்த்தசாஸ்திர மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.*

*பாண்டிய நாட்டில் கடலுக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒரு தீவிலும் வாழ்ந்த மக்கள் முத்துக்களை இங்கு கொண்டு வந்து வழங்கி இருப்பதையும் அதிசயத் தீவு என்றும் குறிப்பிடுகிறார். மேலும் மெகஸ்தனிஸ் பனைமர தோப்பு மதுரையில் அதிகம் இருந்ததையும் பனை மரங்கள் மிக நீண்டு வளர்ந்திருப்பதையும் பாண்டிய மன்னர்கள் பெரிய தோட்டங்களை வைத்து பராமரித்ததையும் பாண்டி நாட்டு மக்கள் மீன்பிடிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்திருப்பதையும் மெகஸ்தனிஸ் பதிவு செய்திருக்கிறார்.*

## தமிழ்ச் செப்பேடுகள்

தமிழ்ச் செப்பேடுகள், பல்வேறு தென்னிந்திய அரச மரபினரால், தனிப்பட்டவர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட, ஊர்கள், வேளாண்மை நிலங்கள் மற்றும் வேறு கொடைகள் குறித்த பதிவுகள் ஆகும். தமிழ் நாட்டின் வரலாற்றை மீளுருவாக்கம் செய்வதில் இச் செப்பேடுகள் பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை ஆகும். தமிழ்ச் செப்பேடுகள் தொடர்பான கொடைகள் கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும், சாளுக்கியர், சோழர், விசயநகர அரசர்களின் காலத்தைச் சேர்ந்தவை. மத்தியகாலத் தென்னிந்தியாவின் சமூக நிலை பற்றி அறிவதற்கு உதவுவதால் இவை கல்வெட்டியல் தொடர்பில் மிகப் பெறுமதியானவை. அத்துடன், தென்னிந்திய அரச மரபினர் தொடர்பான வரலாற்றில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதிலும் இவை பெரிதும் துணை புரிகின்றன.

## இளையன்புதூர் செப்பேடுகள்

இளையன்புதூர் செப்பேடுகள் எனப்படுபவை கி.பி.726 ஆம் ஆண்டு முற்கால பாண்டிய அரசனான அரிகேசரி பராங்குசன் மாறவர்மனின் 36 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடுகள் ஆகும்.இந்த செப்பேடுகள் மதுரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த செப்பேடுகள் மூலம் முற்கால பாண்டியர் வரலாறு குறித்த செய்திகள் கிடைத்துள்ளன.வடிவம்பலம்ப நின்ற பாண்டியன் வழி வந்த ஜயந்தவர்மன் என்ற மன்னன மகன் அரிகேசரி பராங்குசன் மாறவர்மன், ஆசி நாட்டு கம்பலை என்னும் மறவனை வென்று அவன் நிலத்தை அரசுடைமையக்கினான். காடாக கிடந்த அந்த நிலங்களை கி.பி. 726 ஆம் ஆண்டு சீரமைத்து இளையன்புதூர் என்று பெயரிட்டு பாரத்வாஜி நாராயணபட்ட சோமாயாஜி என்னும் அந்தணருக்கு கொடை வழங்கி செப்பெடும் வெட்டித்தந்தான் எனவும் அந்த நிலத்தின் நான்கு பக்க எல்லைகளும் இந்த செப்பெட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.சேந்தன் மகனாகிய அரிகேசரி பராங்குசன் மாறவர்மனை சேந்தமாறன் என்றும் தேர்மாறன் என்று செப்பேடு கூறுகிறது.

இந்த செப்பேடு இரணியகற்பம், துலா பாரம் செய்து கொடை கொடுத்தான் எனவும், களக்குடி என்ற ஊரில் அரிகேசரி ஈஸ்வரம் என்ற

*சிவாலயத்தை கட்டி எழுப்பினான் எனவும் கூறுகிறது. பாண்டி பெரும்பணைக்காரன் மகன் அரிகேசரியே, சின்னமனூர் செப்பேட்டையும் எழுதி இருக்கலாம் ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.வைகைக்கரை, ஏனாதி ஆகிய ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகள் இந்த மன்னனின் 50 ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. வேள்விக்குடி மற்றும் சிறிய சின்னமனூர் செப்பேடுகளில் கூறப்பட்ட செய்திகள் இந்த செப்பேடுகளிலும் ஒன்றி வருகிறது என ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. இந்த மன்னன் பெயரால் சின்னமனூர் அரிகேசநல்லூர் என அழைக்கப்படுகிறது.*

**வேள்விக்குடி செப்பேடுகள்**

*சங்ககாலத்தில் தானம் வழங்கிய நிலத்தைக் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்குப் பிறகு சான்று காட்டிப் பெற்றுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய மன்னர் பெருவழுதியின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளதும், சங்க காலப் பாண்டியர்க்குப் பின் தமிழகத்தைக் களப்பிரர் ஆட்சி செய்தனர் என்பதற்கான அரிய சான்றாக அமைவதும் இச்செப்பேட்டின் சிறப்பாகும். இச்செப்பேடு இல்லையெனில் சங்க காலத்திற்குப் பிறகு ஆட்சி செய்த ஆறுக்கும் மேற்பட்ட பாண்டிய மன்னர்களின் சிறப்புகளும் விவரங்களும் அறியப்படாமலேயே போயிருக்கக்கூடும். வேள்விக்குடி என்ற ஊர் சங்க காலத்தில் (பொ.ஆ.மு.300) கொற்கைக் கிழான் நற்கொற்றன் என்ற அந்தணர்க்குப் பல்யாக முதுகுடுமி பெருவழுதி என்ற பாண்டிய மன்னால் வழங்கப்பட்டுள்ளது. நடுவிலே நாட்டின் ஆட்சி களப்பிரரிடம் மாறியிருந்தது. அந்நாளிலே தானக்கிராமத்தை அந்த வேற்று அரசாங்கம் கைப்பற்றிவிட்டது. மீண்டும் பாண்டிய வம்சத்தின் அரசு நிறுவப்பட்ட பிறகும் நெடுங்காலம் கழித்தும் (கிட்டத்தட்ட 500 ஆண்டுகள்) அந்த ஊர் முதலில் தானம் பெற்றவனுடைய வம்சத்தாருக்குக் கிடைக்கவில்லை. பாண்டியர் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டு 6 அரசர்களின் காலம் முடிந்து 7-ஆம் அரசனான பராந்தக நெடுஞ்சடையனுடைய ஆட்சியிலேயே முன்னர்த் தானம் பெற்ற அந்தணரின் வாரிசு அச்செய்திகளை அரசரிடம் கூறுகின்றார். மீண்டும் அவ்வூர் பராந்தக நெடுஞ்சடையனின் காலத்தில் (பொ.ஆ. 8-ஆம் நூற்றாண்டில்) சான்றுகளைக் காட்டியப் பிறகு அந்தணரின் வாரிசுக்குக் கொடையாக வழங்கப்படுகிறது. இதுவே இதன் செய்திச் சுருக்கமாகும்.*

### சின்னமனூர் செப்பேடுகள்

*சின்னமனூர் செப்பேடுகள், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூர் பகுதியில் கிடைக்கப்பெற்ற மூன்று செப்பேடுகள் ஆகும். இந்தச் செப்பேடுகளில் பாண்டிய மன்னர்களைப் பற்றிய புராணக்கதைகளும், பராக்கிரமச் செயல்களும் கூறப்பெற்றுள்ளது. இந்தச் செப்பேடுகளில் குறிக்கும் ஆணத்தி எனப்படுபவர் பாண்டிய மன்னரின் தலைமை அமைச்சரான குண்டூர்த்தாயன்சிங்கன் ஆவான். இச்செப்பேட்டை எழுதிவித்தவர் பாண்டிப்பெரும் பணைக்காரன் மகன் அரிகேசரி ஆவான். மூன்று செப்பேடுகளும் பராந்தக நெடுஞ்சடைன்யனால் அளிக்கப்பட்டது.*

*சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள், பாண்டிய மன்னர் இரண்டாம் இராசசிம்மன் வெளியிட்ட இச்செப்பேடு ஏழு ஏடுகளைக் கொண்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் பெற்ற வெற்றியும், அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கிபி 650 - 700) பிறகு அவனுடைய வழித்தோன்றல்களான முதலாம் வரகுணன், ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், சடையவர்மன் இரண்டாம் வரகுணன் போன்ற பாண்டிய மன்னர் குல மரபும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.*

### தாருகாபுரம் செப்பேடு

*தென்காசிப் பாண்டியர் எல்லைக்குட்பட்ட மலையங்காட்டுப் பகுதியில் தீயவனும், மிருகத்தன்மையுடையவனுமான சந்திரன் என்ற ஒரு எதிரி இருந்ததாகவும் அவன் பல அரசர்களை கொன்று வந்ததாகவும் அவனை கொண்டையன் கோட்டடை மறவரின் ஒருவனான திருவண்ணாத் தேவர் வெட்டி வெற்றி கண்டனையால் திருவண்ணாதேவர்க்கு இந்திரத்தலைவன் என்று பட்டம் தரப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. இவருக்கு நிலமை காணியாட்சியாக, உம்பளச் சர்வமானியமாக 22-க்கு மேற்பட்ட கிராமங்கள் வழங்கப்பட்டன.*

### முடிவுரை

*பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள், வம்சாவழி(பரம்பரை), போர்க்குறிப்புகள், மரபு வழிக்கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகத் தகடு ஆகும். இவை தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல்*

*சான்றுகளாக இருந்து வருகின்றன. இவற்றில் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கும் 280 செப்பேடுகளை படியெடுக்க -முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இயற்கையாக ஓலைச்சுவடிகள் அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை. எனவே பண்டைய மக்கள் செப்பேடுகளைப் படிக்கவும் பாதுகாக்கவுமின்றிப் பூமியில் புதைத்து வைத்தனர். மேலும் பல செப்பேடுகள் உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்துக்காக பல செப்பேடுகள் அழிக்கப்பெற்றன. இவற்றை மீறி சில செப்பேடுகள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டன. செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டோ அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியது என்று கூறமுடியாது. ஏனெனில் செப்பேடுகளை எடுத்துச் செல்வது எளிமையாக இருப்பதன் காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுபட்ட தொலைவான இடங்களில் கூடக் கிடைக்கலாம்.*

**ஆதாரங்கள்**


1. *தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, பக்கம்-448,*
2. *கந்தையா பிள்ளை, ந. சி., காலக்குறிப்பு அகராதி, வெளியீடு ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960*
3. *பராந்தக பாண்டியனும் அவனது மகனும் (கி.பி. 885-920)". தமிழ் இணையப் பல்கலைக்கழகம்*
4. *பாண்டியர் வரலாறு ஆசிரியர்:T.V.சதாசிவ பண்டாரத்தார் பக்கம்:88 பதிப்பகம்:நாம் தமிழர் பதிப்பகம்,சென்னை,5. Ins.117 of 1907*
5. *S.I.I. Vol. VII,Nos.459,55, 793 and 128*
6. *பாண்டியர் வரலாறு ஆசிரியர்:T.V.சதாசிவ பண்டாரத்தார் பக்கம்:88 பதிப்பகம்:நாம் தமிழர் பதிப்பகம்,சென்னை,5*
7. *முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி, ப. எண் 91-95.*
8. *சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி, ப.எண். 51-55*


MAHIZH PATHIPAGAM

# சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

## *HOSPITALITY IN SANGAM LITERATURE*

**பா.விக்னேஷ் குமார்**
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை*
*எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*திருவேற்காடு சென்னை –600077*

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைய தமிழர்களின் பண்பாட்டினை அறிந்துகொள்ள உதவும் வரலாற்றுப் பெட்டகமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் அரசர்களின் அரசியல் சிறப்புகளையும், மக்களின் வாழ்வியல் விழுமியங்களையும் மக்கள் மானுடத்துடன் மட்டுமில்லாது மானுடம் அல்லாத பிற உயிர்களிடமும் எவ்வாறு அன்புடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதையும் விவரிக்கின்றன. சங்கத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்ந்த நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைகளாகப் பிரித்ததுள்ளனர். இந்நிலங்களுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறை மாறுபட்டிருந்தன என்பதையும் இவ்விலக்கியங்கள் வாயிலாக உணர முடிகிறது. இத்தகைய சிறப்பு மிக்க தமிழ் முன்னோர்கள் தம் வாழ்வில் பின்பற்றி நடந்த அறங்களில் ஒன்றாகத் திகழும் விருந்தோம்பல் என்னும் பண்பினைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச் சொற்கள்**

*தமிழ், இலக்கியம், சங்க்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், விருந்தோம்பல்*

***Abstract***

*The ancient Tamil epics serve as a treasure trove of knowledge about the culture and traditions of our ancestors. These epics not only reveal the political and social excellence of rulers but also portray the daily lives, struggles, and relationships of common people, as well as their bond with nature and other living beings. The Sangam Tamil people categorized their land into five regions: Kurinji, Mullai, Marutham, Neythal, and Palai. The way of life in these regions was unique and distinct, shaped by the natural*

*environment. Our literature takes us through this world, revealing the values and principles that our ancient sages and leaders lived by. This article explores the significance of the concept of "Virundhoompul" (hospitality) in the lives of our ancient Tamil forebears, highlighting the importance of morality, ethics, and way of life.*

***Keywords***

***Tamil, Literature, Sangha Literature, Tamil Culture, Tamil Civilization, Hospitality***

**தன்னலம் அற்றது விருந்தோம்பல்**

பண்டைய காலத் தமிழர்கள் தனக்கு என்ற தன்னலம் உடையவர்களாக இல்லாது அனைவருக்கும் வேண்டும் என்ற பொதுநலம் உடையவர்களாகவாழ்ந்துள்ளனர். ஏனெனில் இல்லறக் கடமைகளில்ஒன்றாக விருந்தோம்பலைக் கருதியுள்ளனர். இது தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படும் ஊடல் தீர்க்கும் பாலமாகவும் திகழ்ந்துள்ளது. விருந்தோம்பலின் சிறப்பினை நற்றிணைத் தலைவன் பொருளீட்டச் செல்வதாகக் கூறுகிறான் தலைவி வருத்தமடைகிறாள் இருப்பினும் தலைவனின் சிறப்பினைத் தலைவி,

**தம் வயின்**
**இரந்தோர் மாற்றல் ஆற்றா**
**இல்லின் வாழ்க்கை வல்லாதோரே**

***(நற்றிணை பா. 84)***

என்னும் வரிகளில் பொருள் இல்லையென்று யாசகம் கேட்டு நிற்பவரின் பசியைப் போக்க பொருள் இல்லாத இல்லற வாழ்வை நெறிப்படி நடத்த முடியாத தலைவன் தான் தற்போது பொருள் தேடச் செல்ல வேண்டும் என நினைக்கிறார் என்றுதலைவனின் சிறப்பைத் தலைவி தன் தோழிக்குகூறுகிறாள். இங்கு தன் மனைவி வருந்தினாலும் பரவாயில்லை தான் பொருளீட்டச் செல்வதே அறம் என்று கருதும் தலைவனின் மனம் வெளிப்படுகிறது. ஏனெனில் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டி வந்தால் தான் தலைவன் தலைவி இருவரும் தங்களது பசியைப் போக்கிக் கொள்வதுடன் பிறர் பசியையும் போக்க முடியும். இதனை இல்லற வாழ்வின் சிறந்த அறங்களில் ஒன்றாக முன்னோர் கருதியுள்ளனர். விருந்தினர்களின் வருகையை நற்றிணை **அல்லில் ஆயினும்**

**விருந்து வரின் உவக்கும்** இரவு நேரத்தில் விருந்தினர்கள் வருவார்கள் எனில் அந்நிலையிலும் மகிழ்ந்தவர் தமிழர் என்கிறது. இதனை வள்ளுவர்,

> ***ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல அப்பசியை***
> ***மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள். 225)***

என்னும் குறளில் தன் பசியை அடக்கும் ஆற்றல் துறவிகளிடம் உண்டு. இது சிறப்புடையது எனினும் அதனை விட பிறர் பசியைப் போக்குவரின் ஆற்றல் சிறந்தது என்கிறார்.

பிறர் பசியைப் போக்க இயலாத இல்வாழ்க்கையை வாழ நினையாதவர்கள்நம் முன்னோர்கள். தன் பசி மட்டுமில்லாது பிறர் பசியையும் போக்கி இல்லற வாழ்வை மேற்கொள்வதே சிறந்த அறம்.

**ஊடல் தீர்க்கும் விருந்தோம்பல்**

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி இடையே ஏற்படும் ஊடல்களைத் தவிர்ப்பவர்களாகப் பாங்கன் தோழி போன்றோர் இருப்பினும் வீட்டிக்கு வரும் விருந்தினர்களும் ஊடல் தீர்ப்பவர்களாக இருந்துள்ளனர். ஊடல் நிகழும் சமயத்தில் தலைவி வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் ஊடலைமறைத்து வந்தவர்கள் மகிழும் வண்ணம் விருந்தளிப்பாள். அச்சமயத்தில் தலைவனும் பேசுவான். இதன் மூலம் தலைவி தனது ஊடலைத் தவிர்ப்பாள். இதனை நற்றிணை

குழையணிந்த காதினையுடைய தலைவி தனது மோதிரம் அணிந்த விரல்கள் சிவக்கும் வண்ணமாக சமைக்க முயல்கிறாள். அவ்வாறு சமைக்கும் போது எழுந்த புகை அவளது கண்களில் பட்டு சிவந்த கண்களை உடையவளாகவும். அத்துடன் சேர்த்து வியர்வை வடிகிறதுஅதனை தான் அணிந்திருக்கக் கூடிய துணியால் துடைத்துக் கொண்டு சமையலை வேகமாக சமைத்துக் கொண்டு நம் மீது சிறிது கோபம் இருந்தாலும் அவ்வப்போது சமைக்கும் தருவாயில் சிறிது பேசி தலைவி தன் ஊடலைத் தவிர்த்து விடுவாள். இதற்குப் பிறகு எங்களுக்கு இதுபோன்ற விருந்தினர் வருவார்களாக. இவ்வாறு வந்தால் தலைவி என்னிடம் ஊடல் கொள்ள மாட்டாள். விருந்தினர் வருகின்ற சமயத்தில் தலைவியின் சிறு பல்வரிசை தெரிய புன்னகை ததும்பும் முகத்தைக்

காணலாம். இது போன்று எப்போதும் நிகழட்டும் என தனக்குத் தானே தலைவன் கூறிக் கொள்கிறான்.

***கொடுங்குழை பெய்த செழுஞ்சேய் பேதை***
***சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப***
***வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்***
***புகையுண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்***
***பிறை நுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்***
***அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து***
***அட்டி லோளே அம்மா அரிவை***
***எமக்கே வருகதில் விருந்தே, சிவப்பாள் அன்று***
***சிறியமுள் எயிறு தோன்ற***
***முறுவல் கொண்ட முகம்காண் கம்மே***

***(நற்றிணை பா. 120)***

இங்கு செஞ் சேய் வல்லிதின் வகைஇ அம்மா அரிவை சிவப்பாள் அன்றுஎன்னும் நான்கு சொற்கள் தலைவியின் சிறப்பு எத்தகையது என்பதை உணர்த்துகிறது. செழும் சேய் என்பது தலைவி செல்வ செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெண் என்பதையும். வல்லிதின் வகைஇ எனும் சொல் பெண் சமைப்பது வலிமை குறைவான தன்மையுடைய வாழைத்தண்டு என்றாலும் அதனைப் ஒடிப்பதற்கே அவள் வலிதாகமுயல வேண்டியுள்ளது என்பதன் வாயிலாக அவ்வளவு மெல்லியவளாக தலைவி காணப்படுகிறாள் என்பதை உணர்த்துகிறார். அம்மா அரிவை என்னும் சொல் தலைவி மிகுந்த அழகுடையவள் என்பதை உணர்த்துகிறது. சிவப்பாள் அன்று என்னும் சொல் முகம் சிவக்க மாட்டாள் விருந்தினர்களிடம் கோபம் கொள்ள மாட்டாள். விருந்தினர் இல்லத்தில் இருப்பதால் தலைவனிடமும் கோபம் கொள்ள மாட்டாள் என்பதை உணர்த்துகிறது. அத்துடன் தலைவி செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பசியென்று வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாது உணவு கொடுக்க வேண்டும் என்ற அறத்தைக் கடைபிடிக்கும் பெண்ணாக வளர்க்கப்பட்டுள்ளாள் என்பதும் புலனாகிறது. ஒரு சிலர் கோபம்கொள்ளும் போது அவர்களது முகம் இயல்பாகவே சிவக்கும். விருந்தோம்பலின் சிறப்பினைக்கூறும் வள்ளுவர் விருந்தோம்பல் என்னும் ஓர்அதிகாரத்தை இயற்றியுள்ளார். இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை தன்

முக மலர்ச்சியுடன் வரவேற்று விருந்து உபசரிப்பவர்களின் இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்து குடியிருப்பாள். இதனை வள்ளுவர்

***அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து***
***நல்விருந்து ஓம்புவான் இல்(குறள். 84)***

என்கிறார்.திருமகள் என்று குறிப்பிட்டதன் நோக்கம் செல்வம் எப்போதும் குறைவில்லாது இருக்கும் என்பதை உணர்த்தவே. பிறருக்குத் தன்னிடம் உள்ள பொருளைச் செலவழிக்கும் போது பொருள் குறையத்தானே வேண்டும். ஆனால் வள்ளுவர் செழிக்கும் என்கிறாரே என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு நவில்வதன் நோக்கம் ஒருவன் தன்னிடம் உள்ள செல்வத்தை எவ்வழியில் பயன்படுத்துகிறானோ அதனைப் பொறுத்து ஒருவனிடம் செல்வம் சேரும் அல்லது செல்வம் அவனை விட்டு விலகும். பிறருக்கு கொடுத்து பிறர் மனத்தை மகிழ்விப்பதன் மூலம் செல்வம் செலவழிக்கப்படுகிறது. இதன் மூலம் பெறுபவரும் மனம் மகிழ்கிறார் தருபவரும் அகமகிழ்கிறார். எனவே பிறருக்கு பயன் தரும் வகையில் பணம் செலவழிக்கப்படுமாயின் செல்வம் சேரும் என்பது வள்ளுளர் வாக்கால் வெளிப்படுகிறது.

***மன்னர்களின் விருந்தோம்பல்***

வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இல்லையென்று கூறாது உணவு கொடுத்துள்ளனர் நம்முடைய முன்னோர்கள். சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன் விருந்தினர்களின் பசியைப் போக்கும் குணம் உடையவராக சிறுகுடி கிழான் பண்ணன் திகழ்ந்துள்ளான் என்பதை

***சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்***
***இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்***
***மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்***
***பசிப்பிணி மருத்துவம் இல்லம்***
***அணிந்தோ சேய்தோ கூறுமின் (புறம்,173)***

என்னும் வரிகளில் பசியும் அத்துடன் நெடுந்தூரம் நடந்து வந்த வலியும் வாட்டுகிறது இதனையுணர்ந்து பசியைப் போக்கும் அப்பண்ணனின் இல்லம் துரமா அல்லது பக்கமா என்று கூறுங்கள். அவர் இவ்வுலகத்தில் நெடுங்காலம் வாழட்டும் என்கிறார். பண்ணன் இருக்கும் இடத்திற்குச்

சென்றாலே பண்ணன் வறியவர்களின் நிலையறிந்து உதவுவான் என்பதும் இவர் பசியுடன் வருபவர்களுக்கு இல்லையென்று உணவு கொடுக்கும் வள்ளல் தன்மையுடையவராகத் திகழ்ந்துள்ளான் என்பதும் வெளிப்படுகிறது.

மன்னர்கள் தன்னை நாடிவரும் விருந்தினர்களுக்கு இல்லையென்று கூறுதல் அறமற்ற செயல் என்று கருதியுள்ளனர். அதனை மதுரைக்கள்ளிக்கடையத்தன் வெண்ணாகனார் என்னும் புலவர்

***நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்***
***இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்***
***கருங்கோட்டுச் சீரியாழ் பணையம் இது கொண்டு***
***ஈவதுஇலாளன் என்னாது நீயும்***
***வள்ளி மருங்குல் வயங்கு இழை அணியக்***
***கள்ளுடைக் கலத்தேம் யாம் மகிழ் தூங்கச்***
***சென்று வாய் சிவந்து மேல் வருக*** ***(புறம்.316 )***

என்னும் வரிகளில் பாணம் கூறுகிறான் வந்தவர்களிடம் நான் அவருடைய பாணன் நேற்று வந்த விருந்தினருக்குக் கொடுக்க ஏதுமில்லை ஆதலால் தன்னுடைய பழைய வாளினைப்பனணயம் வைத்தான். இன்று வெற்றி களிப்பில் இருக்கிறான். தருவானோ தரமாட்டோனோஎன்று கருதாது நீயும் நின்னுடைய விறலியும் அவரிடம் செல்லுங்கள். விறலிக்கு அணியும் நமக்கு சோறும் கள்ளும் தருவான். நும்வாய் சிவந்து வருக என்று கூறுகிறார். அரசர் தன்னை நாடிவரும் விருந்தினர்களுக்காகத் தன்னிடம் உள்ள பழமையான பொருட்களைப்பனணயம் வைத்து விருந்தினர்களை உபசரிப்பவராகத் திழ்ந்துள்ளனர். ஏனெனில் நம் முன்னோர்கள் விருந்து உபசரித்தலை எத்தகைய உயர்வானதாகக் கருதியுள்ளனர் என்பதும் விருந்தினர்களுக்கு விருந்தளிப்பதை விட வேறு சிறந்த அறம் வேறு ஒன்றும் கிடையாது என்றும் கருதியுள்ளனர் என்பது புலனாகிறது.

ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் விருந்தோம்பல் பண்பினை

***மகிழ்தர மரபின் மட்டே அன்றியும்***
***அமிழ்தன மரபின் ஊதுவை அடிசில்***

***வெள்ளி வெண்கலத்து ஊட்டல் அன்றி***
***.........***
***பகடுதரு செந்நெல் போரோடு நல்கி***

***(புறம்.390 )***

என்னும் வரிகளில் அதியமான் வெள்ளி வெண்கலத்து உணவு ஊட்டினான் அத்துடன் ஊருக்கு முன்பாக பெதினியில் இருந்த என் சுற்றத்தாரின் பசி தீரும் பொருட்டுப் போரோடு செந்நெல்லும் அளித்தான். அல்லது இவையெல்லாம் பெறுக என்று கூறினான் என்கிறார். உயர் மதிப்புடைய பொருட்களில் ஒன்றாகக் கருதும் வெள்ளிப் பாத்திரத்தில் விருந்தினருக்கு அதியமான் விருந்து உபசரித்தார் எனில் விருந்தினர்களை அதியமானும்தமிழ் மக்களும் உயர்வுடையவர்களாகக் கருதியுள்ளனர் என்பது புலனாகிறது.

கரிகால் பெருவளத்தான் விருந்து உபசரிக்கும் பண்பினைப் பொருநராற்றுப்படையில் பொருநன் மகிழ்ச்சியுடன் கூறுகிறான். உரிய நேரத்தில் எங்களை அழைத்து சூடாகச் செய்த இறைச்சித் துண்டுகளை எடுத்து பலமுறை உண்ணுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார். நாங்களும் அதனைப் பெற்று சூடு தாங்க முடியாமல் வாயின் வலப்புறமும் இடப்புறமுமாக மாறி மாறி அதனைத் தின்று இவை போதும் என்று சொல்லும் தருவாயில் பணியாரங்களைக் கொண்டு உண்ணச் செய்தான் என்பதை

***பதன் அறிந்து***
***துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின்***
***பராஅரை வேலை பருகு எனத் தண்டிக்***
***காழின் கட்ட கோழ் ஊன் கொழுங் குறை***
***ஊழின் ஊழின் வாய் வெய்து ஒற்றி***
***அவை அவை முனிவகும் எனினே சுவைய***
***வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ***

***(பொருநராற்றுப்படை)***

என்ற வரிகளில் கரிகால் பெருவளத்தான் விருந்து உபசரிக்கும் பண்பினைப் பொருநன் கூறுகிறான். மன்னர்கள் பசியென்று வருபவருக்கு

அவர்களின் தேவையை அறிந்து உணவு கொடுக்கும் பண்பினையுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பதை விட பொருளைக் கொடுப்பவரிடம் நடந்து கொள்ளும் விதமும் சிறப்பாக இருக்க வேண்டும். பொருள் கொடுப்பவர் உள்ளக்கனிவுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அது அவர்கள் பற்றிய எண்ணத்தை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும்.

**வறுமையிலும் செம்மை**

வறுமை என்பது ஒரு குறியீடு மட்டுமே.செம்மையான வாழ்வு வாழ்வதற்கு வறுமை தடையில்லை. வறுமையிலும் செம்மையாக வாழ்வதே சிறப்பு. ஏனெனில் வறுமையில் பிறந்த நிறைய மனிதர்கள் வெற்றி பெற்றுள்ளனர். வறுமை எதற்கும் எதனைச் சாதிப்பதற்கும் தடையில்லை. வறுமையைக் காரணம் கூறுபவர்கள் சாக்குப் போக்கு சொல்பவர்கள் என்பதே நிதர்சனமான உண்மை. இவர்கள் தன் இயலாமையை வெளிப்படுத்துபவர்களாகவும் உள்ளனர். சங்ககாலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் வறுமை நிலையிலும்தன் இல்லற வாழ்வைச் செம்மையாக வழிநடத்திச் சென்றுள்ளனர். வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இல்லையென்று சொல்லாது பொருள்களை நல்கியுள்ளனர். அதனை

**வரகும் திணையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்**
**குரல் உணங்கு விதைத்திணை உரல் வாய்ப்பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோவிடலோ**

***(புறம்.333 )***

என்னும் வரிகளில் முயல்கள் துள்ளிக் குதித்து விளையாடும் அவன் ஊருக்குச் செல்லுங்கள். உண்க எனச் சொல்லிஉபசரிக்கும் நிலையில் அவர்கள் இல்லாத போதும் அங்கு தங்கிச் செல்லலாம். அவ்வாறு சென்றால் உனக்கு நன்மை ஏற்படும். வரகும் திணையும் உணவும் இல்லையென்று வந்தவர்கள் உண்டு தீர்த்தனர். புதியதும் வரவில்லை.

எனினும் கதிரைக் கொய்து உலர்த்தி உரலில் போட்டு குத்தி உங்களுக்கு உணவு தருவானேயன்றி. ஒருபோதும் என் தலைவி இல்லையென்று கூறி உங்களைப்பசியுடன் செல்ல விடமாட்டாள் என்கிறார்.வள்ளுவர் உணவினை விட உணவு பரிமாறுபவரின் பண்பு நலனே முக்கியம் என்பதை

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

***(குறள்.90)***

அனிச்சப் பூவானது முகர்ந்தவுடன் வாடிவிடும் தன்மையுடையது. அதனைப் போல இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியோடு நோக்கும்போது அவர்களது முகம் மகிழ்ச்சியாக இருக்கும் என்கிறார். விருந்தினர் என்பவர் புதியவர் என்பதால் இவர்கள் வறுமையின் காரணமாக பொருளின்றிப் பிழைப்பு கருதி வருபவர்கள் அல்ல. இயல்பாகவே பிறருக்குப் பணி செய்யும் எண்ணத்துடனும் நோக்குடனும் வருபவர்களே விருந்தினர் எனலாம். இத்தகைய சிறப்பு மிக்க விருந்தினர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். முகமலர்ச்சியில்லாது விருந்து உபசரித்தல் கூடாது. விருந்தோம்பலின்போது பரிமாறப்படும் உணவினை விட உணவு பரிமாறுபவரின் பண்பு நலனே முக்கியம்.

தன் வீட்டில் சிறிதளவு உணவுப் பொருள் இருக்க நிறைய விருந்தினர்கள் வந்துள்ளனர் என்று தலைவி பதற்றம் அடையாது. தன்னிடமுள்ள பொருளைக் கொண்டு சமைத்த உணவினை அனைவரையும் அமரச் செய்து கொடுத்து மகிழ்வாள் என்பதை உறையூர் முது கடத்தனார்

**கல்லா இடையன் போலக் குறிப்பின்**
**இல்லது படைக்கவும் வல்லன் உள்ளது**
**தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்**
**நீள் நெடும் பந்தர் ஊண் முறை ஊட்டும்(புறம். *331* )**

என்கிறார்.பண்டைய காலம் தொட்டு தமிழர்கள் விருந்து உபசரிப்பதில் தன்னலமில்லாது பொது நலம் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இல்லத்திற்கு வருபவர்களுக்கு இல்லையென்று கூறுதல் அறமாகாது.

தன்னிடம் உள்ளப் பொருட்களைக் கொண்டு எத்தனை பேர் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்துள்ளனர் அதுமட்டுமின்றி இருப்பதைக் கொண்டு சிறந்த நிர்வாகமும் செய்துள்ளனர். இவ்வாறு தலைவனுடன் சேர்த்து இல்வாழ்வில் துணை நிற்பவள் தலைவி என்பதாலேயே வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்கிறார். ஏனெனில் பசியும் பட்டினியும் இல்லாது விளங்கும் சமுதாயத்தில் அன்பும் பண்பும் பாசமும் செழித்தொங்கும்.

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர். கற்பியலில் இல்லத்தலைவியின் பண்புகளாக

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பவும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**

***(தொல் நூற்பா .1098)***

என்னும் நூற்பாவில் தலைவனிடம் கொண்ட காதல் நல்லொழுக்கம் பொறுமை விருந்தினரை பேணிக்காக்கும் தன்மை சுற்றத்தைக் காத்தல் முதலிய பண்பு நலன்கள் குடும்ப தலைவிக்குரியது என்கிறார்.
நாட் பால் ஒழுக்கம் என்பது தன் குலத்தின் பொறுமையை உணர்ந்து ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தல். மெல்லியற் பொறையும் என்பது பண்பட்ட உள்ளத்தை உடையவளாய் எத்தகைய சூழல் ஏற்படினும் தன் நிலையை உணர்ந்து பிறரிடம் கோபம் கொள்ளாது இருத்தல். விருந்து புறந்தருதல் என்பது தன் நிலையினை உணர்ந்து இயன்றவரை விருந்தினர்களுக்கு விருந்து கொடுத்து அவர்களின் மனதை மகிழ்வித்தல். தொல்காப்பியர் பெண்களுக்குரிய இன்றியமையாப் பண்பு நலன்களில் ஒன்றாக விருந்தோம்பலைக் கூறுகிறார். இதனைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு. உணவின் தேவையை நன்கு உணர்ந்தவர்களாக நம் முன்னோர்கள் இருந்துள்ளனர். சங்ககாலத்தில் மக்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உண்ணும் உணவு முறையும் மாறுபட்டுள்ளது. இவர்கள் உணவு தனக்கு மட்டும் வேண்டும் என்ற

சுயநலமுடையவர்களாக இல்லாது. வறுமையில் வாடிய ஏழை மக்களுக்கும் கொடுத்து அவர்களின் பசியினைப் போக்கி அவர்களையும் மகிழச் செய்து விருந்து கொடுத்ததன் மூலம் தானும் மகிழ்ந்து பொதுநலம் உடையவர்களாக தமிழர்கள் திகழ்ந்துள்ளனர். விருந்தினருக்கு உணவளிக்கும் அறத்தை நம்முன்னோர்கள் பெரிதும் போற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

MAHIZH PATHIPAGAM

# பண்டைத்தமிழர்கள் கோவில்க்ளுக்கு வழங்கிய கால்நடை நிவந்தங்கள்

## *ANIMAL SACRIFICES GIVEN TO TEMPLES BY ANCIENT TAMILS*

***முனைவர். மு. கலா***
*இணைப்பேராசிரியர்*
*முதுகலை வரலாறு மற்றும் ஆராய்ச்சித் துறை*
*அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*கும்பகோணம் - 612 001.*
*தஞ்சாவூர் மாவட்டம்.*
*மின்னஞ்சல்: muthusamy.kala@gmail.com*

***முனைவர்.ரா. தாமரைக்கண்ணன்***
*உதவிப்பேராசிரியர்*
*நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*மதுரை-22*
*மின்னஞ்சல்: r1thamarai@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழகத்தை ஆட்சி செய்த நமது முன்னோர்களான சேரர், சோழர் , பாண்டியர் , பல்லவர் என பல்வேறு வம்சத்தினர் ஆண்டு வந்துள்ளனர் . இவர்கள் அனைவருக்கும் ஒரு பொதுவான ஒற்றுமை உண்டு என்றால் அது கோவில் கட்டுவது என்று கூறலாம் .அவ்வாறு கட்டப்பட்ட கோவில்களை பராமரிப்பதற்கும், பூசைகளை செய்வதற்கும் மன்னர்கள் ஆட்களை நியமிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர் . நியமிக்கப்பட்ட நபர்களின் அன்றாட தேவைக்கும் கோவில் செலவினங்களை மேற்கொள்வதற்கும் மன்னர்களாலும் அவர்களின் சார்பாக பொதுமக்களும் நிவந்தங்களை வழிபாடு தோன்றிய காலம் முதலாகவே அளித்து வருகின்றனர் . அத்தகைய நிவந்தங்களில் நிலம் , கால்நடைகள்,பொருட்கள் , காசு , பொன் , வெள்ளி என்று பல்வேறுவிதமானவற்றை வழங்கி வந்துள்ளனர் . இவற்றில் குறிப்பாக கால்நடைகள் நிவந்தம் வழங்குவதில் ஏதேனும் வரைமுறைகள் உண்டா என்ற நோக்கில் ஆய்வு செய்ய முற்படுகிறது இக்கட்டுரை.*

திறவுச் சொற்கள்

தமிழர், வழிபாடு, கோவில் வழிபாடு, காணிக்கைகள், கால்நடை நிவந்தங்கள்

***Abstract***

*Our ancestors, the Cheras, the Cholas, the Pandyas and the Pallavas ruled Tamil Nadu. If there is one thing common to all of them, it is the construction of a temple. It was customary for the kings to appoint men to maintain the temples built and to perform the poojas. From the beginning of the time of worship, the kings and the people on their behalf have been providing the Nivantas to meet the daily needs of the appointed persons and to meet the expenses of the temple. They were given land, cattle, goods, money, gold, silver and many other things. This article specifically seeks to examine whether there are any rules for the provision of livestock leave.*

***Keywords***

***Tamils, Worship, Temple Worship, Offerings, Animal Sacrifices***

**நிவந்தம்**

நிவந்தம் என்பது நிபந்தனை என்றும் நிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தம் என்றும் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது . மேலும் மணி மேகலை என்னும் காப்பியம் கடவுளை வழிபடும் இடம் என்றும் கூறுகிறது . பொதுவாக நிவந்தங்கள் ஒருவர் தீராத நோய் காரணமாக அவை நீங்கி நலம்பெறும் பொருட்டு வழங்கக்கூடியதாகவும் , ஒருவர் இறந்த பிறகு அவரின் நற்கதி அதாவது அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று கருதி குடும்பத்தார்கள் அல்லது உறவினர்கள் வழங்கும் நிபந்தனையுடன் கூடிய பொருட்கள் அல்லது கால்நடைகளே நிவந்தமாகும் . இந்த நிவந்தமானது கோவில்களின் உண்ணாழிகைகளில் (கருவறை) என்றும் அணையாத விளக்காக தொடர்ந்து எரியும் பொருட்டு வழங்கிய தானத்தைக் குறிக்கிறது .

**இருளில் மூழ்கா உண்ணாழிகை**

பொதுவாக நமது முன்னோர்கள் கோவில்களைக் கட்டிய பிறகு அதனை தொடர்ந்து வழிபாட்டிற்கு உட்படுத்தும் நடவடிக்கையாக கோவில் பராமரிப்பிற்கு என்று ஆட்களை நியமனம் செய்வர்.

அதன் பிறகு அவர்களைக் கொண்டு கோவிலில் விளக்கேற்ற பணிப்பர். அவ்விளக்கினைத் தொடர்ந்து எரிய வைக்க எண்ணெய் தேவைப்படும் என்பதால் மன்னர்கள் அவ்வேலையில் ஈடுபடுவோருக்கு நெய் வழங்க கால் நடைகளையும், நிலங்களையும் , காசு , பொருள் போன்ற வற்றையும் நிவந்தம் வழங்கினர் . இவ்வாறு வழங்கப்பட்ட நிவந்தத்தின் மூலமாக கிடைக்கும் நெய்யினை வைத்து நாள் தோறும் உண்ணாழிகையை (கருவறையை) இருளில் மூழ்க விடாமல் பார்த்துக்கொண்டனர். அதற்கு உதவிய விளக்கினை "நந்தா விளக்கு"என்பர் .

**நந்தா விளக்கு**

நந்தா விளக்கு என்பது இறைவன் துயிலும் அறையின் மேற்கூரையிலிருந்து சங்கிலி அமைப்புடன் கீழே தொங்கும் ஒரு வகையான விளக்காகும் . இவ்விளக்கின் மேற்பகுதியில் ஒரு கலயம் போன்ற அமைப்பு இருக்கும். அதில் நெய் அல்லது எண்ணெய் ஊற்றி வைப்பர். அக்கலயத்திலிருந்து சிறு துவாரம் வழியாக விளக்கில் திரி இருக்கும் பள்ளமான பகுதிக்கு எண்ணெயானது சிறு சிறு துளியாக விழுந்து கொண்டே இருக்கும். இதன்காரணமாக எண்ணெய் தீர்ந்து விடாமல் அணையாமல் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். இவ்விளக்கிற்கு அணையா விளக்கு, தூண்டா விளக்கு, நுந்தா விளக்கு , நந்தா விளக்கு , நொந்தா விளக்கு, திரு நொந்தா விளக்கு, திரு மணி விளக்கு , மணி விளக்கு , தூங்கா மணி விளக்கு, தீண்டா விளக்கு போன்ற பெயர்கள் வரலாற்றில் வழங்கிவந்துள்ளது . மேலும் இவ்விளக்கு பற்றி அகநானூறு, பரிபாடல், பட்டினப்பாலை, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற இலக்கியங்களிலும் தமிழகத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளிலும் பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன.

**நெய் தேவைக்காக வழங்கப்பட்ட கால்நடை நிவந்த வரைமுறைகள்**

*கோவிலில் விளக்கேற்ற கால்நடை வளர்ப் போரிடம் அல்லது பொதுமக்களிடம் ஒரு நாள் விளக்கு எரிக்க தேவைப்படும் நெய்யின் அளவிற்கு ஏற்ப ஆடுகளையும் , பசுக்களையும் நிவந்தம் கொடுத்து நெய்யினை பெற்றுள்ளனர் . நிவந்தம் கொடுக்கப்பட்ட ஆடுகள், பசுக்களின் எண்ணிக்கையை பொறுத்த மட்டில் நெய்யின் தேவை அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வரலாற்று ஆய்வாளர்களிடையே ஒரு மித்த கருத்துக்கள் நிழவவில்லை . சிலர் ஆடுகள் 99-க்கு குறைவாகவே நிவந்தம் கொடுக்கப்படும் என்றும் என்ற எண்ணிக்கைகளிலே வழங்கி வந்துள்ளனர். ஆனால் ஒரு நபருக்கு 10 ஆடுகள் , 25 ஆடுகள் , 50 ஆடுகள் , 25 பசுக்கள் என்ற எண்ணிக்கைகளிலே வழங்கி வந்துள்ளனர்.இந்த எண்ணிக்கையானது சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசன் காலத்திற்கு பின்பே பின்பற்றி வந்துள்ளனர் என்பதற்கான கல்வெட்டுச் சான்றும் 100 ஆடுகளுக்கு மேலும் நிவந்தங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன.அவற்றை ஒவ்வொன்றாக காண்போம் .*

1. *ஸ்ரீ.. கோமாறஞ்சடைய...*
2. *இருபத்தாறு இவ்வாண்டு வெண்...*
3. *க்குறண்டித் திருக்காட்டாம்பள் ( ளி ) .*
4. *திங்கட் பதினாழி நெய்க்கு ...*
5. *நிலக்குடி நாட்டுக் குண்ணூர்ச்சா ...*
6. *ங்குணத்தான் அட்டின ஆடு நூறு ...*

*மேற்கண்ட கல்வெட்டு வாசகமானது பொது ஆண்டு எட்டாம் நூற்றாண்டில் முற்கால பாண்டிய மன்னன் "மாறஞ்சடையன் என்ற பராந்தக நெடுஞ்சடையனின்" 26 வது ஆட்சி ஆண்டில் குரண்டி என்ற ஊரில் இருந்த சமணப் பள்ளிக்கு ஒவ்வொரு திங்களும் பதினாழி நெய் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கரு நிலக்குடி நாட்டு குண்ணூரைச் சேர்ந்த "சாத்தங் குணத்தான்" என்பவர் நூறு ஆடுகளை நிவந்தம் கொடுத்த செய்தி இடம்பெறுகிறது . இதன்மூலம் எட்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் 99 ஆடுகளுக்கு குறைவான எண்ணிக்கையில்தான் நிவந்தம் கொடுப்பார்கள் என்ற கூற்று தவறானது என்பது தெளிவாகிறது.*

1. ஸ்ரீசோழன்தலை கொண்ட கோவீரபாண்டியற்கு யாண்டு பதின்மூன்று இ
2. ( ப ) ரித்திக்குடி நாட்டு தேவதானம் திருச்சுழி ( ய ) ல் பள்ளிமடை-
3. ச் சுந்தரபாண்டிய... ரத்து தேவர்க்கு பொழியூர் நாட்டு சுடுவூர் பொழியூர் நாட்
4. மூவேந்த வேளானாயின அரங்கம் பூதி ைவத்த திருநொந்தாவிளக்கு இரண்டு இவற் றினுக்கு அ-
5. டுத்த ஆடு நூறு . இந் நூற் ( றிற் ) கழகன் நாரணன் கொண்ட ஆடு ( உ ) யரு நெய் ஆழாக்கு மேற்படியான் கொற்றஞ் சா-
6. த்தன் கொண்ட ஆடு உயரு நெய் ஆழாக்கு மேற்படி கிழவ னப்பி கொண்ட ஆடு ய உ அரை மேற்படி விர-
7. அருமானி கொண்ட ஆடு ய உ அரை நொய் இரு செவிட்டரை

இக்கல்வெட்டு தற்போது விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பள்ளிமடம் என்ற ஊரில் உள்ள காளைநாதர் கோவிலில் காணப்படுகிறது .

இக்கல்வெட்டில் திருச்சுழியல் பள்ளிமடை சுந்தரபாண்டிய ஈஸ்வரத்திற்கு திருநொந்தா விளக்கு எரிக்க பருத்திக்குடி நாட்டு இடையர்களுக்கு நூறுக்கும் மேற்பட்ட ஆடுகள் நிவந்தமாக கொடுத்த செய்தியைத் தருகிறது . மேலும் இக்கல்வெட்டானது பொது ஆண்டு 955 ல் முற்கால பாண்டிய மன்னன் "சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின்" 9 வது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட தேவதானமாகும். இக்கல்வெட்டும் பள்ளிமடம் காளை நாதர் கோவிலில் காணப்படுகிறது . மேலும் இசோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் 13 வது ஆட்சி கல்வெட்டும் இங்கு காணப்படுகிறது . அவை

1. ஸ்வஸ்திஸ்ரீ சோழன்றலைகொண்ட கோவீரபாண்டியற்கு யாண்டு ( ச) நான்கு இதனெதிர் அஞ்சு
2. இவ்வாண்டு பரித்திக்குடிநாட்டுத் திருச்சுழியல் பள்ளி மடை சுந்தரபாண்டி ரத்து தேவர்க்கு
3. திருநொந்தாவிளக்கினுக்கு ஆயன் நாரணன் ந

4. க்கன் வழி நெயட்டுவதாக அடுத்த ( வெட்டி ) குடி .... தன் கொண்ட ஆடு பத்து மேற்படி சுத்தன்
5. அப்பிக்கு அடுத்த ஆடு பந்து மேற்படி கோவன் மாதேவன் கொண்ட ஆடு பத்து மேற்படி படாரன் கீரன்
6. கொண்ட ஆடு பத்து மேற்படி அரையன் றொண்டன் கொண்ட ஆடு பத்து மேற்படி நக்கஞ் சாத்தன் கொண்ட ஆடு ப-
7. த்து மேற்படி படைத்தலைவன் நக்கன் சாத்தன் கொடை ஆடு இருபத்தைஞ்சு மேற்படி படைத் தலைவன் வலியான் சாத்தன் கொண்ட,
8. ஆடு பதினஞ்சு எற்றி செம்மரி வெள்ளாடு நூறு மேற்படியான் கமி யாதனூரான் கொண்ட
9. ஆடு பத்து மேற்படியான் நக்கன யலன் கொண்ட ஆடு பத்து மேற்படி இத்தேவர் வெட்டி
10. க்குடி தனுவாச்சன் அப்பி கொண்ட ஆடு பத்து மேற்படி தொங்கன் நிலன் கொண்ட ஆடு ய

மேற்கண்ட ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்து கல்வெட்டு வாசகமானது பொது ஆண்டு 959 ல் கொடுக்கப்பட்டகால்நடை நிவந்தமாகும். இதில் பருத்திக்குடி நாட்டு திருச்சுழியல் பள்ளிப்படையான சுந்தரபாண்டிய ஈஸ்வரத் தேவருக்கு திருநந்தா விளக்கு இரண்டு எரிக்க நூறு ஆடுகள் தானமாக தந்த செய்தியும் அதனை பொழியூர் நாட்டு சூடுவூர் மூவேந்த வேளானாயின் அரங்கம் பூதி என்பவர் வழங்கிய செய்தியும் அத்தானத்தைப் பெற்ற இடையர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. மேற்கண்ட கல்வெட்டுகள் மூலம் ஆடுகள் இத்தனைதான் வழங்க வேண்டும் என்ற வரைமுறை இல்லாமல் வழங்கி வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் கால்நடைகள் நிவந்தம் வழங்க வேண்டும் என்று விதி வகுத்த முதலாம் இராசராச சோழனும் நூறுக்கு மேற்பட்ட ஆடுகளை வழங்கிய செய்தி அடங்கிய கல்வெட்டு ஒன்றும் திருச்சுழி அருகே கண்டறியப்பட்டுள்ளது . அக்கல்வெட்டில் திரு நொந்தா விளக்கு ஒன்று எரிக்க ஆடுகள் தானம் வழங்கிய செய்தி இடம் பெற்றுள்ளது. திருநொந்தா விளக்கு எரிக்க குறிப்பிட்ட

எண்ணிக்கையில்தான் வழங்கவேண்டும் என்ற விதியை முதலாம் இராசராசன் தனது ஆட்சியின் பிற்பகுதியில்தான் செய்திருக்க வேண்டும் . அத்தகைய செய்கைக்கு முன்பாக ஒரு ஆண்டு முழுவதும் விளக்கு எரிக்க அதாவது விளக்கு எரிவதற்கு தேவையான நெய் உற்பத்தி செய்ய எத்தனை ஆடுகள் தேவை என்பதை விவசாயிகளிடம் கேட்க அவர்கள் கூறியது 90 முதல் 96 ஆடுகள் தேவை என்று கூறியதையே அமல்ப்படுத்தினார்.

**சாவா மூவா பேராடு**

கோவில்களில் அணையா விளக்கு எரிக்க ஏற்படுத்திய திட்டமே "சாவா மூவா பேராடு"ஆகும் . இதற்கு கொடுக்கப்பட்ட ஆடுகள் சாவினாலோ மூப்பினாலோ எண்ணிக்கை குறையக் கூடாது என்பது பொருளாகும்.ஒரு முழு நந்தா விளக்கு எரிக்க 90 அல்லது 96 ஆடுகள் அல்லது 32 பசுக்கள் மற்றும் ஒரு காளை வழங்கப்படும் . அரை நந்தா விளக்கு எரிக்க 45 அல்லது 48 ஆடுகள் வழங்கப்பட்டு வந்துள்ளன என்ற செய்தியும் சாவா மூவா பேராடு என்பது பற்றிய செய்தியும் கீழ்வரும் கல்வெட்டில் இடம் பெறுகிறது .

ஸ்வஸ்திஸ்ரீ கச்சியுங் தஞ்சையுங் கொண்ட ஸ்ரீ கன்னர தேவர்க்கு யாண்டு இருபத்தேழாவது பல்குன்றக் கோட்டத்து தரையூர் நாட்டு மாம்பா[க்க]த்து கோதண்ட மன்றாடி திருவோத்தூர் மஹாதேவர்க்கு பகல் விளக்குக்கு வைத்த சாவா மூவா பேர் ஆடு

அஞ்பது

இக்கல் வெட்டு இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் 27 ம் ஆட்சி ஆண்டில் திருவோத்தூர் மகாதேவருக்கு பகல் பொழுதில் விளக்கு எரிக்க மாம்பாக்கம் கோதண்ட மன்றாடி என்பவர் கொடுத்த 50 இளம் ஆடுகள் சவா மூவா பேராடு என்று குறிப்பிட்டுள்ளதில் இருந்து அரை நந்தாவிளக்கு எரிக்க ஆடுகள் வழங்கப்பட்ட செய்தியை நாம் அறியலாம் .

**முடிவுரை**

மேற்கண்ட வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் கோவில்களுக்கு நந்தா விளக்கு எரிக்க வழங்கப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு வரைமுறை வகுத்து வழங்கப்பட்டது என்றால் முதலாம் இராசராச சோழனின் காலத்தில் இருந்துதான் என்று கூற வேண்டும் . அதற்கு முன்பு எண்ணிக்கை யானது நெய் தேவையின் அடிப்படையிலேயே நிவந்தம் வழங்கியுள்ளனா என்பதும் மேற்கண்ட கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது .

**துணை நூற்பட்டியல்**


1. *South Indian Inscription , volume I , 142 .*
2. *.South Indian Inscription , volume III,137*
3. *சீதாராம் குரு மூர்த்தி, விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் , தொகுதி- ,தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை , 2008 , பக்கம் 81 , 89-90 ,93*
4. *மா.செந்தில் செல்வக்குமரன்,சொ . சந்திரவாணன் ,விருதுநகர் மாவட்ட வரலாறு ,தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ,சென்னை ,2001 ,பக்கம் . 26.*
5. *பொ.இராஜேந்திரன், சொ.சாந்தலிங்கம்,வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம் ,பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் மதுரை ,2014 ,பக்கம் . 52 ,145,147*
6. *தினமலர் ,திருவண்ணாமலை,கட்டுரை,ஜீன் 27 ,2019 .*
7. *மணிமேகலை ,உபதேச காண்டம் ,223*
8. *அகநானூறு,மணிமிடைப்பவளம் ,பாடல் - 266 .*
9. *பட்டினப்பாலை ,பாடல்.246-248 .*
10. *சீவகசிந்தாமணி : 12 : 187 .*
11. *தினகரன்,சாவா மூவா பேராடுகள் ,கட்டுரை ,அக்டோபர் 4 ,2010 .*